கல்கி

KALKI 20-3-1977 75 காசு





ப்ளீச் செய்யாமலே கருநிற மேனியை சிகப்பாக்கும் க்ரீம்



உலகு காணாப் புதுமை: நிறத்தைக் கரைக்காமலே (ப்ளீச் செய்யாமலே) கரு மேனியைச் சிகப்பாக்கும் சாதனம் எக்காலத்திலும் இருந்ததில்லை. சருமத்தைச் சிவப்பாக்க இதுநாள்வரை செய்த முயற்சிகள் எல்லாமே குருட்டு முயற்சிகள், முரட்டு முறைகள். ப்ளீச்சுகளின் சங்கதி உங்களுக்குத் தெரியும்: இருக்கும் நிறத்தையும் கரைத்து வெளிற வைத்து விடும். அடிக்கடி உபயோகிப்பதோ ஆபத்து: காரணம், சருமத்தையே பாதிக்கும் அவற்றின் கடுங்குணம்.

விடிவெள்ளி காட்டும் விஞ்ஞான சாதனையாம் ஃபேர் அண்ட் லவ்லி இரு வழிகளில் வேலை செய்கிறது:

1. உள்ளூர வேலை செய்யும் வைட்டமின் ஒன்று அதிலுள்ளது.

இந்தக் க்ரீமை இடும்போதே, இதிலுள்ள வைட்டமின் சருமத்தினுள் இறங்குகிறது. இழைத்துத் தடவும் போதே உணருவீர்கள் இதன் செயல்-வேகத்தை; பரவும் சருமக் கருமையினை மெல்லத் திசைதிருப்புகிறது இது. வேளாவேளை ஆறு வாரங்கள் உபயோகித்துவந்தால் மேனி வண்ணம் மாறக் காண்பீர். பிறரும் காண்பார்.

2. வெளிப்புறத்திலிருந்து பாது-காப்பதற்கு, சூரிய ஒளி படாதபடி தடுக்கும் சாதனம் அடங்கியுள்ளது.

நிறம் கருப்பதற்குக் காரணமான கதிரொளியை சருமத்தின் மீது படவிடாமல் தடுத்து விலக்கி, மேனியைக் காத்திடுகிறது ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு தந்து, மேலும் பல வகையில் சிறப்பூட்டும் க்ரீம் ஃபேர் அண்ட் லவ்லி.

ஒப்பனைக்கு அடிப்படையாக தினமும் ஒரு முறை இடத்தக்கது ஃபேர் அண்ட் லவ்லி; இரு முறை உபயோகித்தாலோ நிறைவான பலனுண்டு. வேளாவேளை உபயோகித்துவாருங்கள், மங்காத சிகப்பு நிறத் தங்க மேனி மனம்போல் உங்களுக்கே.


சிகப்பான மேனியழகுக்கு மென்மையான வழி- ஃபேர் அண்ட் லவ்லி

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் கிடைக்கும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லிண்டாஸ்-FALOV-6-140 TH (R)

இதோ! நீங்கள் துடிதுடிப்புடனும், ஊக்கத்துடனும் விளங்க சக்தியளிக்கும் 'எரிபொருள்'



பூஸ்ட்

மால்ட் சாக்லெட் மில்க் ட்ரிங்க்

ரயிலுக்கு எரிபொருள் தேவைப்படுவது போன்றே, உங்களுக்கும் நீங்கள் ஒவ்வொரு தினத்தையும் சுறுசுறுப்புடன் தொடங்கவும், நாள் முழுவதும், சீராக நல்ல வேகத்துடன் செயலாற்றவும், ஒரு சக்தியளிக்கும் 'எரிபொருள்' தேவை. இதற்கு, நீங்கள் தினமும் காலையில் பூஸ்ட் பருக வேண்டியது அவசியம். முக்கியமாக பள்ளி வேலையிலும், விளையாட்டிலும் அதிக சக்தியை செலவழிக்கும் உங்கள் குழந்தைகளுக்கு பூஸ்ட் அவசியம் அளியுங்கள்.

பூஸ்ட் ஒரு புதிய, மால்ட், சாக்லெட், பால் சேர்ந்துள்ள பானம்.

உடலுக்குத் தேவையான போஷாக்கினைப் பற்றி அனைத்தையும் அறிந்துள்ள 'ஹார்லிக்ஸ்' தயாரிப்பாளர்கள் அளிப்பது.

பூஸ்ட், முழு ஆடைப்பால், கோதுமை, பார்லி மால்ட், கோகோ மற்றும் இயற்கையான வைட்டமின்கள், கனிஜச் சத்துக்கள் முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

மற்ற எந்த சாக்லெட் பானத்தையும்விட பூஸ்ட்டில் அதிக அளவு பால் சேர்க்கப்பட்டுள்ளது.
பூஸ்ட்டில் உள்ள அதிக அளவு பால், உங்கள் குழந்தைகளுக்கு அதிக போஷாக்கினையும், அதிக அளவு புரதச்சத்துக்களையும் அளித்து, அவர்கள் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஸ்ட்டில் உள்ள அதிக அளவு பாலினை, பூஸ்ட் பானத்தை அருந்தும் போது நீங்களே உணரலாம்.

பூஸ்ட்டின் மால்ட், சாக்லெட் கலந்த தீஞ்சுவையை உங்கள் குடும்பத்தினர் அனைவரும் விரும்புவர்.

பூஸ்ட், உங்களுடைய ஒவ்வொரு தினத்தையும் துடிதுடிப்பான முறையில் தொடங்குவதற்கு ஒரு அருமையான பானம்.

'ஹார்லிக்ஸ்' தயாரிப்பாளர்கள் அளிப்பது

S-4012 Tam.A



பாவையர் நித்தம் விரும்பும்

விநிபா



சந்தன முகப்பவுடர்

சருமத்திற்கு மென்மையும் பொலிவும் அளிக்கவல்ல மைசூர் சந்தனம், இந்திய அபூர்வ மூலிகைகள், மேனாட்டு வாசனை திரவியங்கள், உயர்ந்த அத்தர் வகைகள், தூய புணுகு, ஜவ்வாது, அரகஜா இவற்றை ஒருங்கே கலந்து நவீன விஞ்ஞானரீதியில் மைக்ரோஃபைன் முறையில் தயாரிக்கப்படுகின்றன.

விநிபா ப்ராடக்ட்ஸ்
'கோகுல் கார்டன்ஸ்'
கும்பகோணம்.

Criterion VNB 3395 TMB

கூந்தலுக்குச் சாயம் பூசுவது பற்றி எல்லா விவரங்களும் உங்களுக்குத் தெரிய வேண்டுமா?

மகிழ்வோடு விடையளிக்கக் காத்திருக்கிறது

கோத்ரெஜ்

இளம் வயதில், சில சமயம், சற்று முன்னதாகவே நரை தோன்றி விடலாம். அந்த சமயம் ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி நடந்து கொள்வார்கள். சிலர் அதை விளையாட்டாக எடுத்துக் கொள்வார்கள், சிலர் அதைப் பெரிது படுத்துவார்கள். ஆனால் பெரும்பாலோர் அதற்காக ஒன்றுமே செய்வதில்லை. வருந்தத்தக்க விஷயம். காரணம், நரைத்த கூந்தலைக் கருமையாக்கி விடலாம்—மிக மிக எளிதாக.

கே: எப்போது கூந்தலுக்குச் சாயமேற்றத் தொடங்க வேண்டும்?

ப: முதன்முதல் நரை இழைகள் தோன்ற ஆரம்பித்த உடனேயே பூசுவதுதான் சிறந்தது.

கே: தொடர்ந்து கூந்தலுக்குச் சாயமேற்றி வந்தால், அது கேசத்தைப் பாதிக்கும் என்பது உண்மையா?

ப: இல்லை. ஆனால் நீங்கள் சிறந்த ஹேர் டையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கோத்ரெஜ் ஹேர் டையில் சேர்க்கப் பட்டுள்ள விசேஷப் பொருட்கள் கூந்தலுக்கு உருக் கொடுப்பதோடு அதில் உள்ளடங்கியுள்ள கண்டிஷனர்கள், உங்கள் கூந்தலை அழகாகவும் பளபளப்பாகவும் வைத்திருக்க உதவுகிறது.

கே: அது சருமத்தைப் பாதிக்குமா?

ப: பொதுவாக பாதிக்காது. ஆயின், முதலில் ஒரு சிறிய சருமப் பரிசோதனை செய்து பார்த்து விடுவது நல்லது. எந்த சிறந்த ஹேர் டையுடனும் இப் பரிசோதனையை எப்படிச் செய்வது என்ற குறிப்புகள் இருக்கும்.

கே: பர்மனெண்ட் ஹேர் டை எத்தனை நிரந்தரமானது?

ப: சாயமேற்றிய கூந்தலில் பல வாரங்கள் சாயம் நீடித்திருக்கும். ஆயினும் புதிய கேசம் முளைக்கத் தொடங்கிய உடனேயே மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குப் பின்னர் நரை முடிகளை மீண்டும் சாயமேற்ற வேண்டும்.

கே: டையின் சாயம் துணிகளையோ தலையணைகளையோ கறைப்படுத்துமா?

ப: நிச்சயமாக இல்லை. இதர பெரும்பான்மையான ஹேர் டைகள் போல, கோத்ரெஜ் ஹேர் டை கூந்தலில் மேற் பூச்சாக சாயமேற்றுவதில்லை. அது, கேசத்தின் அடிவேரினுள்ளே ஊடுருவிச் சென்று தங்குகிறது.

கே: கூந்தலுக்குச் சாயமேற்றிய பின்னர், என் கேசத்தைச் சாதாரண கேசம் போல் நடத்தலாமா?

ப: நிச்சயமாக, ஷாம்பூ உபயோகித்து, கூந்தலை அலசலாம். எந்த ஹேர் ஆயிலையும் க்ரீமையும் உபயோகிக்கலாம்.

கே: வீட்டிலேயே கூந்தலுக்குச் சாயமேற்றுவது எளிதா?

ப: சந்தேகமே வேண்டாம். உபயோகிக்க மிக மிக எளிது கோத்ரெஜ் ஹேர் டை: டையை மென்மையாகத் தடவினால் போதும். அது தானே சமமாகவும் சீராகவும் எளிதாகச் சருமத்தின் ரோமக்கால்களினிடையே ஊடுருவிப் பரவுகிறது.

CMGS-81-175 TM

கே: எல்லா ஹேர் டைகளுமே உபயோகிக்கக் கடினமா?


ப: அப்படிச் சொல்ல முடியாது. கோத்ரெஜ் ஹேர் டை உபயோகிக்க வசதியானது. இனிய நறுமணம் கொண்டது. மிக மென்மையானது.


கே: அது மிக விலையுயர்ந்ததா?

ப: தோள் அளவு கூந்தல் உங்களுக்கு இருந்தால் ஒரு குப்பி ஹேர் டையும் டெவலப்பரும் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் வரும். அதுவும் நீங்கள் வீட்டிலேயே சாயமேற்றிக் கொண்டால் மாத மொன்றுக்கு சுமார் ரு. 3/- செலவாகும்.

கே: சாயமேற்றியபின் என் கூந்தல் இயற்கையான கருமை நிறம் பெறுமா?

ப: நிச்சயமாக, ஆனல் உங்கள் கூந்தலின் இயற்கையான நிறத்திற்கு ஏற்ற வண்ணத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்கள் கூந்தல் இள நிறமுடையதாக இருந்தால் கோத்ரெஜ் கரும் பழுப்பு ஹேர் டையை உபயோகிக்கவும்.





கோத்ரெஜ்

பர்மனெண்ட் ஹேர் டை
இதர ஹேர் டைகளை
பிரதியலைகளாக்கி விட்டது.


ஆண்களுக்கும்
பெண்களுக்கும்
கூட
இயற்கையான
கருமை,
கரும்பழுப்பு.

விரைந்து முன்னேறும் தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு – குடும்ப நலத்துறை சிறப்புப் பணிகள்

பலவற்றில் முதலிடம் — பற்பல சாதனைகள்

நலமான வாழ்வே இன்பவாழ்வு. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இம் முது மொழிகளை முற்றிலும் மெய்ப்பித்துக் காட்டுகிறது தமிழ்நாடு. மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத் துறைகளில் கடந்த ஆண்டில் பல பெரிய சாதனைகள் நிகழ்ந்தேறியுள்ளன. தமிழ்நாட்டில் நல்வாழ்வு மலர்ந்த நாடாக்கவேண்டுமென்பதற்காக, ஒருங்கிணைந்து தீவிரத்திட்டங்களை நிறைவேற்ற மக்களும் அரசும் உழைத்தனர். சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரையும்—குறிப்பாக நலிவுற்ற பிரிவினரைக் கருத்தில் கொண்டு ஒரு முற்போக்கான கொள்கை மேற்கொள்ளப்பெற்றது.

நோய் ஒழிப்புச் செயல் திட்டங்கள்!



தொழு நோய், மலேரியா, பெரியம்மை, காச நோய்—இவற்றை எதிர்த்து ஒவ்வொரு முனையிலும் தாக்குதல் தொடர்ந்தது.

● 1976-77ம் ஆண்டில் தொழு நோயைக் கட்டுப்படுத்தும் 62 சிகிச்சை நிலையங்களின் மூலம் ரூ. 60.25 லட்சம் செலவில், தொழு நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.


● மலேரியா நோயை ஒழிக்கவும் கட்டுப் படுத்தவும் தக்க தருணத்தில் நடவடிக்கைகளும் கண்காணிப்பு முறைகளும் மேற்கொள்ளப் பட்டன. 5 மண்டலங்களை அமைத்து தீவிரத் திட்டம் அமுல் நடத்தப்பட்டது. மாநில மலேரியா ஒழிப்புப் பணிக்குழு, 1976-ல் புத்துயிர் பெற்று செயல் படத் தொடங்கியது.

● தமிழ்நாட்டில் பெரியம்மை நோய் ஏற்படுவதேயில்லை. எனினும் அலட்சியமாக இருந்து விட கூடாது! 1976 நவம்பரில் வீடுவீடாக ஆய்வு நடத்தப்பட்டது.

● காச நோயைக் கட்டுப்படுத்த மாநிலம் முழுவதும் தீவிரத் திட்டம் செயல் படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பி.சி.ஜி. ஊசி போடும் குழு. கடந்த ஆண்டில் மேலும் 4 குழுக்கள் அமைப்பு. சமூகத்தின் நலிந்த பிரிவினர்களுக்கு நோய்த் தடுப்பு நடவடிக்கை.

நலிந்தோர் வலிவும், நலமும் பெற வழி கண்டோம்!

கல்ராயன் மலையில் கொத்தடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்ற மக்களுக்கு உதவ தமிழ்நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தது — அவர்களுக்கு நடமாடும் மருத்துவ மனை ஆய்வுக்கூட வசதிகள், மூன்று சுகாதார கண்காணிப்பாளர்களின் உதவி ஆகியவை கிடைத்தன. குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசிகள் போடுதல், 'கேர்' நிறுவனம் வழங்கிய பண்டங்களின் விநியோகம், வைட்டமின் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகள் விநியோகம், சுற்றுப் புற சுகாதாரத்தைச் சீரமைப்பது போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டன.




கொத்தடிமை நீங்கி புதுவாழ்வு பெற்றவர்களுக்கு நடமாடும் மருத்துவ வண்டி

தமிழ்நாட்டில் வாழும் மலைசாதியினரும் பல சலுகைகளைப் பெற்றுள்ளனர்.
* உதகமண்டலம் வட்டாரத்தில் 1976-ம் ஆண்டில் கூடுதலாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டது * கூடலூர் வட்டாரத்தில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. * உதகமண்டலம் தலைமை மருத்துவ மனையில் ரூ 3.90 லட்சம் செலவில் கூடுதல் வார்டுகள் * கூடலூர் வட்ட மருத்துவ மனையை வலுப்படுத்த ரூ 4 லட்சம் * மலைவாசி மக்கள் வாழும் 4 இடங்களில் அரசு மருந்தகங்கள் அமைக்க ரூ 7.85 லட்சம் அனுமதி * சித்தேரி மலையில் மகப்பேறு மருத்துவ நிலையம். * ஏலகிரி மலையில் ரூ 2.2 லட்சம் செலவில் அரசு மருந்தகம் * பச்சை மலையில் அரசினர் மருந்தகம்.

குடிசைப்பகுதி மக்களுக்கு அவர்களது வீட்டு வாசலில் மருத்துவ உதவி!

1976ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு புதுமையான திட்டத்தின் கீழ், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு மருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் பலவகை நல்வாழ்வு வசதிகளை அளிக்கின்றனர். இத்திட்டத்தின் கீழ் 6.85 லட்சம் குடிசை வாழ் மக்கள் பயனடைந்தனர். ஒவ்வொன்றிலும் ஒரு மூத்த மருத்துவ பேராசிரியர் தலைமையில் அமைந்த 274 பிரிவுகள் இப்பணியில் ஈடுபட்டுள்ளன.



குடிசைப்பகுதி மக்களுக்கு மருத்துவ வசதிகள்

நலிந்த பிரிவினருக்கு மருத்துவ வசதிகள் அனைத்தும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற அரசின் உறுதியான கொள்கையின் அடிப்படையில் இத்திட்டம் அமைந்துள்ளது.




தாய் சேய் நல நிலையம்

கிராமப்பகுதிகளுக்கு கைகொடுத்து உதவுவோம்!

ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலம் கிராமப் புற மக்களுக்கு ஒருங்கிணைந்த நல்வாழ்வு வசதிகள் அனைத்தும் கிடைக்க வழி வகுக்கப் படுகிறது. பள்ளிகளில் மருத்துவப் பரிசோதனை, தாய்சேய் நலப் பணிகள், சுற்றுப்புற சுகாதாரப் பராமரிப்பு! ஒவ்வொரு வட்டார வளர்ச்சிப் பகுதிக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்! கிராமப் பகுதிகளில் 2,880 தாய் சேய் நல விடுதிகள்

கண்களைக் காப்பதில் கவனம்!

பிரதமர் அவர்களால் நன்கொடையாக அளிக்கப்பட்ட ரூ. 2 லட்சத்தைக் கொண்டு குழந்தைகள் பார்வையிழப்பதைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் ஒரு புதிய திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரப் பகுதியில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. "பார்வை இழப்பினைத் தடுக்க தீர்க்க தரிசன நடவடிக்கை" என்பது உலக நல் வாழ்வு நிறுவனத்தின் இந்த ஆண்டு முழக்கமாகும். இந்த அம்சத்தில் தமிழ்நாடு பின் தங்கி விடவில்லை.



மலைவாசிகளுக்கு மருத்துவ உதவி

எல்லா மருத்துவ முறைகளுக்கும் சமமான இடம்!

சித்தா, ஆயுர்வேதா, யுனானி போன்ற எல்லா மருத்துவ முறைகளும் தமக்குரிய பங்கைப் பெற வேண்டும் என்ற முற்போக்கான ஒரு கொள்கையைத் தமிழ்நாடு அரசு பின்பற்றுகிறது. ஹோமியோபதி, இயற்கை மருத்துவம் மற்றும் யோகாசன சிகிச்சை முறைகளும் இந்த மாநிலத்தில் வளர்ச்சியடைந்துள்ளன.

மக்கள் திட்டம்!

குடும்ப நலத்திட்டத்தில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இந்த மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் குடும்ப நலத் தீவிர இயக்கத்திற்கு ஒரு சிறப்புத் தன்மை உண்டு — கட்டாய முறை இல்லை. மக்கள் தாமாக முன்வரும் முறையே நிலவுகிறது. தாமாக முன்வந்து இசைவோருக்கு அறுவை சிகிச்சை நடக்கிறது. நடப்பு ஆண்டில் 5 லட்சம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் நடத்தப் பட்டன. இது முன் எப்போதும் கண்டறியா ஒரு சாதனை! குடும்பநலத்திட்டத்திற்குச் சமூக சேவை ஸ்தாபனங்கள் கை கொடுத்து உதவியுள்ளன. இன்று இது மக்களின் சொந்தத் திட்டமாக விளங்குகிறது.




நோய்த்தடுப்பு ஊசி போடும் திட்டம்

தமிழ்நாடு குடும்ப நலத்திட்டத்தின் மற்றொரு புதுமையான அம்சம் என்னவென்றால், அதன் ஒருங்கிணைந்த அணுகு முறையாகும். மகப்பேறு, குழந்தைகள் நல சேவைகள் மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின் உதவும் பணிகள் மொத்த திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளன. இதில் நோய்த் தடுப்பு ஊசி போடும் திட்டமும் இணைந்துள்ளது. கிராமப் பகுதிகளில் 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி போடப்படுகிறது. 60 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இத்திட்டத்தைச் செயற்படுத்துகின்றன. 1977-78ம் ஆண்டில் மேலும் 25 நிலையங்களில் இத்திட்டம் அமுலாகும்.

நகர, கிராமப்புறங்களின் நல்வாழ்வுப் பணிகளில் மேம்பாடு!

1976-77ம் ஆண்டில் எல்லா மருத்துவ மனைகளிலும் வசதிகளைப் பெருக்குவதற்கு தமிழ்நாடு அரசு உறுதியான நடவடிக்கை களை எடுத்தது. அவற்றில் சில: * சென்னை நகரில் உள்ள மருத்துவ மனைகளைப் பழுது பார்க்கச் செலவு ரூ. 16.05 லட்சம் * பாலரங்காபுரத்தில் ரூ. 14.2 லட்சம் செலவில் 40 படுக்கை வசதியுள்ள மருத்துவ மனை திறக்கப் பட்டது * தஞ்சாவூரில் ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் ரூ. 4 லட்சம் செலவில் சீரமைப்புப் பணிகள் * சிதம்பரம் மருத்துவ மனைக்கு ரூ. 20 லட்சம் செலவில் (மேலும் 70 படுக்கை வசதியுடன்) ஒரு புதிய கட்டிடம் * திருப்பூரில் ரூ. 18 லட்சம் செலவில் ஒரு புதிய மருத்துவ மனை * திருவண்ணாமலை, செஞ்சி மற்றும் பல வட்டத் தலைமையகங்களில் முன்னாள் ராணுவ வீரர்களுக்கான வார்டுகள் * சுப்பிரமணியபுரத்தில் ரூ. 4.50 லட்சம் செலவில் அரசினர் மருந்தகத்தில் 24 படுக்கை வசதி கொண்ட பிரிவு கட்டப்பட்டது.



மருத்துவ மனைகள் நவீனமயமாகின்றன.



விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து உதவும் நடமாடும் மருத்துவ சேவை வண்டி

* திருவாரூர் அரசினர் மருத்துவ மனையில் ரூ. 1.15 லட்சம் செலவில் 21 படுக்கை வசதியுள்ள தனிப் பிரிவு கட்டப்பட்டது.

நாட்டிலேயே முதலாவதாக சென்னையில் அரசினர் ராயப்பேட்டை மருத்துவ மனையில் 1977 ஜனவரியில், விபத்துக்குள்ளானவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் பிரிவு ஒன்று திறக்கப்பட்டது. எல்லா வகையான விபத்துக்களுக்கும் ஒரே இடத்தில் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. நாட்டிலேயே முதன் முறையாக, விபத்துக்குள்ளானவர்களுக்குச்சிகிச்சை செய்யும் நடமாடும் மருத்துவப் பிரிவும் துவக்கப்பட்டது. இத்தகைய சேவைப் பிரிவுகளை சென்னையில் அரசினர் பொது மருத்துவ மனையிலும் கோயம்புத்தூரிலும், மதுரையிலும் ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற முது மொழியைத் தமிழ்நாடு மெய்ப்பித்து வருகிறது.

MOULIS-DIPR 7072 77-1?

ஆக்கசக்தி நெருக்கடியினால் ஏற்பட்ட சங்கடமான நிலை டாடா ஸ்டீலிலுள்ள எங்கள் இளம் நிபுணர்களுக்கு அதைத் திறம்பட சமாளிக்கும் ஆற்றலை அளித்தது.

ஆக்கசக்தி உபயோகத்தில் சேமிப்பு பற்றிய தீவிரமான ஆராய்ச்சிகள் பல புது வழிகளைப் புலப்படுத்தியுள்ளன. கம்பஸ்சன் ஏர் கண்ட்ரோல் ஸிஸ்டம்களைப் பல தொழிலிடங்களில் நிறுவி வியர்த்தமாகும் காஸினால் ஏற்படும் உஷ்ண நஷ்டத்தைக் குறைக்க வழி செய்யப்பட்டுள்ளது; தவிர எரிபொருள் தரமும் சீராக்கப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் வேஸ்ட்ஹீட் ரெகூப்பரேட்டர் ஸிஸ்டம்கள் மீண்டும் நிறுவப்பட்டிருப்பதோடு அவற்றின் செயலாற்றலை உச்சநிலைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஃபர்னஸ்களில் இன்ஸுலேஷன் செய்யப்பட்டதோடு அவற்றில் காலத்திற்கேற்றவாறு புதுமைகள் செய்யப்பட்டுள்ளன. உச்சநிலையில் மறு-உபயோக முறைகளின் பயனாக குளிர்ச்சிக்கான தண்ணீர் பம்ப் செய்வது குறைக்கப்பட்டுள்ளது.

மொத்த உற்பத்திச் செலவில் மூன்றில் ஒரு பங்கு ஆக்கசக்திக்காகச் செலவிடும் தொழிற்துறையில் இந்த சேமிப்புகள் மிக மதிப்புள்ளவையாகும். காரணம், தாங்கமுடியாத ஆக்கசக்திச் செலவின் பளுவை சமாளிக்க இவை உதவுகின்றன.

இளமை மிடுக்கோடு இருப்பவர்கள் என்றென்றும் புதுப்புது சோதனைகளை வரவேற்பார்கள்.



டாடா ஸ்டீல்


TIS-1247 A



கல்கி

1977 மார்ச் 20

அநல ௵ — பங்குனி 7



ராஜாஜி சிந்தனை

மூடபக்தி வேண்டாம்!

அரசியல் ரீதியான, அல்லது தார்மிக ரீதியான, அல்லது சட்ட ரீதியான ஒரு கொள்கையை எப்போது நாம் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறோம் என்றால், பொதுவான அந்தக் கருத்துக்கு மாறுபட்டு எப்போது நடக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டிருக்கும் போது தான்! ஒரு பொதுவான விதியை அதிலிருந்து எப்போது விலகி நடக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாமல் விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருப்பது அசட்டுத்தனம்..

—ராஜாஜி நினைவு மலர் 1976

தமிழ்நாட்டில் தீவிர வேகத்தில் ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றம்

திட்டப் பணிகளில் விரைவான முன்னேற்றம்.

இந்தப் புள்ளி விவரங்களே சான்று.

ஐந்தாண்டுத் திட்ட ஆண்டு முதலீடு:
தமிழ்நாட்டிற்கான ஐந்தாண்டுத் திட்ட முதலீடு 1976-77ஆம் ஆண்டில் ரூ. 201 கோடி. இது 1975-76ஆம் ஆண்டின் முதலீட்டை விட 41.3% அதிகம். 1977-78ல் இத்தொகை 30% அதிகமாக்கப்பட்டு, ரூ. 260 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

1975-76ல், திட்ட மொத்த முதலீட்டில் இருபது அம்சத் திட்டத்திற்கான முதலீடு 49% ஆக இருந்தது. 1976-77ல் 56% ஆக உயர்ந்துள்ளது

மின் உற்பத்திக்கு அதிக ஒதுக்கீடு:
மின் உற்பத்திக்கான முதலீடு 1975-76ல் ரூ. 39 கோடியாக இருந்தது. 1976-77ல் ரூ. 70.18 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1977-78ல் இது ரூ. 94.91 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்துத் திட்ட முன்னேற்றத்திற்கும் மின்சார வளர்ச்சியே அடிப்படையாகும்.

நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு நிறையப் பணம்:
மின்சாரத்திற்கு அடுத்தபடியாக பாசன வளர்ச்சிக்கு மிகுந்த முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத்திற்காக 1975-76ல் ஒதுக்கப்பட்ட முதலீடு ரூ. 11.60 கோடி. ஆனால் 1976-77ல் இத்தொகை ஏறக்குறைய இரு மடங்காகப் பெருகி ரூ. 21.37 கோடியாக அதிகரித்துள்ளது. 1977-78ல் இம்



முதலீடு ரூ. 26.22 கோடி வரை உயரும். 1975-76ல் புதிய பாசனத் திட்டங்களினால் பாசன வசதிபெற்ற நிலப் பரப்பு 4,460 ஏக்கர். 1976-77ல் புதிய பாசன வசதி பெற்றவை 4,740 ஏக்கர். 1977-78ல் இதன் அளவு 34,640 ஏக்கராக உயரும். சிறப்புச் சிறு பாசனத் திட்டத்திற்காக 1976-77ல் வழக்கமாக ஒதுக்கப்பட்ட ரூ. 3.5 கோடியிலிருந்து ரூ. 5.78 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழகம் கண்ட பல்முனை வளர்ச்சி:

1976-77ல் தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட முதலீடு ரூபாய் 10.70 கோடி. கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 8.27 கோடிதான். 1977-78ல் இந்த முதலீடு ரூ. 13.81 கோடியாக இருக்கும்.

1975-76ல் 3,600 ஆக இருந்த ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை, 1976-77ல் 4,600 ஆக அதிகரித்துள்ளது. 1975/76ல் வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன் தொகை ரூ. 100 கோடி ஆகும். 1976-77ல் இத்தொகை ரூ. 110 கோடியாக உயர்ந்தது.

கூட்டுறவுப் பண்டகசாலைகளின் மூலம் விநியோகிக்கப்பட்ட உரத்தின் மதிப்பு, 1975-76ல் ரூ. 60 கோடி. 1976-77ல் விநியோகிக்கப்பட்ட உரத்தின் மதிப்பு ரூ. 75 கோடி.

போக்குவரத்துக் கழகங்கள் புதிய திட்டங்களை வகுத்து, கூடுதலான வருவாயைப் பெருக்கத் தொடங்கியுள்ளன. எனவே, போக்குவரத்துக்காக 1975-76ல் ஒதுக்கப்பட்ட ரூ. 15.68 கோடி முதலீட்டினை, 1977-78ல் ரூ. 24.59 கோடியாக உயர்த்துவது சாத்தியமாகும்.

சமுதாய நலத் திட்டங்களுக்காக 1975-76ல் ஒதுக்கப்பட்ட முதலீடு ரூ. 39.10 கோடி. 1976-77ல் இது ரூ. 53.84 கோடியாக உயர்ந்தது. இது அடுத்த ஆண்டு ரூ. 72.30 கோடியாக உயர்த்தப்படும்.

கல்விப் பணிக்குக் கூடுதல் தொகை:


இம்மாநிலத்தில் கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகை 1975-76ல் ரூ. 121 கோடி. ஆனால் 1976-77ல் இத்தொகை ரூ. 134 கோடியாக உயர்ந்தது.

1976-77ல் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 3,12,000 ஆகப் பெருகியது.

தமிழ்நாடு வேகமாக முன்னேற்றம் கண்டு வருகிறது என்று உணர்த்த இந்தப் புள்ளி விவரங்கள் போதுமல்லவா?

தமிழ்நாட்டுக்கு வளமான வருங்காலம் காத்திருக்கிறது.

FDS DIPR 7072 77 13 TAM



தமிழக மக்களுக்கு வேண்டுகோள்

ஜெயப்பிரகாஷ் நாராயண்

அன்புள்ள நண்பர்களே,

சென்னைக்கு வந்து, உங்களை நேரில் சந்தித்துப் பேசலாமென்றுதான் நான் நம்பிக் கொண்டிருந்தேன். ஆனால், திடீரென்று நோய்வாய்ப்பட்டு இப்போது பம்பாய் ஜஸ்லோக் மருத்துவமனையில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இன்னும் சில நாட்களில் நீங்கள் வாக்குச் சாவடிக்குச் சென்று புதிய நாடாளுமன்றத்தைத் தேர்ந்தெடுத்து மத்தியில் புதிய அரசை அமர்த்த இருக்கிறீர்கள். ஒரே கட்சியின் 30-ஆண்டுக்காலக் காரியங்களும் ஒரு தனி நபரின் பத்தாண்டுக் காலஆட்சியும் உங்கள் முன்னால் இருக்கின்றன. நீங்கள்தான் அதன் விளைவுகளைப் பரிசிலனை செய்ய வேண்டும். அந்த விளைவுகளில் நீங்கள் திருப்தியடைந்திருந்தால் நான் எதுவும் சொல்வதற்கில்லை. இதுவரை நடந்தவை குறித்தும், இப்போது நடந்து கொண்டிருப்பவை குறித்தும் நான் தனிப்பட்ட முறையில் பெரிதும் வேதனையடைந்துள்ளேன். அனைவராலும் வெறுக்கப்படும் நெருக்கடி நிலை இன்னும் அமுலில் இருக்கிறது; நூற்றுக்கணக்கான அரசியல் தொண்டர்களும், சமுதாய ஊழியர்களும், தலைவர்களும் இன்னும் சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். இது தொடர்ந்து நீடிப்பதற்கு அனுமதிக்கக்கூடாத அவமானத்துக்குரிய நிலைமையாகும். இதையனைத்தையும் மாற்றுவதற்கும், மீண்டும் நாட்டைச் சுதந்திரத்திற்கும், உண்மையான ஜனநாயகத்திற்கும் அழைத்துச் செல்லவும் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் அதிர்ஷ்டவசமாக ஒரு வாய்ப்பினை அளித்திருக்கிறது.

அதுபோலவே அதிர்ஷ்டவசமாக மத்தியில் காங்கிரஸை நீக்கும் வல்லமை பெற்ற ஓர் ஒன்றுபட்ட எதிர்க்கட்சி இப்போது தோன்றியிருக்கிறது. அதுதான் ஜனதா கட்சியாகும். உங்களுக்குத் தமிழ்நாட்டில் உங்களுடைய தி. மு. க. இருக்கிறது. நான் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு வாக்காளரையும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் — நீங்கள் தி. மு. க.விற்கும், ஜனதா கட்சிக்கும் வாக்களிக்க வேண்டும். கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியும் மேற்கூறிய கட்சிகளோடு உடன்பாடு கொண்டு தமிழ்நாட்டில் போட்டியிடுகிறது. அக்கட்சியும் உங்கள் ஆதரவையும், வாக்கையும் பெறவேண்டும்.

உங்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்கள்,

(திரு ஜே. பி.யின் உருக்கமான வேண்டுகோளைப் பிரசுரிப்பதுடன் அவரது புகைப்படத்தையும் இவ்விதழ் மேலட்டையில் பிரசுரித்திருக்கிறோம்.

—ஆசிரியர்)

கல்கி மலர் 36 இதழ் 34

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

ஜனநாயகமா? விசாரணையற்ற சிறைவாசமா?

க. சந்தானம்

ஓர் அரசு உத்தரவு மூலம் விசாரணையின்றி மக்களைச் சிறை வைப்பது என்பது ஜனநாயகத்தில் அருவருக்கத்தக்க விஷயம். ஜனநாயகத்தில் மட்டுமல்ல; நாகரிகமுள்ள எந்த அரசுமே இப்படி நடந்து கொள்ளாது. ஒவ்வொரு பிரஜையின் உயிரும் சுதந்திரமும் சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டும். அரசியல் தொண்டர்கள் மட்டுமல்ல, குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்படும் பிரஜைகளுக்குக்கூட இந்தப் பாதுகாப்பு உண்டு. இல்லையெனில் பிரஜா உரிமை என்பதற்கு அர்த்தமே இல்லை. கொலைக் குற்றம் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படுபவனைக் கூடச் சரியான நீதி விசாரணையின்றி அரசு உத்தரவால்

தூக்கிவிட்டுவிட முடியாது. அரசியல் சாசனத்தில் நெருக்கடி நிலை பற்றிய ஓர் அத்தியாயம் உண்டு என்பதால் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்வது ஜனநாயகத்தின் ஓர் அம்சமாகி விடாது. விரோதி நாட்டினரின் படையெடுப்பு அல்லது உள்நாட்டில் ஆயுதம் ஏந்திய புரட்சி ஏற்பட்டால் மட்டுமே நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யலாம். இந்தியாவில் பிரதம மந்திரிக்கும் ஆளும் கட்சிக்கும் ஒரு தர்மசங்கட நிலை ஏற்பட்டதாகக் கற்பனை செய்து கொண்டு அதற்காக நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்திருக்கிறார்கள். இது அரசியல் சாசனத்தை ஏமாற்றுவதாகும்.

என் நண்பர் திரு வி. பி. ராஜு அவர்களுடன் நான் ஒரு கமிட்டியில் பணியாற்றி மகிழ்ந்திருக்கிறேன். அவர், 'நெருக்கடி நிலைப் பிரகடனத்தை வாபஸ் பெற வேண்டும் என்று எதிர்க் கட்சியினர் ஏன் இத்தனை அமர்க்களம் பண்ணுகிறார்கள்?' என்று கேட்கிறார். 'அதுதான் நெருக்கடி நிலைப் பிரகடனத்தைப் பல அம்சங்களில் தளர்த்தியாகி விட்டதே' என்கிறார். இப்படித் தளர்த்தி விடுவது எதிர்க் கட்சிகளுக்கு ஆளும் கட்சி அளிக்கும் மாபெரும் சலுகை என்று அவர் கருதுகிறார் போலும்! சற்று யோசித்துப் பார்த்தால் அவர், நெருக்கடி நிலைப் பிரகடனம் இந்நாட்டின் மீது திணிக்கப்பட்ட வேண்டாத கொடுமை என்பதை உணர்வார். அது நீடிக்கும் ஒவ்வொரு நிமிடமும் கொடூரமான அநீதி இழைக்கப்படுகிறது. நெருக்கடி நிலைப் பிரகடனத்தால் ஏதோ பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்களே, அதை உத்தேசித்தும்கூட அப்பிரகடனத்தை நியாயப் படுத்திவிட முடியாது. உண்மையில் பார்க்கப் போனால் இந்தப் பொருளாதார முன்னேற்றங்களையெல்லாம் இன்னும் சிறப்பாகவும் இன்னும் முழுமையாகவும் சரியான, சட்ட பூர்வமான முறைகளிலேயே அடைந்திருக்கலாம்.

தடை செய்யப்பட்டுள்ள சங்கங்களைச் சேர்ந்தவர்கள், பொருளாதாரக் குற்றங்களைச் செய்ததாகச் சந்தேகத்துக்குள்ளானவர்கள் ஆகியோரைத்தான் இன்னமும் விசாரணையின்றிச் சிறையில் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். தேசிய நலனுக்கு எதிராக நடந்து கொள்ளும் அமைப்புக்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு அதிகாரம் வழங்கும் விதமாக அரசியல் சாசன மாறுதல் ஒன்று நிறைவேறியுள்ளது. இப்படி ஒரு மாறுதல் புகுத்தப் பட்டுவிட்டதால் தடை செய்யப்பட்டுள்ள இந்த அமைப்புக்கள் மீது வழக்குத் தொடுத்து அவற்றின் குற்றங்கள் நிரூபிக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இவ்வமைப்புக்களைச் சேர்ந்தவர்களைத் தொடர்ந்து விசாரணையின்றிக் காவலில் வைத்து அவர்களுக்கு எதிராகத் துவேஷப் பிரசாரம் செய்வதே மேலானது என்று அரசு கருதுவதாக இப்போது தெளிவாகிறது. பொருளாதாரக் குற்றம் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படுபவர்களையும் அவர்கள் செய்த குற்றங்களுக்காக வழக்குத் தொடுக்காமல் வைத்திருப்பது பெரும் தவறாகும். அரசு அவர்களுக்கு எதிராக எந்தவிதமான சாட்சியத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதற்காக அவர்களைத் தொடர்ந்து விசாரணையின்றியே காவலில் வைத்திருப்பது முழுக்க முழுக்க அநீதி. நாகரிக அரசுக்கு அழகல்ல.

நெருக்கடி நிலைப் பிரகடனத்தை வாபஸ் பெற அரசுக்கு மனமில்லை என்னும் போது வாக்காளர் முன் எழும் கேள்வி இதுதான்: இந்தியக் குடிமகன் கால வரையறையின்றி பிரஜைகளுக்கு உண்டான அடிப்படை உரிமைகளை இழந்து நிற்க வேண்டியது தானா? பிரதம மந்திரியும் ஆளும் கட்சியும் வசதியான நேரம் வந்து விட்டதாகக் கருதும் வரையில் ஒவ்வொரு குடிமகனின் உயிரும் சுதந்திரமும் அதிகார வர்க்கத்தின் கரங்களில் விளையாட்டுப் பொருளாகிவிடும் என்பதே இதற்கு அர்த்தம். கலப்பற்ற இந்தச் சர்வாதிகாரப் போக்கைப் பல காங்கிரஸ்காரர்களே ஒப்புக்கொள்வார்களா என்பது சந்தேகம்தான்.

எனவே, ஜனநாயகமா, அல்லது விசாரணையற்ற சிறைவாசமா? என்ற அடிப்படையில் வோட்டுப் போடுமாறு வாக்காளர்களைக் கோருகிறேன். நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்வதும் விசாரணையின்றி மக்களைச் சிறையில் தள்ளுவதும் ஒரு பழக்க வழக்கமாகி விடக் கூடாது. நமது பொது வாழ்விலிருந்து இந்தப் போக்கு மறைந்துவிட வேண்டும். நெருக்கடி நிலைப் பிரகடனத்தை யொட்டி எத்தனை பேர் விசாரணையின்றிச் சிறை வைக்கப்பட்டனர் என்று கணக்குக் கூட நமது மக்களுக்குத் தெரியாது. பல்வேறு சமயங்களில் விசாரணையின்றிக் காவலில் வைக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை விவரங்களை மக்கள் முன் சமர்ப்பிக்கும் கடமை ஆளும் கட்சிக்கு இல்லையா? அரசியல் கைதிகள் இத்தனை பேர், பொருளாதாரக் கைதிகள் இத்தனை பேர் என்று அவர்களை வகைப்படுத்திக் கூற வேண்டாமா? இன்றைக்கும் காவலில் இருப்போர் இத்தனை நபர்கள் என்று கணக்குத் தர வேண்டாமா? மற்றவர்களைப் போலவே காங்கிரஸ்காரர்களுக்கும் இவ்விவரங்கள் தெரியாமலிருந்தால் நான் அதிசயப்பட மாட்டேன். காந்திஜி எதையும் ரகசியமாகச் செய்வது பாபம் என்றார். ஆனால் இன்றோ தலைவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது ஆளும் கட்சியின் அங்கத்தினர்களுக்குக்கூடத் தெரியவில்லை! இதுதான் இன்றைய ஆட்சியின் லட்சணம்.

இந்திய ஜனநாயகத்தின் எதிர்காலத்தை உறுதிப் படுத்த வேண்டிய புனிதக்கடமை தனக்கு இருப்பதை ஒவ்வொரு வாக்காளரும் நினைவில் கொள்ள வேண்டும். தனது சொந்த விருப்பு வெறுப்புக்கள், கட்சிப் பற்று இவை காரணமாக இந்தக் கடமையிலிருந்து தப்ப எந்த வாக்காளரும் முயலக் கூடாது. வோட்டுப் போடாமலிருந்து இந்தப் பொறுப்பிலிருந்து நழுவி விடவும் கூடாது.


உங்கள் தலைகுனிவுக்குக் காரணம் என்ன?
என் மகள் எங்கள் குடும்பத்தின் தியாகத்தை வோட்டுக்காக விலை பேசி விட்டாள்!
வோட்டுரிமை
வாய்ப்பை நழுவ விடாதே! பலம் கொண்ட மட்டும் தாக்கித் தகர்த்தெறி!
ஜெயப்பிரகாஷ்

என்ன குற்றம் செய்தார்கள்?

ராஜ்மோஹன் காந்தி

புள்ளி விவரம் ஏதும் தர அரசு மறுக்கிறது. அதே சமயம் எல்லா அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட்டு விட்டனர்; விசாரணையின்றிக் காவலில் இருப்பவர்கள் பொருளாதாரக் குற்றம் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படுபவர்கள் மட்டுமே என்று கூறுகிறது.

அப்படியானால் தடை செய்யப்பட்டுள்ள ஆர். எஸ். எஸ், நக்ஸலைட், ஜமா அத் எ இஸ்லாம் ஆகிய சங்கங்களின் அங்கத்தினர்கள் நிலை என்ன? ஆர். எஸ். எஸ். அங்கத்தினர்கள் மட்டும் ஐயாயிரம் பேர் சிறையில் இருப்பதாகத் தெரிகிறது. வங்கத்திலும் பீகாரிலும் சிறைப்பட்டிருக்கும் நக்ஸலைட்டுகள் நூற்றுக்கணக்கில் இருக்கலாம்.

இப்படி விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டுள்ள எல்லோரும், அவர்கள் கைதாக்கப்பட்ட சமயத்தில் சட்ட பூர்வமாக அமைந்த சங்கங்களின் அங்கத்தினர்களாகவே விளங்கினார்கள் என்பதை நினைவில் கொள்வது முக்கியம். இச் சங்கங்களில் சேர்ந்ததில் அவர்கள் எந்தச் சட்டத்தையும் மீறவில்லை. எனவே அவர்களைத் தொடர்ந்து விசாரணையின்றிக் காவலில் வைத்திருப்பது விநோதமானது, நியாயமற்றது.

இவர்களில் யாராவது பயங்கரக் குற்றம் புரிந்திருந்தால் அவர்கள் மீது வழக்குத் தொடுத்திருக்க வேண்டும். சாட்சியம் சேகரிக்க அரசுக்கு நிறைய அவகாசம் - இருபது மாதங்கள் - இருந்தது. பெரும் குற்றம் புரிந்தவர்கள் தவிர மற்றவர்களை உடனே விடுவிக்க வேண்டும்.

தடை செய்யப்பட்ட சங்கங்களின் அங்கத்தினர்களை விடுவிப்பதும், சங்கங்களைத் தடை செய்வதும் இரு வேறு தனிப் பிரச்னைகள்.

ஆர். எஸ். எஸ். பற்றி அறிந்துள்ள சுதந்திரக் கருத்துடையவர்கள் அச்சங்கத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் பல ஆதாரமற்றவை, மிகைப்படுத்தப்பட்டவை என்று என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். அதன் அங்கத்தினர்களுக்கு இத் தேசத்தின் மீதுள்ள ஆத்மார்த்தமான ஆழ்ந்த அன்பு பற்றிப் பலர் உறுதி கூறுகிறார்கள்.

உயர் மட்டத்தில் அமைந்த நடுநிலையான நீதி விசாரணைதான் ஆர். எஸ். எஸ். மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைப் பொது மக்களின் திருப்திக்கு ஏற்ப விசாரித்து உண்மைகளைத் தீர்மானிக்க முடியும்.

பல்வேறு சங்கங்களுக்கு விதிக்கப்பட்ட தடை சரியா, தவறு என்பது ஒருபுறமிருக்க அப்படித் தடை செய்யப்பட்ட சங்கங்களின் அங்கத்தினர்களாக விளங்கிய ஆயிரக் கணக்கானவர்களை விசாரணையின்றித் தொடர்ந்து காவலில் வைத்திருப்பது பெருந் தவறு.

ஜனதா கட்சியைக் குறை கூறும் சிலர், ஆர். எஸ். எஸ்தான் அதன் பின்னிருந்து இயக்கும் சக்தி என்று கூறுகிறார்கள். இது அதீத கற்பனை. ஜும்மா மசூதியின் இமாமும், மகாராஷ்டிர முஸ்லிம் லீகினரும் அத்தகைய ஒரு கட்சியை ஆதரிக்கவே மாட்டார்கள்.

அதிகாரம்

வளவள வசனமும் கிசுகிசு ஜோக்குகளுமாக நாடகங்கள் அமைந்து வருகையில் ஹம்ஸா ஸ்டேஜ் குழுவினரின் ''அதிகாரம்'' மாறுதலாக விளங்கி நிறைவைத் தருகிறது.

நாடகத்தை எழுதி டைரக்ட் செய்தவர் சுவர்ண மூர்த்தி.

நாடகத்தின் கதாநாயகன் ஒரு போலீஸ் அதிகாரி. அவர் மகன், பள்ளிக்கூடத்தில் வகுப்பு முடிந்து பியூன் கதவைப் பூட்டிக் கொண்டு போன வேளையில் யார் கண்ணிலும் படாமல் ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருந்திருக்கிறான். பள்ளிக்கூடத்திலேயே இறந்தும் விடுகிறான். அவன் மரணத்துக்குக் காரணம் பள்ளிக்கூடப் பியூன் சர்க்கரைதான் என்று குற்றம் சுமத்தி அவன் பல ஆண்டுகள் சிறைத் தண்டனை அடைகிறான். அத்தண்டனை காலத்தில் தாயற்ற தன் குழந்தையை இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைக்கிறான். இன்ஸ்பெக்டர் அவனை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்குகிறார். சர்க்கரை சிறைவாசம் முடிந்து வெளியே வந்து பெரிய பணக்காரனாகிறான்.



கடமைக்கும், கண்டிப்புக்கும் இடையில் தம் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரின் இதயத்தில் பொங்கிப் பெருகிய பாசம் கல்லுக்குள் ஈரமாக நாடகம் முழுவதும் பரவுகிறது. போலீஸ் இன்ஸ்பெக்டராக நடிக்கும் வி. கோபாலகிருஷ்ணன் அருமையாக நடித்திருக்கிறார்.

அடுத்தபடி நடிப்புக்கு நாயகமாக நிற்பவர், சண்முகசுந்தரம். குடிகாரப் பியூன் சர்க்கரையாகவும், பெரிய கோடீசுவரனாகவும் இரு வேறு இயல்புகளைத் திறமையாகக் காட்டி நன்றாக நடித்திருக்கிறார்.

ஏழைப் பெண் கனகாவாக நடிக்கும் கஸ்தூரி, இன்ஸ்பெக்டரின் மனைவியாக வரும் சசிகலா— இருவரையும் மனம் விட்டுப் பாராட்டலாம். "சீப்ஸ்" நாடகத்தின் நகைச்சுவைப் பகுதியை எம். ஆர். கே.யும் செஞ்சி கிருஷ்ணனும் அற்புதமாகக் கையாண்டிருக்கின்றனர். -காந்தன்

“அறுகால் ஸ்தோத்திரம்”



ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்



“**அ**விநயத்தைப் போக்கு” என்று ஆசார்யாள் பிரார்த்திக்கிறார்கள் என்றால் “விநயத்தை உண்டாக்கு” என்றே அதற்கு அர்த்தம். இப்போது நம்மிடமிருப்பது அவிநயம் தானே? அதனால்தான் அதைப் போக்கு என்று சொன்னார்.

இப்போதெல்லாம் பண்பு, நாகரிகம், கலாசாரம், கல்ச்சர் இந்த மாதிரி வார்த்தைகள் நிறையப் பேசப்படுகின்றன. ஆனால் இது களைச் சொல்லும்போது விநயத்தை முக்கியமான அம்சமாக நினைத்து நாம் பேசவில்லை. முன்காலத்தில் இப்படி யில்லை. அப்போது கல்ச்சர், கலாசாரம் என்றாலே அதற்கு முதல் லக்ஷணமாக விநயத்தைத்தான் நினைத்தார்கள். கல்ச்சர், கலாசாரம் என்ற வார்த்தைகளுக்கும், கல்வி என்ற வார்த்தைக்கும் ரொம்பவும் சம்பந்தம் இருப்பது ‘கல்’ என்பது எல்லாவற்றுக்கும் பொதுவாக இருப்பதிலிருந்தே தெரிகிறது. கல்வி பெற்றவர்கள் தான் Cultured ஆக, நாகரிகமுள்ளவர்களாக இருப்பார்கள். இங்கே கல்வி என்கிறபோது எழுதப் படிக்கத் தெரிவதைச் சொன்னதாக அர்த்தமில்லை. நல்ல விஷய ஞானம் தான் கல்வி. அதை ‘வித்யா’ என்று சொல்வார்கள். அந்த வித்யையின் வாஸ்தவமான பிரயோஜனம் நமக்கு விஷய ஞானம் வந்து விட்டது என்று திமிர் பிடித்து அலையாமல், ‘இன்னமும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது’ என்று அடங்கி, விநயமாக இருப்பதுதான்.

ஆதிகாலத்தில் சிஷ்யனானவன் குருவிடமும், தான் கற்கிற கல்வியிடமும், பகவானிடமும், ஸகல லோகத்திடமுமே அடங்கி விநயமாக இருந்ததால்தான் ஆத்ம வித்யையை யதேஷ்டமாகச் சம்பாதித்து வந்தான். பிரம்மசாரியானவன் குருகுல வாஸம் செய்கிற காலத்தில் அவன் எத்தனை பெரிய மிராசுதார் வீட்டுப் பிள்ளையானாலும் வீடு வீடாகப் போய் ‘பவதி பிக்ஷாம் தேஹி’ என்று பிச்சை எடுத்து வர வேண்டும் என்று வைத்தார்களே, அது முக்கியமாக இந்த அடக்க குணத்தை உண்டாக்கத்தான்.

அந்தக் காலத்தில் குரு, முதல் பாடமாக விநயத்தைத்தான் சொல்லிக் கொடுத்தார். வெறுமே சொல்லிக் கொடுத்தால் வருகிற பாடமா அது? வாஸ்தவமாக அவரே, மாணவர்கள் தாமாக அவருக்கு அடங்கி மரியாதை செலுத்தும்படியான ஆத்ம குணங்களோடு இருந்து வந்தார். இப்போது தாம்பும் அறுதல் தோண்டியும் பொத்தல் என்கிற ஸ்திதியாக இருக்கிறது. இப்படியே ஒரு தேசத்து ராஜாவும் பிரஜைகளின் மற்ற அபிவிருத்திகளைப் போலவே அவர்களை விநயமுள்ளவர்களாக இருக்கச் செய்வதில் கவனம் செலுத்தி வந்தான். சாஸ்திரத்தில் ராஜாவின் கடமைகளைச் சொல்கிறபோது முதலில் “விநய தான”த்தைச் சொல்லிவிட்டு, அப்புறம்தான் “ரக்ஷணம்” “பரணம்” என்பதைச் சொல்லியிருக்கிறது. ஜனங்கள் எல்லோரும் தொழிலில் ஈடுபட்டு, சம்பாதித்து, செல்வச் செழிப்போடு இருக்கப் பண்ணி அவர்களை எப்போதும் தாங்குவது “பரணம்”. உள்நாட்டுக் கலகம், வெளிநாட்டு யுத்தம் முதலியவற்றிலிருந்து அவர்களைக் காப்பது “ரக்ஷணம்”. தற்காலத்தில் ராஜாங்கக் கடமையாக ரக்ஷணமும் பரணமும் மட்டுமே நினைக்கப்பட்டாலும், சாஸ்திரப்படி இதற்கெல்லாம் முந்தி விநய தானம்தான் வருகிறது. அதாவது ஜனங்களை அடங்கியிருக்கும்படி பண்ண வேண்டும். எப்படிப் பண்ணுவது என்றால், **முறையான** கல்வியினால், ஸத் உபதேசத்தினால், மதாநுஷ்டானங்களினால், தெய்வ விச்வாசத்தினால் பண்ண வேண்டும்.


அடக்கம், பணிவு, மிருதுவான நடவடிக்கை, (‘ஜென்டில்மான்’ என்கிறார்களே அதில் உள்ள ‘ஜென்டில்னெஸ்’), பிறத்தியாருக்கு விட்டுக் கொடுக்கிற ஸ்வபாவம், அகங்காரமே இல்லாமலிருப்பது எல்லாம் சேர்ந்ததுதான் விநயம் என்கிற குணம். நிஜமான கல்வி இதை ஊட்டவே ஏற்பட்டது.

இதனால்தான் மாணாக்கன், சிஷ்யன் என்பவனுக்கே “விநேயன்” என்று பேர். எவன் விநயமுள்ளவனோ அவனே ‘விநேயன்’. சிடன் என்பதற்குப் பதில் ‘விநேயன்’ என்றே சொல்வார்கள்.

(தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

"போர்ன்விடா சாப்பிடு, அம்மா.
... அது உனக்கு நல்லது."



"ரொம்ப ருசியாயும் இருக்கும்!"

ஏனென்றால், போர்ன்விடாவில் இப்பொழுது அதிக கோகோ உள்ளது-அதனால்தான் அதிகப்படியான இன்சுவையும் அதிகப்படியான வலிமையும் கிட்டுகின்றன.


போர்ன்விடாவிலுள்ள கோகோவில், இரத்த அமைப்புக்கு அவசியமான இரும்புச் சத்து நிறைந்துள்ளது மற்றும் வைட்டமின்கள் 'பி' மற்றும் 'டி'யும் கால்ஷியம், பாஸ்பரஸ், சோடியம், பொட்டாஷியம் போன்ற விலை மதிப்பற்ற கனிஜ உப்புகளும் அடங்கியுள்ளன. அவை மட்டுமா? போஷாக்கு தரும் கற்பண்புகள் அடங்கிய, மால்ட், பால் மற்றும் சர்க்கரை போர்ன்விடாவில் மண்டிக் கிடக்கின்றன. ஒரு கப் சூடான பாலில் இரண்டு ஸ்பூன் போர்ன்விடா கலந்து, இன்சுவையுள்ள போஷாக்கைப் பருகுங்கள்.

உங்கள் செல்வங்களுக்கு தினமும் இருவேளை போர்ன்விடா வழங்குங்கள். அவர்களுடைய உடல் சீராக வளரத் தேவையான, அசாதாரண போஷாக்கைத் தந்து உதவுகிறது அது. ஏன், அவர்களுடன் ஈடுகொடுக்க, உங்களுக்கும் அது தேவை.

75 பைசா மிச்சம்

போர்ன்விடா 450 கிராம் ரீ:பில் பேக் வாங்கி, 75 பைசா மிச்சப்படுத்துங்கள்! இந்தப் பேக்கைத் திறந்தவுடனே, வழக்கமான போர்ன்விடா டின்னில் அதை நிரப்பி, புதுமை கெடாமல் பாதுகாருங்கள்.





புதிய காட்பரீஸ்

போர்ன்விடா


அதிகப்படியான கோகோ,


அதிகப்படியான வலிமை, அதிகப்படியான இன்சுவை

OBM-6715 TM

ஐயா! கெடிடோபிலா அவர்களே!

தரஜ்ர





இந்தோனேஷியாவில் கவாண்டா என்னும் கிராமத்தில் கெடிடோபிலா என்று பெயர் கொண்ட ஒருவர் இருக்கிறார். அவருக்கு வயது நூற்று எண்பது ஆகிறது. இருப்பினும் இன்னும் திடகாத்திரமாகவே விளங்குகிறார். — பத்திரிகைச் செய்தி

கவாண்டா கிராமப் போஸ்ட்மாஸ்டருக்கு ஆச்சரியமான ஆச்சரியம். காரணம், என்றுமில்லாத வழக்கமாகக் கிழவன் கெடிடோபிலா பெயருக்கு அன்று அரை டஜன் கடிதங்கள் வந்திருந்தன. அத்தனையும் இந்தியாவிலிருந்தே வந்துள்ளன என்பதைத் தபால் தலைகளைப் பார்த்துத் தெரிந்து கொண்டதும் அவரது ஆச்சரியம் பத்து மடங்காயிற்று. 'இந்தியாவிலிருந்து இவருக்கு யார் எழுதப் போகிறார்கள்' என்ற கேள்வி மனத்தில் எழுந்தாலும் அதை அடக்கிக் கொண்டு, கெடிடோபிலா வீட்டில் கடிதங்களைச் சேர்ப்பிக்கச் சொல்லி விட்டுத் தமது வேலைகளில் மூழ்கினார் அவர்.

அந்தக் கடிதங்களில் என்ன அடங்கி யிருந்தது என்பதும் தெரிய வந்திருந்தால் அந்தப் போஸ்ட்மாஸ்டர் மூர்ச்சை போட்டு அப்படியே சாய்ந்திருப்பார் என்பது நிச்சயம்.

இதோ அந்தக் கடிதங்கள்!

கடிதம் — 1

அன்புள்ள திரு கெடிடோபிலா அவர்களுக்கு,
வணக்கம்.

பாராட்டுக்கள். இந்தோனேஷ்யாவின் முதுபெரும் குடிமகனை தங்களது புகழ் இங்கே தமிழகத்தில் எங்களது வாசகர்கள் வரையிலும் பரவியுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நிற்க.

தங்களது நீண்ட வாழ்க்கை வரலாறு மிகச் சுவையுள்ளதாகவும், படிப்பினைகள் நிறைந்ததாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் படிப்பினைகளை யார் இந்தக் காலத்தில் லட்சியம் செய்கிறார்கள்? சுவை — அதுதான் எல்லாருக்கும் தேவை.

தங்களது 180 வருட வாழ்க்கையில் தாங்கள் நடத்திய இல்லற வாழ்க்கை பற்றியும், தங்களது முதல் காதல், இரண்டாம் காதல், எழுபதுக்கு மேல் காதல், சதம் போட்ட பின் காதல் — இவை பற்றியும் சுவைபட (ஆங்காங்கே கற்பனையும் கலந்து) எழுதியனுப்பினால் அதனை 'மாவடு' உண்மைக் கதையாகப் பிரசுரிக்கும். எங்களது வாசகர்கள் தங்களது காதல் விவகாரங்களைப் படித்து மகிழ்வார்கள். இந்தோனேஷிய உண்மைக் கதை ஒன்றைப் பிரசுரித்த பெருமை எங்களுக்குக் கிட்டும். எனவே, உடனடியாகப் பதில் போடக் கோருகிறோம்.

இப்படிக்கு
தங்கண்ட கண்டன் ஆசிரியர், 'மாவடு'

பின்குறிப்பு: கதையை முழுதும் தங்களால் எழுத முடியவில்லை என்றால் குறிப்புக்களாவது எழுதியனுப்புங்கள். அவற்றை விரிவு


படுத்தி, ஜிலுஜிலுப்பூட்டி, உண்மைக் கதை யாகக் கயிறு திரித்துப் பிரசுரிக்க எங்கள் வசம் நிறையப் பேர் — தற்போது வேலை யில்லாமல் — உட்கார்ந்திருக்கிறார்கள்.

கடிதம் — 2

மகாராஜராஜஸ்ரீ கெடிடோபிலா அவர்களுக்கு,

திருக்கோஷ்டியூர் பஞ்சாபகேச சாஸ்திரிகள் எழுதிக் கொண்டது யாதெனில் இங்கு யாவரும் ஸ்ரீ அங்காள கங்காள பரமேசுவரியின் கருணையால் க்ஷேமம். அங்கு தங்களது க்ஷேமத்தையும் தெரியப்படுத்தவும்.

நான் இந்தப் பாரத நாட்டிலே சாஸ்திர முறைப்படி ஸ்ரீ அங்காள கங்காள பரமேசுவரி ரட்சைகள் தயார் பண்ணி மகாராஜாக்கள், பிரபுக்கள், தனிகர்கள் ஆகியோர்களுக்குக் கொடுத்து வருகிறேன். (ரட்சை ஒன்றின் விலை ரூ. 333.63 ராகண காலத்தில் தயார்



செய்யப்பட்ட ரட்சை விலை ரூ. 666.99. தபால் செலவு தனி.)

இப்போது எனக்குத் தேவரீர் உதவி தேவைப்படுகிறது. தங்களது நீடித்த ஆயுள், ஆரோக்கியம், சந்தான பாக்கியம், இதர தன—தான்ய—க்ஷேம—லாப சௌக்கியங்களுக் காக நான் தயாரித்துக் கொடுத்த விசேஷ ரட்சையை (விலை ரூ.999.66) தாங்கள் கடந்த 160 வருட காலமாக அணிந்து வந்துள்ளதாகத் தங்கள் கைப்பட ஒரு சான்றிதழ் தேவை. வேறு எதற்கோ என்று எண்ண வேண்டாம். தங்களது சான்றிதழைப் போட்டு விளம்பரம் பண்ணினால் அதேபோல் ரட்சை கேட்டு, பத்துப் பதினைந்து அஜங்கள் பணம் அனுப்பி வைக்கும். அதற்காகத்தான்.

சிரமத்தைப் பாராமல் மறு தபாலில் பதில் போடவும்.

தங்கள்,

ஜோதிட சிகாமணி, ரட்சை ராட்சசன்
பஞ்சாபகேச சாஸ்திரிகள்

கடிதம்—3

உயர்திருவாளர் கெடிடோபிலா அவர்களே,

வாலிப வயோதிக அன்பர்களே நிறைந்திருக்கும் இந்த உலகத்தில் தாங்கள் வயோதிக வாலிபராக வல்லமையுடன் விளங்குவது என்னைப் போன்ற சித்த வைத்தியர்களையெல்லாம் பூரிப்படையச் செய்கின்றது.

உங்கள் வாலிபம் மற்றும் நீண்ட ஆயுளுக்கு ஏதாவது லேகியம், பஸ்பம் அல்லது சூரணம் தான் காரணமாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அந்த மருந்து என்ன, அதைச் செய்யும் முறை எப்படி என்றெல்லாம் தயவு செய்து எனக்கு விளக்கமாக எழுதி உதவினீர்களானால் நானும் லட்சக்கணக்கான வாலிப வயோதிகர்களும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

நான் தயாரித்து விற்பனை செய்து வரும் பருந்து லேகியம் மற்றும் பவழ பஸ்பம் பற்றித் தாங்கள் கேள்விப்பட்டிருக்கக் கூடும். தலா ஒவ்வொரு டின் தனித் தபாலில் அனுப்பியிருக்கிறேன். சாப்பிட்டுப் பாருங்கள்.

நேரிலேயே வந்து தங்கள் வாய் மூலமாகவே தங்களது இளமையின் ரகசியத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எனக்கு ஆவல்தான். ஆனால் எனது மாதாந்தரச் சுற்றுப் பயணத்தில் இந்தோனேஷியா இடம் பெறுததால் வர இயலவில்லை. மன்னியுங்கள்.

லேகியக் குறிப்பு எழுதும் போது பத்தியம் பற்றிக் குறிப்பிட மறக்காதீர்கள்.

இப்படிக்கு,

சித்த வைத்தியப் பித்தர்
பரங்கிப்பேட்டை மாரிசாமி

கடிதம் — 4

அன்புமிகுந்த கெடிடோபிலா அவர்களுக்கு,

எங்களது சரஸ்வதிபுரம் இளைஞர் மன்றச் சார்பில் முதலில் எங்களது பாராட்டுக்கள். எங்கள் மன்றப் புகழ் கடல் கடந்து உங்கள் காதையும் எட்டியிருக்கும் என்று நம்புகிறோம்.

எங்கள் மன்றத்தில் அணு ஆயுதப் பிரச்னைகள் முதல் அமாவாசைத் தர்ப்பணம் வரை பல்வேறு விஷயங்கள் பற்றி அந்தந்தத் துறையில் அனுபவம் வாய்ந்த அறிஞர்களைக் கொண்டு (சராசரி வயது: 89) அவ்வப்போது உரைகள் நிகழ்த்தி வருகிறோம். அந்த வகையில் வருகிற ஏப்ரல் 21-ம் தேதியன்று ''பற்களின் பாதுகாப்பு'' என்ற தலைப்பில் தாங்கள் உரை நிகழ்த்த முடியுமா?''

தங்களது உரையினால் எங்களுக்கு மூன்று வித நன்மைகள் உண்டாகும்: 1. எங்களது மன்ற உறுப்பினர்களின் ஆடிக் கொண்டிருக்கும் பற்களுக்கு விமோசனம் பிறக்கும். 2. எங்களது பொது அறிவு விசாலமடையலாம். 3. தாங்கள் பிரசன்னமாகியிருக்கும் போது தங்கள் முன்பு நாங்கள் எங்களது மன்றப் பெயருக்கேற்ப இளைஞர்களாகவே காட்சியளிப்போம்.

தவறாமல் உரை நிகழ்த்த வருவீர்கள் என்று நம்புகிறோம்.

அன்புடன்,
கோபால தேசிகன், செயலாளர்

கடிதம் – 5

மதிப்புக்குரிய கெடிடோபிலா அவர்களுக்கு,

வணக்கம். தாங்கள் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.

நாங்கள் தயாரிக்கவிருக்கும் வண்ணத் தமிழ்ப் படத்தில் (குடுகுடு கிழவனும் குமரிப் பெண்களும்) ஹீரோவாக நடிக்கத் தாங்களே ஏற்றவர் என்று எங்கள் கதாசிரியரும் டைரக்டரும் அபிப்பிராயப் படுகிறார்கள். தாங்கள் தினசரி குளிப்பதற்காக ஆற்றங்கரைக்குச் செல்வதாகவும் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. எனவே குளத்தில் கதாநாயகி தன் தோழிகளுடன் குளித்துக் கொண்டிருக்கும் போது நீங்கள் தமாஷாக வம்பு செய்யும் காட்சியையும், இரண்டு டூயட்களையும் தத்ரூபமாக எடுத்து விடலாம். இதர காட்சிகளில் நடிப்பதைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டியதே இல்லை. படம் முழுதும் கதாநாயகன் (அதாவது தாங்கள்) சக்கர நாற்காலியில் உட்கார்ந்து வசனம் பேசுவதாகத்தான் காட்சிகளை அமைக்க உத்தேசித்திருக்கிறோம். (அதுதான் இந்தப் படத்தில் புதுமை.)

இந்தியாவுக்கு வந்து தங்களால் நடிக்க முடியாதென்றால் சொல்லுங்கள். நாங்களே அங்கு புறப்பட்டு வருகிறோம். (உங்கள் ஊரில் நல்ல கதைகள் கிடைக்குமானால் யாரிடமாவது கேட்டு வைத்துக் கொள்ளுங்கள். நம்ம படத்துக்கான முழுக்கதையும் இன்னும் தயாராகவில்லை.)

தங்களது பதில் கண்டபிறகே பாஸ்போர்ட் ஆகிய விவகாரங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் மறு தபாலில் பதில்.

இங்ஙனம்
அரு.சொ.அரு. பழனியப்பன், அறுதலை மூவீஸ்

கடிதம்–6

வணக்கம் வாத்தியாரே!

கிஷ்ணாம்பேட்டை கன்னியப்பன் எளுதிக் கொண்டது. நீ சொகமா கீறியா? வூட்லே சௌக்கியமா? அத்தினி புள்ளைங்களும் நல்லா இருக்குதுங்களா?

வாத்யாரே, உன்னண்டை அட்வைஸ் கேட்கலாம்னுதான் இ(த்)தை எளுதரேன். உன்னோட 180 வயசிலே எத்தினியோ பொம்பளைங்களைக் கல்யாணம் கட்டிகிட்டு இருப்பே. ஒரே சமயத்தில் ரெண்டு, மூணு சம்சாரம் கூட இருந்திருக்கும். நீ எப்படி ஐயா சமாளிச்சே? அதைச் சொல்லு மச்சான். நான் தெரியாத்தனமா ரெண்டைக் கட்டிக்கினு (அக்கா–தங்கச்சிதான் ரெண்டும்) அவஸ்தைப் பட்டுக்கினு கீறேம்பா. பொளுது விடிஞ்சதிலேர்ந்து ராவு தலையைச் சாய்க்கிற வரைக்கும் இவ மாத்தி அவ கூச்சல் போட்டுகினே கீறு. அப்பப்போ சட்டி முட்டியைத் தூக்கிப் போட்டு உடைக்கிறாளுவ.

நீ எப்படிப்பா இத்தினி நாளு உன் பொஞ்சாதிங்களோட மல்லுக் கொடுத்துகினு இருந்தே....? வெவரமா எளுதினா எனக்கு உபயோகமா இருக்கும். அத்தோட, ரெண்டு பேருக்கும் பொடவை, ஜாக்கெட்டு, வளையல், மசால்வடை இதெல்லாம் வாங்கற போது எப்படியெல்லாம் நாம முன்ஜாக்கிரதையா இருக்கணும்கிறதைப் பத்தியும் நாலு வரி எளுதிப் போடு. நயினா.... உன்னை மறக்கவே மாட்டேன்.

இன்னும் இன்னு இன்னுவோ கேட்கணும் போல் இருக்கு.... ஆனா அதுக்குள்ளாறே அந்த ரெண்டு கயிதேங்களும் கூச்சல் போடறது காதிலே விளுது. நான் போய் மத்தியஸ்தம் பண்ணணும். அதனாலே நிறுத்திக்கறேம்பா,

உன் அன்புத் தம்பி,
கன்னியப்பன்

காது கேளாமல் பாரை வென்றவர்!



பீதோவன் ஒரு சிறந்த பாடகராகத் திகழ்ந்திருக்க வேண்டியவர். ஆனால் இவர் வயதுடன் போட்டி போட்டுக் கொண்டு இவரது காது கேளாத் தன்மையும் கூடவே வளர ஆரம்பித்தது. ஆகவே சாகித்தியங்களை அமைப்பதில் ஈடுபட்டார்.

அவர் முழுச் செவிடரானபோது அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ஒன்பதாவது ஸிம்பனியும் இதர சாகித்தியங்களும் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டன. அவரால் அவரது சாகித்தியங்களின் ஒலியைக் 'கேட்டு' மகிழ முடியாது போனாலும், அதைக் கேட்பவர்களின் முகங்களில் பரவிய ஆனந்தத்தைக் 'கண்டு' மகிழ்ந்தார்! -மேனு

வீட்டிற்குள்ளே வெளியுலகப் புத்துணர்ச்சியை

நுகர

டி-ஒடோர்


ஏர் ஃப்ரெஷ்னர்

டி-ஒடோர்—உங்கள் இல்லம் புது மணங்கமழ அருமையான வழி.

மூன்று வித நறுமணங்களில் கிடைக்கின்றது—லாவண்டர், ஜாஸ்மின் மற்றும் மோக்ரா.



IMPRESSIONS



யூக்ளிட் என்ற கணித மேதையின் பெயராலேயே அந்த நாளில் குறிப்பிடப்பட்ட ஜியோமிதி ராஜனுக்குப் பிடித்தமான பாடம். அவனுக்கு ஞாபகசக்தி மிகுதி. கணிதத்தில் குறுக்கு வழிகள் பலவற்றைக் கற்றான். பௌதிகம் போதித்த குக் காரணமாக அவனுக்கு விஞ்ஞானத்தில் தாற்காலிக உற்சாகமின்றிச் சாசுவதமான ஆர்வமே ஏற்பட்டது.[1] கோபக்காரரானாலும் குக் நல்லெண்ணம் படைத்தவர். பல பரிசோதனைகளில் ஈடுபடுவார். எக்ஸ்ரே கண்டு பிடிக்கப்பட்ட போது அந்தப் புதிய கதிர்களை வைத்துத் தாம் செய்த பரிசோதனைகளின் பலனாகத் தமது புறங்கைகளில் ரோமமே இல்லாமல் போனதை அவர் ராஜனுக்குக் காட்டினார்.

விஞ்ஞானத் துறைக்கே ராஜனை அவர் ஈர்க்கப் பார்த்தார். ஆனால் ராஜன் விஞ்ஞானத்தில் ஆர்வமுடையவனாய் இருந்தும் அந்தப் பாடத்தை ஆழ்ந்து படிக்க இணங்காததுடன் மறுத்தும் விட்டான். ஆத்திரம் அடைந்த குக் ராஜனைப் பார்த்து, ''போக்கிரி! மோசக்காரா! சோம்பேறி'' என்றெல்லாம் கத்துவார்.[2] ராமராவுக்கு விளையாட்டுக்களில் அபரிமித ஈடுபாடு. நட்புக்காக ராஜனும் விளையாட்டுக்களில் சிரத்தை எடுத்துக் கொள்ள முயன்று ஓரளவு வெற்றி கண்டான்.[3]

பேராசிரியர் ஊன்றிய விதை

இலக்கியங்களை டெய்ட் அறிமுகப்படுத்தி வைத்தார் என்றால் அந்த இலக்கியங்களே சுதந்திர உணர்ச்சியை ராஜனுக்கு அறிமுகப்படுத்தின. பிரிட்டிஷ் ஆட்சியில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்த டெய்ட் அந்த ஆட்சியின் பயனாகக் கிடைத்த உயர்ந்த மனிதர்களுள் ஒருவர். ஆக இன்று யோசித்துப் பார்த்தால் டெய்ட் ராஜனை வென்றது அவனை இழப்பதற்காகவே என்று தோன்றுகிறது. பிற்காலத்தில் டெய்ட் ஊரிலிருந்து வந்து தம்மிடம் படித்த ராஜனை எண்ணி ஆழ்ந்த வருத்தத்துக்குள்ளானார். பிறகு அது பெருமையாகவும் மாறியது. ஆனால் இந்தக் கணத்தில் விதை மட்டுமே ஊன்றப்பட்டிருந்தது. ஆசிரியரோ அல்லது மாணவனோ அது புரட்சி என்னும் முட்செடியாக முளைவிட்டு வளரும் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை — ஆம், டெய்ட் நோக்கில் அது முட்செடிதானே?

கல்லூரியிலிருந்த அனைத்தையும் ராமராவும் ராஜனும் நுணுக்கமாய் அறிந்திருந்தனர். புல் தரை, கிரிக்கெட் மைதானம், அவற்றைச் சுற்றிலுமிருந்த முதிர்ந்த மரங்கள், மிக எளிய தோற்றமுடைய சிவப்புக் கல்லூரிக் கட்டிடம், அதன்மேல் ஏகாந்தமாய் நின்று அனைத்தையும் கண்காணித்து வந்த கடிகாரக் கூண்டு போன்ற அனைத்திடமும் அன்பு செலுத்தினர்.[4] அக்கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகத்துடன் அன்று ஒன்றியிருந்ததால் 1896 ஜனவரி மாதம் தனது

1. மத்தியக் கல்லூரி பழைய மாணவர்கள் கூட்டத்தில் ராஜாஜி பேசியது 1937.
2. Felton, I meet Rajaji. P. 23.
3. Our College Reminiscences.
4. மேற்படி.



ராஜாஜி
வாழ்க்கை வரலாறு



× பால கங்காதர திலகர்

பதினேழாவது வயதில் ராஜன், ஆங்கிலம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய மூன்று துறைகளி லும் பி. ஏ. பரீட்சையைச் சென்னையில் தான் எழுதினான்.

அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று எல்லாவற்றையும் கடைசி வினாடி வரை ஒத் திப் போட்டிருந்தான் ராஜன். இதனால் ருக் ரொம்ப வெறுப்பு அடைந்திருந்தார். இப் போது சென்னையில் ஒரு விடுதியில் தன் தகப்ப னருடன் தங்கியிருந்த ராஜன் இரவு நீண்ட நேரம்வரை உட்கார்ந்து மறுநாள் நடக்க விருந்த பௌதிகப் பரீட்சையின் இரு பிரிவு களுக்காகவும் விஞ்ஞான உண்மைகளை மன னம் செய்து கொண்டிருந்தான். ஒரு பிரிவுக் கான பாடங்களை ராஜன் படித்து முடித்ததும் தகப்பனார் அவனைப் படுத்துக் கொள்ளச் சொல்லி விட்டார்.

தமிழில் தோல்வி!

எனவே நிலை இயலில் அதிக தேர்வு எண் பெற்றவன் இயங்கு இயலில் பூஜ்யம் பெற் றான். மொத்தத்தில் விஞ்ஞானப் பாடங்களில் 400-க்கு 218 பெற்று இரண்டாவது வகுப் பில் தேறி விட்டான். தமிழுக்கு ஒதுக்கப் பட்ட நேரங்கள் வேடிக்கை விளையாட்டுக் களில் கழிந்திருந்தன. எனவே, பிற்காலத்தில் இம்மொழியைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்ற நுண்கலைஞன் எனப் பெயரெடுக்கப் போகிற ராஜன் இன்று பரீட்சையில் தோல்வியே கண்டான். ஆங்கிலத்திலும் அவன் இரண்டாவது வகுப்பில்தான் தேறி னான் என்றாலும் அதில் பல்கலைக் கழகத்தி லேயே ஐந்தாவது இடம் பெற்ற மாணவனாக விளங்கினான். ஆங்கிலத்தில் அவன் மதிப் பெண்கள் 240-க்கு 138. பல ஆண்டுகளுக் குப் பிறகு மத்தியக் கல்லூரியில் நடந்த ஒரு கூட்டத்தில் முதல்வர் ஏ. பி. மாகின் டாஷ் ஆங்கிலத்திலும் விஞ்ஞானத்திலும் முதல் மாணவனாகத் தேறியதற்காக ராஜா ஜிக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.[5] மத்தியக் கல்லூரி மாணவர்களைப் பொறுத்த மட்டில் ராஜன் முதலிடம் பெற் றிருக்கலாம். தமிழ்ப் பரீட்சையில் அவன் தேறவில்லை யென்றாலும் ராஜன் ஒரு பட்டதாரி என அறிவிக்கப்பட் டான்.

சட்டத்துறை மாணவன்

சம காலத்தில் வாழ்ந்த அறிவில் சிறந்த பலரைப் போல் ராஜனும் சட்டம் பயிலவே எண்ணினான். சென்னையில் படிக்கலாம். ஆனால் அந்நகரில் இன்னமும் சட்டக் கல்விக்கு என்று தனிக் கல்லூரி தோன்றவில்லை. சென் னைப் பல்கலைக் கழகத்தின் பெருமிதத்துக்குரிய காட்சிப் பொருளாக விளங்கிய செனட் ஹவுஸில் அத்துறைப் பாடம் போதிக்கப் பட்டது. 1879ல் பூர்த்தியான இக்கட்டிடம் நான்கு கோபுரங்களைக் கொண்டது. சித்திர அலங்காரமாக வண்ணக் கண்ணாடிகள் பதிக் கப்பெற்ற ஜன்னல்களையுடையது. ஐரோப் பிய, இஸ்லாமிய, ஹிந்து பாணிகளை இணைத்த



× விவேகானந்தர்

கட்டடக் கலை. இதன் கம்பீரத்தை அதி கரித்தது, மேல் விதானத்துடன் கூடிய விக் டோரியா மகாராணியின் சிலை.

1896ம் ஆண்டு தொடக்கத்தில் ராஜ னுடைய சட்டக் கல்வி ஆரம்பமாயிற்று. அவன் வகுப்பில் அணிந்திருந்த உடை பல்கலைக் கழகத்தின் அன்றைய விதிமுறை களின்படி அமைந்திருந்தன. இந்திய பாணி யில் உடுத்துப் பழகிய பட்டதாரிகள் வெண் ணிற ஆடையே அணிய வேண்டும். வெள்ளை, சிவப்பு அல்லது கறுப்பு டர்பன் தரித்திருக்க வேண்டும். அதில் தங்கச் சரிகைக் கரை இருக்கலாம்.[6]

மூன்று பிரிவுகளாக அமைந்த ஒன்றரை ஆண்டு காலத்துக்கு வகுப்புக்களுக்குப் போய் வந்தால் முதல் பரீட்சை எழுதலாம். மேலும்

---

5. Report of college day celebrations Central College Dec. 1937 P. 14.
6. The Calendar far 1898 - 99, University of Madras, 1898, p. 130.

ராஜ்மோகன் காந்தி

மூன்று காலப் பிரிவுகளுக்குப் பிறகு அவன் பி. எல். பரீட்சை எழுதலாம்.

தமிழில் ராஜன் தோல்வி கண்டிருந்ததால் முதல் இரு காலப் பிரிவுகளுக்கு அவன் ராஜதானி கல்லூரியில் தமிழ் விரிவுரைகளைக் கேட்க நேர்ந்தது. மறுபடியும் பரீட்சை எழுதவும் வேண்டியிருந்தது. 1897 ஜனவரியில் இந்தத் தடங்கலை மயிரிழையில் கடந்து சமாளித்தான். தேர்வு எண்கள் 120க்கு 46. 'தமிழ்ச் சனியனிடமிருந்து ஒரு வழியாக விடுபட்டு வந்து விட்டேன்' என்று தன் தகப்பனாரிடம் அவன் கூறினான்.

விவேகானந்தர் விஜயம்

ஓசூரிலிருந்து வந்த இளைஞனுக்கு வகுப்புக்கள் பிரமாதமான சூழ்நிலையில் நடந்தன என்றால், மைசூரிலிருந்து வந்த மாணவர்களுக்காகப் பிலிகிரி அய்யங்காரால் நடத்தப்பட்ட விடுதியும் மனம் கவரும் வகையில்தான் இருந்தது. அந்தப் பதினெட்டாம் நூற்றாண்டுக் கட்டிடத்துக்குக் கெர்னன் கோட்டை என்று பெயர். ஐஸ் ஹவுஸ் என்றே பரவலாக மக்கள் இதனைக் குறிப்பிடுவார்கள். சென்னை வாழ் பிரிட்டிஷாருக்கு விஸ்கியைக் குளிர வைக்கும் ஐஸ் இங்குதான் சேமித்து வைக்கப்பட்டது. இந்தப் பனிக்கட்டிகளை வட, தென் அமெரிக்காவிலிருந்து நன்நம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு வரும் கப்பல்கள் சுமந்து வந்தன. இருபதாம் நூற்றாண்டில் இதே கெர்னன் கோட்டை முதலில் சகோதரி சுப்புலக்ஷ்மி நடத்திய விதவைகள் இல்லமாகவும் பிறகு ஆசிரியைப்பயிற்சிக் கல்லூரியின் மாணவிகள் விடுதியாகவும் மாறியது.

ராஜன் அவ்வப்போது டெய்ட்டிடமிருந்து உதவி பெறுவது இன்னமும் நிற்கவில்லை. தேகப் பயிற்சியை உத்தேசித்தோ அல்லது உல்லாசத்துக்காகவோ அவன் மெரினா மணற்பரப்பில் ஓடினான். ஒரு சமயம் இவனும் நண்பர்களும் படகில் ஏறிக் கடலில் சென்றபோது அது ஒரு புயலில் சிக்கி அநேகமாகக் கவிழ்ந்துவிடும் நிலைக்கு வந்து விட்டது. அந்த அபாயத்திலிருந்து ராஜன் தப்பியது புனர் ஜன்மம்தான்.

1896ல் மைசூரைச் சேர்ந்த ஓர் இளம் பொறி இயலாளர் ஐஸ் ஹவுஸுக்கு விஜயம் செய்தார். அப்போது அவர் சிந்து சமவெளிப் பகுதியில் வேலை பார்த்து வந்தார். எதிர்காலத்தில் பெரும் சாதனைகளைப் புரியப் போகிற விசுவேசுவரய்யாதான் அவர். இன்னொரு விருந்தினர் சுவாமி விவேகானந்தர். இவர் 1897 ஜனவரியில் வந்தார். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வெற்றிகள் பல பெற்ற கையோடு இங்கு வந்திருந்தார். சுவாமிஜியின் கரிய ஒளி பொருந்திய விழிகளைக் கவனித்த ராஜனால் பிறகு அவற்றை மறக்கவே முடியவில்லை.[7] ''கிருஷ்ணனை ஏன் நீல வண்ணமுடையவனாகச் சித்திரிக்கிறோம்?'' என்று சுவாமிஜி ஒரு கூட்டத்தில் கேட்டாராம். ராஜன் உடனே கரத்தை உயர்த்தினான். கூடவே அவன் குரலில் பதில் ஒலித்தது: ''எல்லையற்ற வானமும் கடலும் நீல நிறமாக இருப்பதால்.''

பொன் விழா

1897ல் விக்டோரியா மகாராணி பொன் விழா கொண்டாடினார். இதற்கு இருபதாண்டுகளுக்கு முன்பு சென்னையில் ஸ்தாபிதமான 'ஹிந்து பத்திரிகை' பொன் விழா தொடர்பாக எழுதியது: ''ராஜ கம்பீர மிக்க அரசியைக் கோடானு கோடி ஹிந்துக்கள் ஆசி கூறி வாழ்த்துவதானது எங்கு பார்த்தாலும் எதிரொலிக்கிறது. ஒவ்வொரு ஹிந்துக் கோவிலிலும் வீட்டிலும் பக்தி மிக்க ஹிந்துக்களின் உள்ளங்களில் மட்டுமே பொங்கி எழக் கூடிய பிரார்த்தனைகள் அரசியை முன்னிட்டு ஆண்டவனின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கப்படுகின்றன. கருணையும் கண்ணியமும் மிக்க அரசிக்கு அருள் புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை அவர்கள் வேண்டுகின்றனர்...[8]

ஹிந்து நிலைமையை மிகைப்படுத்தி விட்டிருந்தது. உண்மையில் பந்தங்கள் இவ்வளவு அந்நியோன்யமாக இருக்கவில்லை. 1885ல் ஆங்கிலேயர்களும் இந்தியர்களும் அடங்கிய குழு ஒன்று இந்திய தேசிய காங்கிரஸை அமைத்தது. பிரதிநிதித்வ சர்க்கார் அமைக்க வேண்டும் என்று வெள்ளைக்கார எஜமானர்களிடம் பல தடவை மனுச் செய்து கொண்டிருந்தது. ஆனால் லவலேசமும் பலன் கிட்டவில்லை. சென்னை கவர்னர் வென்லாக் பொருளாதார அநீதிகளைக் கண்டார். ஹிந்துப் பத்திரிகையின் துதிப் பாடலுக்கு ஓர் ஆண்டு முன்னதாக அவர், பிரிட்டிஷ் அமைச்சரவையின் இந்திய விவகாரங்கள் மந்திரி ஹாமில்டன் பிரபுவுக்கு எழுதினார்:

''லங்காஷயர்தான் இந்தியாவை ஆள்கிறது (லண்டன் அல்ல) என்பது வெட்கப்பட வேண்டிய பயங்கரமான விஷயம்.... இந்தியாவை நாம் ஆள்வது இந்தியாவின் நலனுக்குத்தான், இங்கிலாந்தின் நலனுக்காக அல்ல என்று நம்ப வைப்பது ரொம்பக் கஷ்டம்.''[9]

அதிருப்தியைத் தெளிவாக வெளியிட்ட குரல் பால கங்காதர திலகருடையது. ராஜதுவேஷக் குற்றத்துக்காக நடந்த வழக்கு அவரைப் பெரிய வீரராக்கியிருந்தது. அதன் முடிவில் பூனா நகரில் தோன்றிய இத்தலைவர் பதினெட்டு மாதச் சிறை தண்டனை பெற்றார். அது விக்டோரியாவின் பொன் விழா ஆண்டில் தான். ஓராண்டுக்குப் பிறகு—திலகரின் தண்டனை முடிய இன்னும் ஆறு மாத காலம் பாக்கியிருந்த சமயத்தில் — ஒரு நாள் ராஜன் மாலை நேர விரிவுரையைக் கேட்டுக் கொண்டிருந்தான். அப்போது நண்பன் ஜி. ஏ. நடேசன், திலகர் விடுவிக்கப்பட்டதை அறிவித்த சுவரொட்டியொன்றுடன் ஓடி வந்தான். ராஜனுக்கு மேனி சிலிர்த்தது. மறக்க முடியாதபடி அச்செய்தி அவன் மனத்தில் பதிந்தது.[10]

---

7. Letter from CR to Angri, Feb. 1966.
8. *The Hindu*, June 22, 1897.
9. 6-2-1896, from Wenlock papers, India Office Library, London.
10. CR in *Sixty Years After*, Compiled by B. Natesan, Madras, 1933.

ப்ரூ: அதன் சுவையே தனி,
ஸ்ட்ராங்கானதில் அது பாங்கானது



சிறப்பான காபி
விரும்பும் அனைவருக்கும்
ப்ருவின் தனிப்பட்ட சுவை, அதற்கு நாடெங்கும் மகத்தான வரவேற்பு அளித்திருக்கிறது. மேலும் இன்ஸ்டன்ட் காபிகளில் இதற்கு முதன்மையான இடம் அளித்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் அதன் தனிப்பட்ட சுவையும் ஸ்ட்ராங்கான குணமும் வெகுவேகமாகப் பரவுகிறது. ஒவ்வொரு முறையும் ப்ருவின் சுவையும் மணமும் குணமும் உங்களுக்கு நிறைவையே தரும், இன்றே ப்ரு காபி பருகிப்பாருங்கள்.



தென்னிந்தியாவின் முதன்மையான இன்ஸ்டன்ட் காபி ப்ரு
வெகுவேகமாக நாடெங்கும் எல்லோரும் விரும்பும் காபியாகி வருகிறது.

OBM-4756A/3 TAM

உங்கள் குடும்பத்திற்கு உற்சாகம் பொங்கும் ஆரோக்கியமும், அதிகப்படி சக்தியும் இதோ!



வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக், இன்றியமையாத 12 சேர்க்கைப் பொருள்கள் சமசீராக அடங்கப் பெற்ற டானிக்காகும். வளர்ச்சிக்கும், சக்திக்கும் விட்டமின்கள். இரத்த ஆரோக்கியத்திற்கு, இரும்புச் சத்து பசியைத் தூண்டுவதற்கான ஊக்கப் பொருள்கள். தவிர, அது அருமையான சுவையுமுடையது.

உங்கள் குடும்பத்திற்கு வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் வாங்குங்கள். இப்பொழுதே.




மஞ்சள் லேபிளை நாடுங்கள்


வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக்

குடும்பம் முழுவதற்கும் பரிபூரணமான டானிக்

Grant.11 TM

செய்திமணிகள்





- 'கறுப்பு அழகி'களுக்கான போட்டியில் ''ஜான்ஸி கி ராணி'', ''பஞ்சிம் பிரதாப்'' ஆகியவை முதல் பரிசைப் பெற்றன. 'பாவன் நீட்', 'ஷ்யாமா' ஆகியவை இரண்டாவது பரிசைப் பெற்றன. இவற்றுக்கு முறையே தலா ரூ. 600ம், ரூ. 400ம் பரிசுத் தொகைகளாக வழங்கப்பட்டன. கறுப்பு அழகி போட்டி என்றதும் ஏதோ இளம் அழகிகள் அணிவகுப்பு என்று ஏமாந்து விடாதீர்கள்! ரயில்வேக்களுக்கு இடையிலான நீராவி எஞ்சின்களுக்கு நடத்தப்பட்ட போட்டியே இது.

- பார்வை இழந்தவர்களும் கையில் கடிகாரங்களைக் கட்டிக்கொண்டு சரியான நேரத்தைச் சொல்லும் காலம் வந்து விட்டது. உண்மை தான். 'பிரெய்லி' என்ற பெயரில் இந்த மாதம் விற்பனைக்கு வரும் இந்தக் கைக் கடிகாரங்கள் பார்வை இழந்தவர்களுக்கென விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் முதன் முறையாக இந்தக் கைக் கடிகாரங்களை பெங்களூரில் உள்ள 'ஹெச்.எம்.டி. நிறுவனம் தயாரித்துள்ளது. ஐப்பானுக்கு அடுத்தபடியாக, ஆசியாவில் இந்தக் கடிகாரங்களைத் தயாரித்துள்ள ஒரே நாடு என்ற பெருமை இந்தியாவைச் சேரும். வழக்கமான கைக் கடிகாரங்களின் அளவில் உள்ள இதில் 'ப்ரெய்லி' புள்ளிகளும், ஒரு பிரஸ் பட்டனும் உள்ளன. பிரஸ் பட்டனை அழுத்தியதும் மேல் மூடி திறக்கும். பார்வை இழந்தவர்கள் கைக்கடிகாரத்தின் உட்பகுதியில் உள்ள 'ப்ரெய்லி' புள்ளிகளைத் தடவிப் பார்த்துச் சரியான நேரத்தைச் சட்டென்று சொல்லி விடலாம். விலை ரூ. 160.

- நம் நாட்டில் மருந்து, மாத்திரைகளின் உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு 'மளமள'வென்று உயர்ந்து வருகிறது. 1976-77ம் ஆண்டில் முதல் 9 மாத காலத்தில் 385.27 டன்கள் 'வைட்டமின்' மாத்திரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மீதியுள்ள மூன்று மாதங்களிலும் சேர்த்து இந்த அளவு 530 டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- பீடித் தொழில் நம் நாட்டின் முக்கிய குடிசைத் தொழில்களில் ஒன்று என்பது தெரியும். ஆனால் எத்தனை பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரியுமோ? 20 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள்.

- நில உச்சவரம்பு அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 22 மாநிலங்களிலும் சேர்ந்து மொத்தம் 29 லட்சத்து 8 ஆயிரத்து 612 ஏக்கர் நிலங்கள் கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் தமிழ் நாட்டில் 44 ஆயிரத்து 535 ஏக்கர் நிலங்கள் கூடுதல் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் கூடுதல் என்று அறிவிக்கப்பட்ட நிலங்களில் இதுவரை 10 லட்சத்து 51 ஆயிரத்து 574 ஏக்கர் நிலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் 6 லட்சத்து 78 ஆயிரத்து 687 பேர் பலன் அடைந்துள்ளனர்.

முளை விட்ட விதை

பிரிட்டிஷ் ஆட்சியின் சில அம்சங்கள் மாணவப் பருவ ராஜனுக்குப் பிடித்துத்தானிருந்தன. பிரிட்டிஷ் ஆட்சி பற்றிப் பெருமையுற்றிருந்த டெய்ட்டிடம் ராஜனுக்கு அளப்பரிய பக்தி. இருப்பினும் ராஜன் சுய கௌரவம் சொடுக்குக் கொடுப்பதை உணர்ந்தான். டெய்ட் எந்தெந்த நூல்களை அவனுக்குச் சிபாரிசு செய்திருந்தாரோ அந்த நூல்களின் கதாநாயகர்கள் எல்லாம் தன்மானத்துக்காக, தேசத்தின் கௌரவத்துக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராக இருந்தார்கள். பெங்களூரில் அவன் ஆன்மாவுக்குள் மெல்லப் புகுந்த விதை இப்போது முளை விடத் தொடங்கியிருந்தது. ஆனாலும் அதனை ராஜன் இன்னும் முழுமையாக உணரவில்லை.

நாலு மாதங்களுக்குமுன் 1898 மே மாதத்தில் அவன் சட்டப் படிப்பின் முதல் பரீட்சையில் இரண்டாவது வகுப்பில் தேறியிருந்தான்.

இந்தப் பரீட்சையை அவன் மே, 1897லேயே ஏன் எழுதவில்லை என்பது தெளிவாக இல்லை. அதற்குள் பரீட்சை எழுதத் தேவையான கால அளவுக்கு அவன் வகுப்புகளுக்குச் சென்று வந்திருக்க முடியும். ஓராண்டு தாமதத்துக்குக் காரணம் தெளிவாகாவிட்டாலும் ஒரு குறிப்புக் கிடைத்திருக்கிறது. அவன் குடும்பத்துக்கு இச்சமயம் பணம் தேவைப்பட்டது. அதைச் சம்பாதிக்க ராஜன் உயர்நீதி மன்றத்தில் ஒரு வெள்ளைக்காரரிடம் நகல் எடுப்பவனாகவும் மொழிபெயர்ப்பாளனாகவும் பணியாற்றினான்.

ஆனால் இது சென்ற வருஷத்திய கதை. இப்போது ராஜன் சட்டப் படிப்பின் முதல் பரீட்சையில் தேறிவிட்டான். சீக்கிரமே அவன் மதிப்பு மிக்க பி. எல். பட்டமும் பெற்று விடுவான். ஆனால் அதற்கு முன் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. (தொடரும்)

(தமிழாக்கம்: வி. ராஜேந்திரன்)

KTR

- கோபுர மார்க் பன்னீர்
- சந்தனாதித் தைலம்
- பொன்னாங்கண்ணித் தைலம்
- லவ் பேர்ட்ஸ் பத்தி

FILMNEWS ANANDAN

கோடை
பலாச்சுளையோ?
குலைசேர்ந்த
மாங்கனியோ?



KTR
வாசனாத்
திரவியசாலை
திருவாரூர்-610108 (தமிழ்நாடு)

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

அத்தியாயம் 10

காட்டாற்று வெள்ளம்

சென்ற அத்தியாயங்களின் சம்பவங்களும், சம்பாஷணைகளும் வாசகர்களில் சிலருக்கு விசித்திரமாய்த் தோன்றுவதுடன், சில விஷயங்கள் விளங்காமலும் இருக்கலாம். நர பலியாவது, மண்டையோடாவது, இதென்ன அருவருப்பான விஷயம்? — என்று தோன்றலாம். ஆனால் நமது தமிழகத்தின் அந்தக் காலத்துச் சரித்திரத்தை ஆராய்ந்தவர்களுக்கு வியப்பு ஒன்றும் இராது. அருவருப்பா யிருந்தாலும், உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா?

மகேந்திர பல்லவர் காலத்திலும், நரசிம்ம வர்மரின் காலத்திலும் தமிழ் நாட்டில் சைவமும் வைஷ்ணவமும் தழைத்து வளர்ந்தன. இவ்விரண்டு சமயங்களும் அன்பையும் ஜீவகாருண்யத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. அப்போது தேய்ந்து போய்க் கொண்டிருந்த ஜைன, பௌத்த சமயங்களின் நல்ல அம்சங்களெல்லாம் சைவ — வைஷ்ணவ மதங்களில் ஏற்பட்டிருந்தன. அவற்றுடன் சிவ பக்தியும் கண்ணன் காதலும் சேர்ந்து தமிழ் நாட்டைத் தெய்வத் திருநாடாகச் செய்து வந்தன. அப்பர், சம்பந்தர் முதலிய சைவக் குரவர்களும், வைஷ்ணவ ஆழ்வார்களும் தெய்விகமான தீந்தமிழ்ப் பாடல்களைப் பாடி நாடெங்கும் பக்தி மதத்தைப் பரப்பி வந்தார்கள். சிவன் கோயில்களும், பெருமாள் கோயில்களும் அற்புத சிற்பக் கனவுகளைப்போல் தோன்றி வளர்ந்து வந்தன.

ஒருபுறம் இப்படிப்பட்ட அன்பு — மதங்கள் பெரும்பாலான ஜனங்களிடையே பரவி வருகையில், மிகச் சிலரான மக்களிடையே நரபலியைத் தூண்டும் பயங்கரமான கபாலிகம், சாக்தம், பைரவம் என்னும் மதங்கள் எப்படியோ இரகசியமாக வேரூன்றி வந்தன. இந்த மதங்களை அவலம்பித்தவர்கள் மிதமிஞ்சிய மூட பக்தியை வளர்த்தார்கள். மூட பக்தி காரணமாக அவர்கள் காளி கோயில்களிலும், துர்க்கை கோயில்களிலும் தங்களுடைய சிரங்களைத் தாங்களே அநாயாசமாக வெட்டி எறிந்து கொண்டார்கள்! இப்படித் தங்களைத் தாங்களே பலி கொடுத்துக்கொள்வதால் அடுத்த ஜன்மத்தில் மகத்தான பலன்களை அடையலாம் என்று நம்பினார்கள். இம்மாதிரி நம்பிக்கைகளை வளர்ப்பதற்குப் பூசாரிகளும் இருந்தார்கள். ஆங்காங்கு அடர்ந்த காடுகளிலும், மனிதர்கள் எளிதில் புக முடியாத மலைப் பிராந்தியங்களிலும், காளிகோயில்களையும் துர்க்கை கோயில்களையும் இவர்கள் நிறுவினார்கள்.

மகேந்திர பல்லவரின் காலத்தில் வடக்கே வாதாபியிலிருந்து புலிகேசி என்பவன் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்தபோது அவனுடைய சைன்யங்களுடனே மேற்கூறிய பயங்கர மதங்களும் தமிழ் நாட்டில் புகுந்தன. பிறகு, புலிகேசி திரும்பிப் போன அடியோடு ஒரு முறையும், நரசிம்ம பல்லவர் வாதாபிக்குப் படையெடுத்துச் சென்ற காலத்தில் ஒரு முறையும், தமிழகத்தில் கொடும் பஞ்சங்கள் தோன்றி ஜனங்களை வருத்தின. இந்தக் காலங்களில் மேற் கூறிய நரபலி மதங்கள் அதிகமாக வளர்ந்தன.

இந்த மூட மதங்களை வேரோடு களைவதற்கு நரசிம்ம சக்கரவர்த்தி பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார். குருட்டு மத நம்பிக்கையை ஒழிப்பதற்குத் தண்டோபாயம் மட்டும் பயன்படாது என்று அவருக்குத் தெரிந்திருந்தது. தங்களுடைய கழுத்தைத் தாங்களே வெட்டிக் கொள்ளச் சித்தமாயிருப்பவர்களை எந்த விதத்தில் தண்டிக்க முடியும்? ஆகையால்தான் அவர் சென்ற இரண்டு வருஷங்களாகத் தமது மூத்த குமாரனிடம் இராஜ்ய பாரத்தை ஒப்புவித்து விட்டுத் தாம்

மாறுவேடம் பூண்டு, நாடெங்கும் சஞ்சரித்து மேற்படி மதங்கள் எவ்வளவு தூரம் பரவியிருக்கின்றன, எங்கெங்கே அந்த மதங்களுக்கு வேர் இருக்கிறது என்பதையெல்லாம் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருந்தார். இதனாலேதான் விக்கிரமனுக்கு நேர்வதற்கு இருந்த பேராபத்திலிருந்து அவனைச் சக்கரவர்த்தி காப்பாற்றுவதும் சாத்தியமாயிற்று.

■ ■ ■


ஆனால், விக்கிரமனோ தனக்கு நேர இருந்த அபாயம் எப்படிப்பட்டதென்பதை அறிந்து கொள்ளவில்லை. தன்னைத் திருடர்கள் தாக்கியதாகவே அவன் எண்ணியிருந்தான். ஒற்றர் தலைவனிடம் விடைபெற்று அவனுடைய குதிரை மீது ஏறிச் சென்ற விக்கிரமனுடைய உள்ளத்தில் பலவிதமான எண்ணங்கள் அலை மேல் அலை எறிந்து கொந்தளித்துக் கொண்டிருந்தன. அன்னையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவனுடைய உள்ளத்தில் முதன்மையாக இருந்தது. ஒற்றர் தலைவனின் உயர்ந்த ஜாதிக் குதிரை எவ்வளவோ விரைவாகச் சென்றும், அவனுடைய உள்ளத்தின் வேகம் காரணமாக, ''குதிரை இன்னும் வேகமாகப் போகக் கூடாதா?'' என்று தோன்றியது.

பிறகு, அந்த ஒற்றர் தலைவனின் கம்பீரத் தோற்றமும் அவன் மனக்கண் முன் அடிக்கடி வந்தது. அவன் தனக்குச் செய்த உதவியை நினைத்தபோது அளவிலாத நன்றி உணர்ச்சி கொண்டான். இடையிடையே ஒரு சந்தேகமும் உதித்தது. அவ்வளவு அறிவுக் கூர்மையுடைய ஒற்றர் தலைவன் தன்னுடைய இரகசியத்தை மட்டும் கண்டு பிடிக்காமல் இருப்பானா? ஏதோ ஒரு பெரிய சூழ்ச்சியில் தன்னைச் சிக்கவைப்பதற்காக இப்படிக் குதிரையைக் கொடுத்து அனுப்பியிருக்கிறானோ?

பின்னும், ஒற்றர் தலைவன் கூறிய நரசிம்மச் சக்கரவர்த்தியின் இளம் பிராயத்துக் காதற் கதை அவனுக்கு அடிக்கடி நினைவு வந்தது. காட்டின் மத்தியில் இருந்த சிற்பியின் வீட்டில், சிவகாமி நடனமாடுவதும், அதைப் பார்த்துப் பார்த்துச் சிற்பி சிலை அமைப்பதும், இதையெல்லாம் நரசிம்மவர்மர் பார்த்துக் களித்துக் கொண்டிருப்பதுமான மாயாஜாலக் காட்சியில் அவன் அடிக்கடி தன்னை மறந்தான்.

இவ்வளவுக்கும் நடுவில், பல்லக்கில் இருந்தபடி தன்னை ஆர்வம் ததும்பிய பெரிய கண்களால் விழுங்கி விடுபவள் போல் பார்த்த பெண்ணின் பொன்னொளிர் முகமும் அவன் மனக் கண் முன் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. அவ்வளவு அழகு ததும்பும் முகத்தையுடையவளின் நெஞ்சில் வஞ்சனை இருக்க முடியுமா? — ஒருநாளுமிராது. ஆனால் அவள் யார்? சக்கரவர்த்தியின் மகளா? அல்லது தோழிப் பெண்ணா?

இப்படியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டும், இடையிடையே ஊர் கண்ட இடங்களில் இது சரியான வழிதானா என்று கேட்டுக்கொண்டும் விக்கிரமன் போய்க் கொண்டிருந்தான். ஒற்றர் தலைவன் கூறியபடியே குதிரை தானாகவே சரியான உறையூர்ப் பாதையில் போய்க் கொண்டிருந்தது. அவனுக்கு மிகுந்த வியப்புடன் மகிழ்ச்சியும் அளித்தது. இதனால் ஒற்றர் தலைவனிடம் அவனுடைய நம்பிக்கையும் மரியாதை





யும் அதிகமாயின. அவன் கண்டிப்பாகச் சொல்லியிருப்பதை நினைத்து இரவிலே பிரயாணம் செய்யக் கூடாது என்றும், இருட்டுகிற சமயத்தில் ஏதேனும் ஒரு கிராமச் சத்திரத்தில் தங்க வேண்டுமென்றும் எண்ணிக்கொண்டே சென்றான். ஆனால் சூரியன் அஸ்தமிப்பதற்குக் கொஞ்ச நேரம் முன்னதாகவே அவனுடைய பிரயாணத்துக்கு ஒரு பெரிய தடங்கல் ஏற்பட்டுவிட்டது.

திடீரென்று கிழக்கே வானம் கருத்தது. கருமேகங்கள் குமுறிக் கொண்டு மேலே வந்தன. குளிர்ந்த காற்று புழுதியை அள்ளி வீசிக் கொண்டு அடித்தது. தூரத்தில் மழை பெய்து தரை நனைந்ததினால் கிளம்பிய மணம் பரவி வந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் மழையே வந்துவிட்டது. அற்ப சொற்பமாக வரவில்லை; இடியும் மின்னலுமாய், நாலுபுறமும் இருண்டு கொண்டு வந்து 'சோ' என்று சோனாமாரியாகப் பொழிந்தது. வானம் திடீரென்று பொத்

துக் கொண்டு வெகுநாள் தேக்கி வைத்திருந்த ஜலத்தையெல்லாம் தொப தொப வென்று பூமியில் கொட்டுவது போலிருந்தது.

சொட்ட நனைந்து குளிரால் நடுங்கிய விக்கிரமன் ஒரு மரத்தடியில் சற்று நேரம் ஒதுங்கி நின்று பார்த்தான். மழை நிற்கும் வழியாயில்லை. நேரமாக ஆக இரவு நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தக் கன மழையோடு இரவின் அந்தகாரம் சேர்ந்து விட்டால் கேட்க வேண்டியதில்லை. எனவே, எப்படியாவது மேலே போக வேண்டியதுதான் என்றும், கிராமம், அல்லது கோவில் ஏதாவது தென்பட்டதும் அங்கே தங்கி விடலாமென்றும் எண்ணி விக்கிரமன் குதிரையை மேலே செலுத்தினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு காட்டாறு குறுக்கிட்டது. பார்க்கும்போது தண்ணீர் முழங்கால் அளவுதான் இருக்கும் என்று தோன்றியது. காட்டாற்றில் மளமளவென்று வெள்ளம் பெருகி விடுமாதலால் சீக்கிரம் அதைத் தாண்டி விடுவதே நல்லது என்று நினைத்து விக்கிரமன் குதிரையை ஆற்றில் இறக்கினான். கொஞ்ச தூரம் போனதும் பிரவாகத்தின் வேகம் அதிகரித்தது. குதிரை வெள்ளத்தின் குறுக்கே போக முடியாமல் நீரோட்டத்துடன் போகத் தொடங்கியது. பிரவாகமோ நிமிஷத்துக்கு நிமிஷம் பெருகிக் கொண்டிருந்தது. முன்னால் போகலாமா, பின்னால் திரும்பிக் கரையேறி விடலாமா என்று விக்கிரமன் சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே, குதிரை பிரவாகத்தில் நீந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இனிக் குதிரைக்கும் ஆபத்து என்று எண்ணமிட்டவனாய் விக்கிரமன் வெள்ளத்தில் பாய்ந்தான். (தொடரும்)



ஒன்றுக்கு மூன்று!



ஜயம்மா எங்கள் வீட்டு வேலைக்காரி. காலையில் தெருக் கோடியில் இருக்கும் ஜார்ஜ் வீட்டுக்குப் போய் வேலை செய்வாள். மத்தியானம் எங்கள் வீட்டுக்கு வந்து வேலை செய்வாள். மாலை வேளையில் ஃப்ரீ. இவளையொத்த பெண்கள் நாலைந்து வீடுகளில் வேலை செய்கிறார்கள். இவள் மட்டும் வேறெந்த வீட்டுக்கும் போவதில்லை. என் மனைவி கோமளாவும் யாரை யெல்லாமோ சிபாரிசு செய்திருக்கிறாள். ஜயம்மா முகத்தைச் சுளித்து விடுவாள்.

தில்லியிலிருந்து மாற்றலாகி வந்தார் காமேசுவரன். வேலைக்காரி வேண்டுமென்றார்கள். ஜயம்மா போகவில்லை. ராஜு நாயுடு வீட்டு



வேலைக்காரி நின்று விட்டாள். ஜயம்மாவைப் போகச் சொன்னாள் கோமளா. அவள் மறுத்து விட்டாள். என் நண்பன் ஜோசஃப் பம்பாய் வேலையை விட்டு விட்டு பெங்களூரிலேயே பிஸினஸ் பண்ண வந்தான். 'ஜயம்மா வருவாளா?' என்று அவன் மனைவி கேட்டாளாம். என் மனைவி கேட்டுத்தான் பார்த்தாள். ஊஹூம். இவளா சம்மதிக்கப் போகிறாள்?

இத்தனைக்கும் ஜயம்மாவின் கணவன் வேலை செய்யாமல் குடித்து விட்டு வீட்டில் கலாட்டா செய்யும் சோம்பேறிதான். அவர்களுக்கு ஐந்து குழந்தைகள். இந்தப் பைத்தியக்காரி ஜயம்மாவை எப்படி நேராக்குவது என்றே தெரியவில்லை.

அப்போதுதான் எதிர் வீட்டில் ஒரு போர்ஷன் வாடகைக்குக் காலியாயிற்று. வந்த ஆள் பீஹாரிலிருந்து வந்திருந்தார். பெயர் மிர்ஸா மஹமது அலி. நாங்கள் ஜயம்மாவைப் போய்ப் பார்க்கச் சொல்லவில்லை. ஆனால் அந்தப் புது வீட்டில் மறு நாள் காலை ஜயம்மா வேலை செய்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்ட என் மனைவி சமயம் வந்ததும் அவளையே கேட்டாள், ''ஏண்டி பெண்ணே, யார் யாரையோ சிபாரிசு பண்ணினேனே, இப்ப திடீர்னு இவங்க வீட்டிலே சேர்த்துட்டியே. என்ன விசேஷம் சொல்லுவியா?'' என்று!

ஜயம்மா சொன்னாள்: ''ஜார்ஜ் கிறிஸ்டியன். நீங்க ஹிந்து. மிர்ஸா முஸ்லிம். இதனாலே வருஷத்திலே கிறிஸ்துமஸ் ஒண்ணு, தீபாவளி ஒண்ணு, ரம்ஸான் ஒண்ணுன்னு மூணு புதுப் புடவைகள் கிடைக்குமில்லே, அம்மா.'' ''அண்டமி''

இப்போது !
ஃபாரெக்ஸ்®
(இந்தியாவின் உச்ச விற்பனையுடைய, முதல் திட உணவு)
புது, நவீன ரீஃபில் பெட்டியிலே !

ஃபாரெக்ஸ் இன்று
புத்தம் புதுவித ரீஃபில் பெட்டியினுள்
வருகிறது — சர்வதேச
பேக்கிங் தொழில்நுட்பத்திலே
அதி நூதனமான முறை இது.

சுகாதார பாதுகாப்பு அதிகம்—
விசேஷ பிளாஸ்டிக்-பூச்சுக் காகிதம்,
உள்ளிருக்கும் உணவை உலர்
நிலையிலே, புதுமை குன்றாத
போஷாக்குடன் வைத்திருக்கிறது.
மிகுந்த சுகாதாரப் பாதுகாப்புக்
கென மெழுகின்-பேக்கிங்கு.

**சிறப்பான ஸீலிங் மூலம்
மேம்பட்ட பாதுகாப்பு—**
உட்புறப் பை, கட்டி றுக்கமாக
ஸீல் செய்யப்பட்டு,
பெட்டியுடன் கெட்டியாக
பிணைக்கப்பட்டுள்ளதால்,
வசதியும் பாதுகாப்பும் மிகுந்தது.



அதி முக்கியம்:
புதிய ஃபாரெக்ஸ் ரீஃபில்
பெட்டியைப் பயன்படுத்த
மிகச் சிறந்த வழி இதோ:
உட்புற பிளாஸ்டிக்-பூச்சுக்
காகிதப் பையின் மேற்புற ஸீலைக்
கிழித்து (அல்லது கத்தரித்து)
திறவுங்கள். உள்ளிருக்கும் உண-
வை, உலர்நிலையில் துப்புரவாக
உள்ள ஒரு ஃபாரெக்ஸ்
டின்னுக்குள், அல்லது வேறொரு
கலத்தினுள் மாற்றிக்கொள்க.





ஃபாரெக்ஸ்®
3ம் மாதமுதல் உங்கள் பாப்பாவுக்கான முதல் திட உணவு.

க்ளாக்ஸோ

LIL-GF-55-203 TM




தரத்தில் முன்னேற்றம் பெற்ற புதிய டெட் கட்டியே மார்க்கெட்டில் விற்பனையாகும் சுப்ரீம் டிடர்ஜெண்ட் கட்டி.

தூய்மையாக்கும் ஆற்றலுக்கு, நுரை வளத்திற்கு, நறுமணத்திற்கு, வேறு எந்த சலவைக் கட்டியும் இதற்கு ஈடாகாது!

உபயோகித்துப் பாருங்கள். அதன் வேறுபாட்டைக் கண்கூடாகக் காணுங்கள். ஆம் அதுதான் சுப்ரீம் டெட் கட்டி—'ஒளிரும்' வெண்மைக்கே!

பளிச்சிடும் வெண்மை, டெட் தரும் வெண்மை



ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சதருக்குச் சித்திரமண்டபம்

திருவாரூரில் பிறப்பதாலேயே முக்திப் பயனை ஒருவர் அடைவார் என்பது ஐதீகம். அதனுடன் இசையையும் வழங்கப் புகுந்தால் இசைப்பவர்களுக்கும் கானமுதத்தைப் பருகியவர்களுக்கும் இருவருக்குமே முக்தி எய்துவதற்கு வழி செய்ததாகும் என்பர் சான்றோர். வேறு தவங்களை விடவும் சங்கீத யோகம் அதிக சிரமமின்றி விடுதலையை அளிக்க வல்லது என்பர் ஸ்ரீ யாக்ஞவல்கிய மகரிஷி. திருவாரூரின் தனிப்பெருமை முக்தி அளிக்கும் க்ஷேத்திரமா யிருப்பதுடன் சங்கீத மும்மூர்த்திகளான ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதர், ஸ்ரீ ஸ்யாமா சாஸ்திரி இவர்களை ஈன்றெடுத்த மகிமையையும் பெற்றுள்ளது.

இம்மூவரில் ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சதர் ஒருவரே அதிக காலம் திருவாரூரில் தங்கியவர். மற்ற இருவரும் திருவையாற்றிலும், தஞ்சை, காஞ்சியிலும் தங்கள் தங்கள் வாழ்நாட்களைக் கழித்தவர்கள். அந்திம காலத்தில் எட்டையபுரத்தில் உடலை நீத்தாராயினும், தீட்சதர் திருவாரூரில் தங்கித் தமது சாகித்தியங்களைப் படைத்தவர். ஆகையால் அவருக்கு அங்கு நிரந்தரமான ஞாபகச் சின்னமொன்றை நிறுவுவதில் சில பிரமுகர்கள் சேர்ந்து குழு ஒன்றை அமைத்துக் கொண்டார்கள். முக்கியமாய் சதாசிவம் தம்பதிகளும், ஸ்ரீ வே. ராகவன், ஸ்ரீ வி. எஸ். தியாகராஜன் முதலியவர்கள் அந்தக்குழுவில் இருந்து கொண்டு ஒரு மண்டபத்தை நிருமாணிக்கும் பணியில் முனைந்தார்கள். ஒருவாறு மண்டப ஏற்பாடுகள் நடக்கையில், எங்கிருந்தோ பெருந் தொகை ஒன்றை அள்ளி வழங்க ஸ்ரீ கோவிந்தசுவாமி பிள்ளை என்பவர் வந்து சேர்ந்தார்.

தீட்சதரின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு சம்பவத்தை நினைக்கையில் கேவலம் கட்டுக் கதையாக இருக்காது என்றே தோன்றும். ஒரு நாள் இல்லத்தாள் சமைக்க அரிசி இன்மையை வருந்தித் தீட்சதரிடம் தெரிவித்தாள். அவர் அச்சமயம் பாடியதாக ஒரு பாட்டு: ''ஹிரண்யமயீம் லக்ஷ்மீம் பஜாமி: ஹீன ஜனாச்ரயம் த்யஜாமி.'' அதாவது வேண்டுமானால் நேரில் லக்ஷ்மி தேவியைப் பிரார்த்தனை செய்வேனே யொழிய அற்பர்களிடம் சென்று பணம் யாசிக்க மாட்டேன்'' என்பதாம். உடனே இந்த விவரம் அறியாத ஒரு மிராசுதார் நண்பர், நெல் மூட்டைகளை அனுப்பியதாகக் கூறும் வரலாறு. சிங்கப்பூரிலிருந்து ஒரு பிரபு இந்தக் கைங்கரியத்தை மேற்கொண்டு, பண உதவியை லட்சத்துக்கு மேல் அள்ளி வழங்கி, மண்டப நிருமாணத்தைப் பூர்த்தி செய்துள்ள விவரம் அன்று நடந்ததையும் இதைப் போலவே அதிசய சம்பவமாக இருப்பினும் உண்மையாகவே நான் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையை நம் மனத்தில் ஊட்டுகிறதல்லவா?

மேல் துண்டை உதறிக்கொண்டு திரைகடலோடித் திரவியம் சேர்த்தவரின் வலிமையும் இதய பரிபாகமும் சேர்ந்துகொண்டு இன்று அதிசயிக்க வேண்டிய விதம் தகுந்த சமயத்தில் மண்டப வேலையை முடிவடையச் செய்து விட்டது.

மார்ச் மாதம் மூன்றும் தேதி சாயந்திரம் பார்க்க வேண்டுமே, மண்டபத்தையும் அங்கு கூடிய ஜனத் திரளையும்! நூறு அடிக்குக் குறைவற்ற நீளமும், முப்பதடி அகலமும் கொண்ட மண்டபம் அமைந்திருப்பதைக் காணப் பிரமிப்பாகவே தோன்றியது. மண்டப வாயிலை அலங்கரிக்கும் திருமூர்த்திகளின் பிம்பங்கள் ஏற்கெனவே ஓவியர் எஸ். ராஜம் அவர்கள் நெடுக நாடெங்கும் பரவச் செய்துள்ள மும்மூர்த்திகளின் உருவ நகல்களையே ஒத்திருந்தன. தள வரிசையும், விசாலமான மண்டபத்தின் அமைப்பும் வருகவென்று எல்லோரையும் அழைத்தன. ஆயிரம் பேர் சௌகரியமாக உட்காரலாம் மண்டபத்



நாடகத்தில் சிறப்பாகக் கூற நிகழ்ச்சி எதுவும் இல்லை யென்றாலும் நாதசுர ஒலியை ரிக்கார்டு செய்திருக்கும் முறை பாராட்டுப் பெறுகிறது.

நாடக டைரக்டர் டி. எஸ். சேஷாத்திரி முத்துக் குமாரசுவாமி பிள்ளையாக வந்து தமது அநுபவ நடிப்பினால் ரசிகர்களை வியப்பில் ஆழ்த்துகிறார். தனிலுக்கு சி. ஆர். எஸ். மூர்த்தியைப் போட்டது பிரமாதம். அவர் மனைவியிடம் நாட்டு நடப்புக் களைப் பற்றிப் பேசியது ரொம்ப ரொம்ப இயற்கை யாக இருந்தது. நகைச்சுவையை அநாயாசமாக வாரி வழங்கிய மணி ஐயர் (டி. எஸ். பத்மநாபன்) நாடகம் அலுப்புத் தட்டாமல் பார்த்துக் கொண் டார். அமிர்தமாக வந்த ராஜசேகர் பணிவாகவும், நயமாகவும் பேசி நன்றாக நடித்தார். ஒத்து ஊது பவர் வராவிட்டால் நாதசுரக் கச்சேரி இல்லை; அதுபோல் சைமன் இல்லாவிட்டால் இந்நாடகம் இல்லை. இயற்கையிலேயே ஹாஸ்ய நடிகர் அவர்.

தனில் திருவாசகம் பிள்ளையின் மனைவியாக வந்து மிக இயல்பாகப் பேசி நடித்தார் ஹேமலதா. அபிராமியாக வந்து 'அத்தான், அத்தான்' என்று குழைந்து நடிப்பில் ரசிகர்களின் உள்ளம் கவர்ந் தவர் பி. ஆர். பிரேமா.

நாதசுரத்தை மையமாக வைத்து 'நாடகத்தைப் புதுமையான சூழ்நிலையில் புனைந்திருக்கும் கவிஞர் வாலி பாராட்டுக்குரியவர். —காந்தன்

தில். தொண்ணூறைத் தாண்டிய தள்ளாத வயதில் மனைவியுடனும், குடும்பத்தில் சிலருட னும் ஸ்ரீ கோவிந்தசுவாமி பிள்ளை அவர்கள் விஜயம் செய்து கலந்து கொண்டது அவ ருடைய ஆற்றலை மட்டுமல்லாமல், அவ ருடைய உள்ளத்தின் பண்பாட்டையும் காட் டியது. சிலருடன், விநயமும் கூடினால் கேட்கவேண்டுமா ஒருவரைப் பிறர் மனத் தில் நிலைக்கச் செய்ய? அன்று அவர் தமது பதிலை வாழ்த்துக்களுக்கு எழுதி மற்றொரு வரை தனக்காக வாசிக்கச் செய்கையில், முழுவதும் சபையோருக்கு மரியாதை காட் டும் விதம் கடைசிவரையில் நின்றிருந்ததை மட்டுமே நினைத்தாலும் அவரிடம் காணும் அடக்கம் உண்மையானதென்று விளம்பரப் படுத்தியது.

வாழ்த்துப் பத்திரங்கள் சில வாசிக்கப் பட்டன. ஆனால் ஒரே ஒரு பத்திரத்தில் கவிஞர் ஒருவர், ஸ்ரீ வரதராஜன் என்பவர் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் கொடைகளை வருணிக்கையில் கூறிய சொற்கள் கவிதையை உருவாக்கி யிருந்ததை மறப்பதற்கில்லை. பாரி ஜாத மலர் இதழ்களை நன்கு விரித்த உட னேயே கீழே உதிர்ந்து விடுவது போல், தமக்கு வழங்கப்பட்ட பணங்களை ஸ்ரீமதி அவர்கள் பெற்றதுமே பிற நற்காரியங்களுக் காகக் கொடுக்கும் ஆற்றலை நினைப்பூட்டு வதாக வருணித்திருந்தது மிகவும் மனத்தை விட்டு அகலாத விதம் இருந்தது.

ஸ்ரீ கோவிந்தசுவாமி பிள்ளையைப் புகழா தார் இல்லை. அவரை என்றுமே போற்றும் வகையில் அவரும் நடந்து கொண்டார்.

அன்றைய இசைவிருந்தை ஓம்புகையில் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் இன்ப மயமான கானத்தை மெருகேறச் செய்தது. அவர் அன்று பொறுக்கி எடுத்துப் பாடிய சாகித் தியங்கள்தாம். மும்மூர்த்திகளின் சாகித்தி யங்களைத் தவிர சுந்தரமூர்த்தி நாயனார், அருணகிரி நாதர், கோபால கிருஷ்ண பாரதி, தாயுமானவர் முதலியவர்களின் உள்ளத்தை உருகச் செய்யும் பாட்டுக்களை பாவத்துடனும் உச்சரிப்புச் சிதைவின்றியும் அவர் இசைத்தது உள்ளத்தை நிறைவு எய்தும் விதம் செய்தது.

திருவாரூரின் க்ஷேத்திர மகிமையோ அல் லது தீட்சதரின் சாகித்தியத்தின் உயர்வோ அல்லது ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியின் உணர்ச்சி ஊட்டும் இசை சுகமோ, எது என்று சொல் வதற்கில்லை, அன்று நடைபெற்ற விழா என் றுமே மறக்க இயலாததுதான்.

மாயவரம் பைனான்ஷியல் கார்ப்பொரேஷன்
லிமிடெட்

பதிவு அலுவலகம்: 13-H, கச்சேரி ரோடு, மாயவரம்-609 001

26-2-1977 முடிய

1. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 லட்சம்
2. செலுத்தப்பட்ட மூலதனம் & ரிசர்வுகள் ரூ. 5.5 லட்சம்
3. நடைபெறும் சீட்டுகளின் மதிப்பு ரூ. 9 கோடி

கிளை அலுவலகங்கள்

மாயவரம், காரைக்கால், பாண்டிச்சேரி
திருப்பாப்புலியூர், கும்பகோணம், தஞ்சாவூர்
சிதம்பரம், சென்னை, காஞ்சிபுரம்

"உயர்துகை ஏலச் சீட்டு நடத்துபவர்கள்."

மாயவரம்
26-2-77

K. ஜெயச்சந்திரன்
B. Com., A.C.I.A.(I)., F.C.I.S.(I)
அக்கவுண்ட்ஸ் ஆபீஸர்

M. சத்புத்திரன்
ஜெனரல் மானேஜர்

R. கல்யாணசுந்தரம்
மானேஜிங் டைரக்டர்

உங்கள் FIXED DEPOSIT களுக்கு
உயர் வட்டி விகிதங்கள்

3 வருடங்களும் அதற்கு மேலும்	இரண்டு வருடங்கள்	ஒரு வருடம்
13%	$12\frac{1}{2}$%	12%

ரெக்கரிங் டெபாசிட்டுகளுக்கு
கவர்ச்சிகரமான வட்டி வழங்குகிறோம்.
HIRE PURCHASE — முறையில்
வாகனங்கள் வாங்க எங்களை அணுகவும்.

**விரைவில் உருவாகி அமுலுக்கு வரப்பெறும்
எமது அடுத்தத் திட்டம் தவணைக் கொள்முதல் முறையில்
புதிதாகக் கட்டப்பட்ட வீடு பெற்று அவ்வீட்டின் மதிப்புத் தொகையை
192 மாத தவணைகளில் திருப்பி செலுத்தக்கூடியது**

விபரங்களுக்கு:


மாயவரம் பைனான்ஷியல் சிண்டிகேட் (Regd.)

13-G, கச்சேரி ரோடு, மாயவரம்-609 001

மாயவரம்
28-2-77

R. கல்யாணசுந்தரம்
மானேஜிங் பார்ட்னர்

விமல் மித்ரா





தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

3. இவளா அவள்?

என் கை நீண்டு அவளிடம் பிரசாதத்தை வாங்கிக் கொண்டு விட்டது.

பிரசாதம் என்ற பெயரில் விலையுயர்ந்த பொருள் எதுவும் இல்லை. வெறும் அல்வா தான். அதைக் கொஞ்சம் வாயில் போட்டுக் கொண்டேன். சுவாமிகளின் பிரசாதம் ஆயிற்றே! அதற்கு ஒரு மதிப்புக் கொடுக்க வேண்டாமா?

எனக்குப் பிரசாதம் கொடுத்த பின் அந்தப் பெண்மணி பிறருக்கும் பிரசாதம் வழங்கப் போய்விட்டாள்.

அப்புறம் எந்தக் காரணத்தைக் கொண்டு நான் அங்கே நிற்பது? எனவே, வீட்டை நோக்கி நடையைக் கட்டினேன். என்றாலும் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் பொழுதும் அந்தப் பெண்மணியின் நினைவு என்னை இடறி விட்டுக் கொண்டே இருந்தது. 'இவளை எங்கோ கட்டாயம் பார்த்திருக்கிறேன். எங்கே பார்த்திருக்கிறேன்?'

இப்படி விடாமல் யோசித்தவனுக்குத் திடுமென்று ஒரு நினைவு வந்தது.

மனிதனது ஞாபக சக்தி மகா அற்புதமானது. சின்னஞ்சிறு மூளைதான் என்றாலும் அதற்குள் எத்தனை எத்தனை விஷயங்கள் எப்படி எப்படியெல்லாம் அடங்கிக் கிடக்கின்றன! நினைத்துப் பார்த்தாலே நெட்டுயிர்க்கத் தோன்றுகிறது. எப்பொழுதோ நிகழ்ந்த நிகழ்ச்சி! மூளையின் ஆழத்தில் புதைந்து விட்ட நிகழ்ச்சி! எப்படியோ திடுமென்று தூக்கத்திலாவது நினைவு வந்து விடுகிறது அல்லவா? விழித்துக் கொண்ட பின் 'சம்பந்தமில்லாத இந்த விஷயம் இப்பொழுது எப்படி நினைவு வந்தது? எதற்காக நினைவு வந்தது?' என்றெல்லாம் நினைத்துப் பார்த்து வியப்பதுண்டு அல்லவா?

ஒருமுறை ஏதோ ஸ்டேஷனிலே நான் ஒரு பொருள் வாங்கினேன். காசைக் கொடுப்பதற்குள்ளாக வண்டி புறப்பட்டு விட்டது. பையிலிருந்து காசை எடுத்து நீட்டியபோது வண்டி பிளாட்பாரத்தையே தாண்டிவிட்டது. பெறுமானக் குறைவான பொருள்தான். என்றாலும் காசு கொடுக்காதது மனத்தை நெருடியது. என் நோக்கத்தில் தவறு இல்லையென்றாலும், தான் விற்ற பொருளுக்குக் காசு கிடைக்காததால் அந்த ஏழை வியாபாரி என்னை எப்படியெல்லாம் திட்டித்தீர்த்தானோ? சாபம் கொடுத்துப் போகக்கிறானோ? — யார் கண்டார்கள்? — அந்த ஸ்டேஷன் வழியாக அப்புறம் போக வேண்டிய அவசியமே எனக்கு இதுவரை ஏற்படவில்லை. அதனால் அவன் காசைக் கொடுக்கவும் முடியவில்லை. அந்த நிகழ்ச்சி இப்பொழுது என் நினைவுக்கு வருவானேன்? பார்க்கப் போனால் இந்த நிகழ்ச்சி கூட ஏறக்குறைய அதே மாதிரிதான். இப்பொழுது நினைவு வரவில்லை என்றாலும் எப்பொழுதாவது வந்து விடும்.

வீடு திரும்பி உணவு அருந்தி விட்டுத் தூங்கலாம் என்று படுக்கையை விரித்தேன். படுத்ததுதான் தாமதம், பளிச்சென்று பொறி தட்டியது.

''அட! இவள் மொகாமாகாட் ரெயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் பார்த்த அதே பெண்மணி அல்லவா? ஆம், அவளேதான்; துளிக்கூடச் சந்தேகம் இல்லை!''

அதுவும் எத்தனை பழசாகிப் போய்விட்ட விஷயம்! என்றாலும் அவள் முகம் அதிகமாக மாறிவிடவில்லை! ஏன், குரல் கூடத்தான் மாறவில்லை!

நினைத்த மாத்திரத்தில் நிகழ்ச்சிகள் முழுவதும் கண்களிலே மீண்டும் படமாக ஓடின. என் பொறுப்பில் சூட்கேஸை விட்டு விட்டுத் தேநீர் அருந்தும் சாக்கில் அவள் கம்பி நீட்டியது. இன்ஸ்பெக்டர் என்னை ஐயக் கண் கொண்டு பார்த்தது. என்னையே குற்றவாளியாக்கி உரையாடியது. அப்புறம் சூட்கேஸின் பூட்டை உடைத்தது. அதற்குள் ஏராளமான கஞ்சா இருந்தது.... ஒன்று விடாமல் என் மனத்திரையில் தோன்றின.

அவளேதான் இந்தப் பெண்மணி! அன்று நமக்கு எப்படி ஆட்டம் காட்டி விட்டாள்? நல்ல வேடிக்கை! ஆனால் இத்தனை ஆண்டுகள் கழித்து இவள் இங்கே எப்படி வந்தாள்?

அவள் வருவது இருக்கட்டும்! அவளை நான் சந்திக்க வேண்டுமா?

இரவு வெகு நேரம் வரை யோசித்துக் கொண்டிருந்தேன். இதற்கெல்லாம் ஒரு முடி

போட்டு என்றால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

மறுநாள் மாலை நான் அங்கே போனேன். அவனை மீண்டும் அங்கே சந்தித்து விடலாம் என்று எண்ணினேன்.,


அன்றும் நல்ல கூட்டம் கூடியிருந்தது. பஜனையும் நடந்து கொண்டிருந்தது; பஜனையின் முடிவில் முதல் நாளைப் போலவே பிரசாதமும் வழங்கப்பட்டது. நான் நாற்புறமும் என் விழிகளைச் சுழற்றி அவனைத் தேடினேன். ஆனால் அவனை எங்கும் காணவில்லை.


கூட்டம் இலேசில் கலைவதாயில்லை. எத்தனை நேரம்தான் வீணில் அங்கே நிற்பது என்று வீடு திரும்பி விட்டேன். எனக்குப் பக்தியில் ஈடுபாடு அவ்வளவாக அன்றும் இருந்ததில்லை. இன்றும் இருக்கவில்லை. வெறும் ஆவலும் ஆர்வமும் உந்தவேதான் நான் அங்கு போய் வந்தேன்.

மறுநாளிலிருந்து அவனை அங்கு காணமற் போகவே, என் ஆர்வத்துக்கு விடை கொடுத்து விட்டு, மாலை உலாவுதலில் மட்டும் மனத்தைச் செலுத்தினேன்.

வேலையை விட்ட பின் என் புகழ் ஒன்றும் அவ்வளவாகப் பெருகிவிடவில்லை. ஆனால் பொறுப்பு மட்டும் பன்மடங்காகப் பெருகி விட்டது. உத்தியோகம் பார்ப்பதில் ஒரு சௌகரியம். அங்கே நமக்கு மேல் இருக்கும் ஓர் ஆளைச் சமாளித்துத் திருப்திப்படுத்தி விட்டால் போதும், அப்புறம் நாம் ராஜா தான். ஆனால் எழுத்தாளன் உலகம் அப்படியில்லை., ஒரு பக்கம் அவனுக்கு அவனே எசமானன். மறுபுறம் அவனுடைய வாசக நேயர்கள் அத்தனை பேரும் அவனுக்கு எசமானர்கள்.

அதனால் வெளி மக்களோடு ஓரளவு ஒட்டுறவு வைத்துக் கொண்டிருந்த பொழுதிலும், நான் ''நானுண்டு, என் வேலையுண்டு' என்று இருந்தேன். வெளியிலோ வீட்டிலோ





ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் தம் சிறு வயதில் உயர் நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஒரு நாள் அவரது ஆசிரியருள் ஒருவர் அவரைத் தனியாக அழைத்து, "ஆல்பர்ட், பலருக்கு நடுவே நீ கேள்விகளைக் கேட்காதே. ஏனெனில், உன் கேள் விக்கும் பதில் தெரியாது என்று எல்லோருக்கும் முன்னால் கூற வேண்டியிருப்பதை நினைத்தால் சங்கடமாக உள்ளது" என்று கூறினாராம். -கோ.நீபா

எனக்கு அவ்வளவாகப் பிடிப்புக் கிடையாது. நான் எப்பொழுதுமே தனிக் கட்டை.

ஒருநாள் நான் எழுதுவதில் முழு மூச்சோடு முனைந்திருந்தேன். என் வேலைக்காரன் கார்மேகம் வந்து, "உங்களைப் பார்க்க யாரோ ஓர் அம்மா வந்திருக்காங்க!" என்றான்.

'என்னிடம் ஒரு பெண்ணுக்கு என்ன வேலை?' என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். பிறகு வேலைக்காரனைப் பார்த்து, "ஏதாவது பத்திரிகை — இத்திரி கையிலிருந்து வந்திருக்கிறார்களோ?" என்று கேட்டேன்.

என் வேலைக்குக் குந்தகமாக வந்தவர்களை நினைத்த பொழுது எனக்குக் கோபம் கோப மாக வந்தது. இந்தக் காளையிடம் படித்துப் படித்துச் சொல்லி யிருந்தேன், வேளை கெட்ட வேளைகளிலே கண்டவர்கள் — கேட்டவர்களை யெல்லாம் என் முன் கொண்டு வந்து நிறுத் தாதே என்று! ஆனால் அது அந்த மடைய னுக்கு எங்கே தெரிந்திருந்தது?

இனி என்ன செய்வது?

"சரி, அழைத்து வந்து தொலை, அந்த அம்மாளை!" என்றேன்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு பெண்மணி உள்ளே வந்தாள். நான் வியப்புடன் அவ ளையே பார்க்கலானேன். துறவி முகாமிட் டிருந்த இடத்தில் பார்த்த அதே பெண்மணி!

"சொல்லுங்கள், என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"நீங்கள் இந்தப் பேட்டை வாசிதானே? சுவாமிகளின் ஆசிரமத்தை பார்த்திருப்பீர் களே! இங்குள்ளவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஆசிரமத்தைப் பக்காக் கட்டடமாகக் கட்ட முடிவுகட்டி யிருக்கிறோம். சுவாமிகளைப் பார்க்க வரும் பக்தர்கள் வெய்யிலிலும் மழை யிலும் சிரமப் படக்கூடாது என்பதற்காக. இந்த நற்பணியில் தங்கள் பங்கும் இருக்க வேண்டும். இதற்காகத் தங்களிடம் நன் கொடை கோரி வந்திருக்கிறேன். உங்கள் சிரத்தைக்குத் தக்கபடி நீங்கள் மனமுவந்து என்ன கொடுத்தாலும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளுகிறோம்" என்றாள் அவள்.

நான் இமை கொட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் எதிரே உட்கார்ந்து ஒன்று விடாமல் பழைய விஷ யங்கள் அனைத்தையும் அசை போட்டேன். சூட்கேஸை என்னெதிரே வைத்துப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுத் தேநீர் அருந்தி வரும் சாக்கில் போலீசாரின் கண்களில் மண் ணைத் தூவிவிட்டு அவள் கம்பி நீட்டிய காட்சி யில் மீண்டும் ஒரு முறை பகமை ஓடியது.

அதெல்லாம் எக்கேடு கெட்டுப் போகட் டும், அவள் பார்க்க நன்றாயிருந்தாள். ஆடை அணிந்திருந்த விதமும் அழகாயிருந்தது. அவளை எடை போட்ட நான், அவளிடம் தாய்மைக் குறைவு துளியும் தலைகாட்டவில்லை என்பதையும் கண்டேன்.

"உங்களை நான் நிர்ப்பந்தப்படுத்தவில்லை. உங்களுக்கு இஷ்டமானதைக் கொடுங்கள், போதும்!" என்றாள் அவள்,

"இப்படிச் சந்தா வசூலிக்கிறீர்களே, இதனால் உங்களுக்கு ஏதாவது சொந்தத்தில் பயன் உண்டா?" என்று சற்றுத் துணிந்தே நான் கேட்டேன்.

"அதென்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்? எனக்கு இதிலே என்ன தன்னலம் இருக்க முடியும்? இறைபணி செய்யும் வாய்ப்பு கிட்டுகிறதே, அதுவே பெரும் பயன் இல் லையா? வீடு, வாசல், குடும்பம் என்ற தொந் தம் காரணமாக நேரம் — பொழுது நிறையக் கிடைப்பதில்லை. என்றாலும் கிடைக்கும் நேரத்தை ஆசிரமப் பணியில் செலவிடு கிறேன்!"

"இதோ பாருங்கள்! எனக்கு இந்த ஆசிர மம் — கீசிரமம் எல்லாம் கட்டோடு பிடிக்காத விஷயம்" என்றேன் முகத்தில் அடித்தாற் போல்.

"பிடிக்காத விஷயமா? — அப்படியென்றால் உங்களுக்குக் கடவுள் மீது நம்பிக்கையே கிடையாதா?" அவள் விழியில் வியப்பைத் தேக்கி என்னை நோக்கினாள்.

"இதுபற்றி உங்களோடு வாதிட விருப்ப மில்லை!" என்றேன் நான்.

"நானும் உங்களிடம் வாதம் புரிந்து பொழுதை வீணாக்க வரவில்லை. என்றாலும், ஒரு ஹிந்துவாக இருந்து கொண்டு, நீங்கள் ஆண்டவனை நம்பவில்லை என்பதை நினைக்கும் பொழுது, எனக்கு விந்தையாகத் தோன்று கிறது. அதோடு உங்கள் பேச்சிலே சட்டென்று நம்பிக்கையும் விழ மாட்டேன் என்கிறது!" என்றவள் சிறிது நிறுத்தினாள். பிறகு, "சரி! எனக்கு இப்பொழுது பொழுது இல்லை. நீங்கள் நன்கொடை கொடுத்தாலும் சரி, கொடுக்கா விட்டாலும், சரி, நான் இன்னொரு நாள் சாவகாசமாக வந்து இதுபற்றி உங்களிடம் பேசிக் கொள்ளுகிறேன்!" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள். இரண்டு அடிகள் எடுத்து வைத்தவள் என்ன நினைத்துக் கொண் டாளோ, மீண்டும் நின்றாள். "சரி, நீங்கள் கடவுளை ஒப்புக் கொள்ளவில்லை என்றால் பரவாயில்லை, பொதுவாக இப்பொழுதெல் லாம் ஆண்கள் கடவுளை நம்பாமல் நாஸ்திகர் களாகிக் கொண்டு வருகிறார்கள்! அதற்கு நீங்களும் விதிவிலக்கு இல்லை. ஆனால் உங்கள் மனைவி...? அவர்கள் விரதம் — நோன்பு என்று எதுவுமே வைத்துக் கொள்வதில் லையா?" என்று கேட்டாள்.

"இல்லை."

"இல்லையா? ஏன்?"

"எனக்கு மனைவியே இல்லை!"

"மனைவி இல்லையா? மனைவி இல்லையென் றால் என்ன அர்த்தம்?"

''எனக்குத் தெரிந்த வரையில் அதற்கு ஒரே பொருள்தான் உண்டு. மனைவி இல்லை என்றால் மனைவி இல்லை. அவ்வளவுதான்!''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லையா?'' வியப்புடன் கேட்டாள் அவள்.

என் சொந்த வாழ்க்கையைப் பற்றிய நெருடலான இந்தக் கேள்வியில் நான் திகைத்துப் போனேன். அதுவும் முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு பெண்ணுடன் அத்தகைய விஷயங்களைப் பகிர்ந்து கொள்வது என்றால் சங்கோசமாயிருக்காதா? எனவே, பேச்சை மாற்றும் நோக்கத்தில், ''இப்பொழுது நான் வேலையாயிருக்கிறேன். இதைப் பற்றிப் பின்னால் இன்னொரு சமயம் விவரமாகப் பேசுவோமே! நீங்களும் இதே பேட்டையில்தானே இருக்கிறீர்கள்?'' என்று கேட்டு வைத்தேன்.

''ஆமாம். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் என் வீட்டுக்கு வரலாம்!'' என்று கூறி அவள் தன் முகவரியைத் தந்தாள்.

அவள் வீடு என் வீட்டிலிருந்து வெகு தொலைவில் இல்லை என்பதை அவள் தந்த முகவரியைக் கொண்டு அறிந்தேன்.

நல்ல வேளையாக அதிகத் தொந்தரவு தராமல் அந்தப் பெண்மணி விடைபெற்றுக் கொண்டாள். நானும் நிம்மதியாக நீள் மூச்சு விட்டேன். ஆனால் அதற்குப் பின் அவளைப் பற்றிய ஆர்வம் பன்மடங்கு பெருகி விட்டது. சொல்லப் போனால் அவள் நினைவு வராத நாளே இல்லை என்றாகி விட்டது. 'உண்மையில் அவள் அதே பெண்மணி தானா, அல்லது என் கண்களுக்கு ஏற்பட்ட பிரமையா?' என்ற ஐயம் அடிக்கடி தலையெடுத்துத் திகைக்க வைத்தது.

நான் பல ஆண்டுகள் கழித்து அவளைப் பார்த்திருந்தேன். 'முகம் மாறியிருக்கலாமே?' என்று எண்ணுவேன் ஒரு சமயம். 'இரண்டு முகங்கள் பார்க்க ஒன்றாயிருக்கக் கூடாதென்பது என்ன நியதி?' என்று எண்ணுவேன் மறுசமயம். இப்படி எண்ணம் மாறுபட்டாலும், தினமும் துறவியின் ஆசிரமத்துப் பக்கமாகவே உலாவப் போவதில் மட்டும் மாற்றமில்லை, எந்நேரமும் அங்கே கூட்டம் 'ஜேஜே' என்று இருக்கும். துறவியைத் தரிசிப்பதற்காக மக்கள் வரிசையாக நின்று கொண்டிருப்பார்கள். நான் தவறாமல் பஜனை உண்டு. பிரசாதமும் உண்டு. ஆனால் அந்தப் பெண்மணியை அதற்கப்புறம் நான் அங்கே பார்க்கவில்லை. அதுமட்டும் என்ன, சில நாட்கள் நான் அவளை எங்குமே சந்திக்கவில்லை. அவள் அப்புறம் என் வீட்டுக்கும் வரவில்லை; ஆசிரமத்திலும் காணவில்லை. என் மனத்தை ஏதோ உறுத்தியது. அவள், அவள் இல்லையென்றால் இப்படி நடக்கக் கூடாதே? அவள் அவளாக இருந்து எங்கேயாவது போயிருப்பாளோ? ஒரு வேளை மீண்டும் நேபாளத்துக்குப் போயிருப்பாளோ? ஏன், நோய் வாய்ப்பட்டும் இருக்கலாமே! உடல் என்று ஒன்று படைத்து விட்டால், நோய் நொடி ஏற்படுவது சகஜம்தானே? அதைத் தடுக்க யாரால் ஆகும்? — இப்படி ஓர் எண்ணம் எழவே, பொறுமை இழந்தேன். ஒரு நாள் அவள் கொடுத்த முகவரியைத் தேடிக் கொண்டு அவள் வீட்டுக்கே போயும் சேர்ந்தேன்.

அவள் வீடு சந்துக்குள் இருந்தது. வாசற் கதவு திறந்திருந்தது. முதலில் சற்றுத் தயங்கினேன். அப்புறம் தைரியமாக உள்ளே நுழைந்து விட்டேன். மிகச் சாதாரண வரவேற்பு அறை. இரண்டொரு சிறிய நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மறுபக்கம் உள்ளே போகும் கதவு இருந்தது.

அறையில் யாரையும் காணோம். வெளியிலிருந்தே குரல் கொடுக்கலாமா? ஆமாம்— எப்படிக் குரல் கொடுப்பது? சார் என்று கூப்பிடுவதா? உள்ளே யார் என்று கேட்பதா?

என் சங்கோசம் தொண்டையை அடைக்கவே, பேசாமல் நின்றேன். இந்த வீட்டில் அந்தப் பெண்மணியைத் தவிர வேறு யாரையும் எனக்குத் தெரியாது. வீட்டில் உள்ளவர்களுக்கும்தான் என்னை எங்கே தெரியும்? அதைவிட வேடிக்கை, எனக்கு அவளைத் தெரியுமே தவிர அவள் பெயரைத் தெரியாது. வெகு நேரம் கால் கடுக்கக் காத்திருந்தும் யாருடைய நிழலும் தென்படாமற் போகவே, நான் ஓசைப்படாமல் வெளியே வந்தேன்.

''அப்பனே அவளைப் பார்க்க நீ வருவானேன்? உனக்கு அப்படி என்ன முடை வந்து விட்டது?'

கொக்கி போட்டுக் கேட்டது என் மனம். கேட்ட கேள்விக்குப் பதில் கூற வேண்டியவன் நான் இருக்க, அதுவே கேள்விகளை அடுக்கி

கங்கை-காவிரி இணையுமா?

கிருஷ்ணா, கோதாவரி அணைக்கட்டுக்களை உருவாக்கிய கிழக்கிந்தியக் கம்பெனிப் பொறியாளர் சர் ஆர்தர் காட்டன், காவிரியையும் கங்கையையும் கால்வாய் மூலம் இணைக்க நூற்றாண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டார். அது நிறைவேறினால் 1640 மைல் நீளமுள்ள கால்வாய் பாட்னாவைக் குமரியுடன் இணைக்கும். பல மாநிலங்களில் விவசாயம் செழிக்க இது வகை செய்யும். லட்சக் கணக்கான மக்களுக்குக் குறைந்தபட்சம் பத்து ஆண்டு காலத்துக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும். தேசிய ஒருமைப்பாட்டுக்கும் வழி வகுக்கும். உள்நாட்டுக் கால்வாய்ப் போக்குவரத்து அபிவிருத்தி அடையும். மீன் வளம் பெருகும்.

கங்கையாறு காவிரியுடன் இணைய, இடையில் விந்தியமலை தடையாக நிற்பது பொறியியல் நிபுணர்களுக்கு ஒரு பொருட்டல்ல. கங்கை - நீரை 400 மீட்டர் உயரத்துக்கு ஏற்றத் தேவைப்படும் மின்சாரம் இதே இடத்தில் அமையும் மின்சார நிலையத்திலிருந்தே கிடைத்து விடும். பிறகு தாமதம் ஏன்? பணத் தட்டுப்பாடுதான் காரணம். மூவாயிரம் கோடி ரூபாய் வேண்டுமே!

—'பாணன்'

(கங்கை—காவேரி இணைப்பு மகாநாட்டில் திரட்டியது.)

"ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்..."











அம்சம் : 1

அம்சம் : 2

அம்சம் : 3

அம்சம் : 4

அம்சம் : 5











அம்சம் : 6

அம்சம் : 7

அம்சம் : 8

அம்சம் : 9

அம்சம் : 10

முன்னேற்றப் பாதையில் தமிழ்நாடு

"ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்..."




அம்சம் : 11

[illegible]



அம்சம் : 12

[illegible]



அம்சம் : 13

[illegible]



அம்சம் : 14

[illegible]



அம்சம் : 15

[illegible]



அம்சம் : 16

[illegible]



அம்சம் : 17

[illegible]



அம்சம் : 18

[illegible]



அம்சம் : 19

[illegible]



அம்சம் : 20

[illegible]

முன்னேற்றப் பாதையில் தமிழ்நாடு

யது: 'உனக்கும் அவனுக்கும் என்ன சொந்தம்? எதற்காக அவளைத் தேடிக் கொண்டு இங்கே வந்தாய்? அவன் மேல் ஆசைகொண்டு விட்டாயா?'

நான் வெலவெலத்துப் போய் விட்டேன். 'அந்த மாதிரியெல்லாம் எனக்கு எண்ணமே கிடையாது. கதைக்கு ஏதாவது பிளாட் கிடைக்குமோ என்கிற சபலத்தில் வந்திருக் கிறேன். ஒரு விந்தையான பாத்திரத்தைத் தேடி ஆர்வத்தோடு வந்திருக்கிறேன். அவ் வளவுதான். அதைத் தவிர வேறு ஒன் றறியேன், பராபரமே!'

நான் கன்னத்தில் போட்டுக் கொள்ளாத தோஷம்தான். கூசிக் குறுகிப் போன நான் மேலும் அவளை எதிர்நோக்கி நிற்காமல், வந்த வழியே சந்தில் இறங்கி நடக்கலானேன். என் கால்களுக்குத்தான் என்ன கறுகறுப்பு! அந்தச் சந்தைத் தாண்டிச் சாலைக்கு வந்து விட்டால் போதும் என்ற தவிப்பு!

ஆனால் சாலையும் சந்தும் சந்திக்கும் இடத் துக்கு வந்த பொழுது பார்த்தால், அந்தப் பெண்மணி எதிரே வந்து கொண்டிருந்தாள். இருவரும் ஒருவரையொருவர் எதிரும் புதிரும் சந்தித்து விட்டோம். என்னைப் பார்த்தவள், ''அட, நீங்களா? இந்தப் பக்கம் எங்கே?'' என்று கேட்டாள்.

''உங்கள் வீட்டுக்குத்தான் போயிருந் தேன்!'' என்றேன்.

''என் வீட்டுக்கா?''

''ஆமாம். என்றைக்காவது ஒரு நாள் வருமாறு நீங்கள் சொல்லியிருந்தீர்களே, நினைவு இல்லையா?''.

''அப்படியா? வாருங்கள்! நான் கொஞ்சம் சியாம் பஜார் வரைக்கும் போயிருந்தேன்!'' என்றாள் அவள்.

''சியாம் பஜாரா? எதற்கு?''

''என் தங்கையின் புகுந்த வீடு அங்கே தான் இருக்கிறது. ரொம்ப நாட்களாக அந் தப் பக்கம் நான் போகவே இல்லை. தங்கை யைப் பார்த்து வருவோமே என்று போயி ருந்தேன். அவள் விடவே மாட்டேன் என்று விட்டாள். அதனால் தான் திரும்ப நேரம் ஆகிவிட்டது. வாருங்கள், போவோம்!''

அவள் முன்னே செல்ல, நான் பின் தொடர்ந்தேன்.

வீட்டை அடைந்ததும் வாசலில் இருந்த படியே அவள் குரல் கொடுத்தாள்: ''கமலா! அடியே கமலா!''

பதில் வராமற் போகவே, வீட்டுக்குள் சென்று மறுபடியும் முன்போலவே இருமுறை குரல் கொடுத்தாள்.

நான் வெளியே அறையில் பேசாமல் உட் கார்ந்திருந்தேன்.

கமலாவை எங்கும் காணோம். அவள் திரும்பவும் நான் உட்கார்ந்திருந்த அறைக்கு வந்தாள்.

''பார்த்தீர்களா, வேடிக்கையை! நான் கமலாவை நம்பி வீட்டை விட்டு விட்டுப் போனேன். நான் திரும்புவதற்கு முன்னால் வெளியில் எங்கும் போய் விடாதே என்று சொல்லி விட்டுப் போயிருந்தேன். அவள் வீடு பார்த்துக் கொள்ளுகிற லட்சணத்தைப் பாருங்கள்! வீட்டைத் திறந்தபடி போட்டு விட்டு எங்கேயோ போய் விட்டாள்!'' என்றாள்.

''கமலா யார்?'' என்று நான் கேட்டேன்.


''என் வேலைக்காரி. இவர்களை நம்பி வெளியில் போகிறதே தப்பு. யாரும் நம்பக மாக இருப்பதே இல்லை!'' என்றவள், மேற் கொண்டு என்ன செய்வது என்ற யோசனை யில் ஆழ்ந்து விட்டாற் போல் மௌன மானாள்.

அப்பொழுது அங்கே ஒரு கிழவி வந்தாள். அவளைப் பார்த்ததும், ''ஏண்டி, உனக்கு அறிவு இருக்கிறதா? உன்னை நம்பி நான் தங்கச்சி வீட்டுக்குப் போனேனே. நீ பொறுப் பில்லாமல் வெளியே போய் விட்டாயே!'' என்று கடிந்தாள்.

''என்ன அப்படிச் சொல்லிட்டீங்க? வாய் புளிச்சாப்போலே! நான் வீட்டைச் சும்மா விட்டு விட்டுப் போவேனா? ஐயா வந்தாங்க. அதனாலே வீட்டை ஒரு முறைச் சுற்றிப் பார்த்து வரலாமே என்று போயிருந்தேன்!'' என்றாள் கமலா.

''ஐயாவா?'' வியப்புக் கொப்புளிக்கக் கேட்டாள் அவள். (தொடரும்)





குமாரி பிரதிபா சுப்பிரமணியம் ரசிகரஞ்சனி சபா வில் கூடியிருந்த கலைப் பிரியர்களைத் தனது சுத்த மற்ற, ரசிக்கத்தக்க பாத நாட்டியத்தால் மகிழ் வித்தாள். பத்து வயதேயான பிரதிபாவுக்கு அன்று அரங்கேற்றம். தன்னம்பிக்கையுடன் லாகவமாக அவள் பல்வேறு நடன வகைகளையும் ஆடியது, அவளுக்கு மிகச் சிறந்த எதிர்காலம் இருப்பதையும் நாறு ஆண்டுகள் ஸ்ரீமதி வனஜா நாராயணனிடம் பயின்றதில் பெற்ற கட்டுக்கோப்புகளையும் உணர்த் தியது. அபிநயங்களுள் 'வருகலாமோ' பல்வேறு வண்ணம் காட்டி ஜொலிக்கும் வைரமாய் பிர காசித்தது. பிரதிபாவின் தாயார் ஸ்ரீமதி லலிதா சிறப்பாகப் பாடினார்.

டி.பி.ஆர்.

மதுரை பெரிய கோயில் உற்சவங்கள்:

சித்திரை — திருக்கல்யாணம்
வைகாசி — வசந்த உற்சவம்
ஆனி — ஊஞ்சல்
ஆடி — முளைக் கொட்டு உற்சவம்
ஆவணி — புட்டுத் திருவிழா
புரட்டாசி — நவராத்திரி
ஐப்பசி — கோலாட்ட உற்சவம்
கார்த்திகை — தீப உற்சவம்
மார்கழி — எண்ணெய்க் காப்பு
தை — தெப்பம்
மாசி — மண்டல உற்சவம்
பங்குனி — கோடை வசந்தம்

12

ரமணி உள்ளுணர்ச்சிகளுக்குத் தன்னைத் தானே பலியாக்கிக் கொண்டு கண் மூடித்தனமாக எந்தச் செயலிலும் ஈடுபடக் கூடியவனல்ல. வாழ்க்கையின் நவரசங்களும் பணம் எனும் அஸ்திவாரத்தின் மீது எழுப்பப்பட்டவை என்று நம்பும் அவன் எதிலும் லாப நஷ்டக் கணக்கைப் பார்த்து ஒரு முடிவைத் தன்னுள் ஏற்படுத்திக் கொள்ளுவான். இக்குணம் அம்மாவிடமிருந்து வந்ததுதான்.

வாழ்க்கையை இப்படி ஒரு லாப நஷ்ட இயக்கமாகக் கருதினாலும், லாவண்யா விஷயத்தில் நஷ்டங்களை எண்ணிப் பார்க்கவில்லை. எதிர்காலம் என்னும் பட்டுப் பாயை ஹரிணி அவன் கண் முன் விரிக்கிறாள். அவன் அதன் நட்ட நடுவே கறுப்புக் கோட்டு கவுனுடன் நின்று மந்தகாசச் சிரிப்புச் சிரிக்கிறான். நூற்றுக் கணக்கான கட்சிக்காரர்கள் அவனைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எத்தனை எத்தனையோ வக்கீல்கள் வாயைப் பிளந்தவர்களாய்த் தூரத்தே நின்று பார்க்கிறார்கள்.

ரமணி கண்ணை மூடித் திறப்பதற்குள் பட்டுப் பாய் இருந்த இடத்தில் ஒரு கிழிந்த கோரைப் பாய் தெரிகிறது. அதில் வெள்ளை ஏறிய கறுப்புக் கோட்டுடன் அவன் நிற்க, பாயைச் சுற்றி வெறிச்சோடுகிறது. அவனுக்குத் துணையாக லாவண்யா கூடப் பக்கத்தில் இல்லை.

பிரமையில் தோன்றிய காட்சிகளை நினைத்து அவனே தட்டி எழுப்பிக் கொண்டான். பைத்தியக்காரத்தனமான மானசீகக் காட்சிகள் அவனுடைய இயல்பையே அல்லவா மாற்ற விழைகின்றன?

கடிகாரத்தைப் பார்த்தான். ஏழரை. நேரே சீனியர் ராமையா வீட்டுக்குப் போக வேண்டும். அங்கிருந்து ஒன்பது மணிக்கு லாவண்யா வீட்டுக்குச் சென்று பலராமனுடைய நிலைமையைப் பற்றி விசாரிக்க வேண்டும். நல்ல வேளையாக அன்று விடுமுறை. சீதாமணியுடன் அதிக நேரம் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

தான் செல்லும்போது லாவண்யா இல்லாமலிருக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டான்.

ராமையா வீட்டை நோக்கிச் செல்லும் போது, ஏன் அவரோ அவரது மனைவியோ அவனிடம் நேரடியாகக் கல்யாணத்தைப் பற்றி ஏதும் பேசவில்லை என்ற கேள்வி பிறந்தது. அவனுடைய அம்மா சாவித்திரி ஒரு முடிவுக்கு வந்து அந்த முடிவை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறியாகி விட்டது. ஆனால் நேற்றுவரை ராமையா வாயைத் திறக்கவில்லை. ஏன்? பெண் ஹரிணியை வைத்துக் கொண்டே அவனுடைய எண்ணத்தை அறிய நினைக்கிறாரோ?

• • •

சொக்கி குளத்தில் அரை ஏக்கர் நிலத்தில் நட்ட நடுவே வெள்ளை வெளேரென்று சிறு அரண்மனை போல இருப்பது 'திரிவேணி' என்னும் பங்களா. ஹரிணி பிறந்து ஒரு வருடத்துக்குப் பிறகு, அவனுடைய தாயாருக்கு இனிமேல் பிள்ளைப் பேறுக்கு வாய்ப்பே இந்த ஜன்மத்தில் இல்லை என்று டாக்டர்கள் சொன்ன பிறகு கட்டப்பட்ட பங்களா. 'திரிவேணி'க்கு என்ன அர்த்தம் என்று இதுவரை ராமையாவிடம் யாரும் கேட்டதில்லை. கேட்டிருந்தால், நான், என் மனைவி, என் பெண் என்று அவர் பதிலளித்திருப்பார்.

கட்டிடமே ஓர் அலாதிப் பாங்குடன் விளங்கியது. நன்றாக உள்ளடங்கி நிற்கும் கட்டிடம். தெருவிலிருந்து நிலா வெளிச்சத்தில் பார்த்தால் பளிங்குக் கல்லால் அமைந்த நீராழி மண்டபம் போலத் தோன்றும். பிரும்மாண்டமான இரு கேட்டுகளில் ஒன்று எப்போதுமே பூட்டப்பட்டிருக்கும்.

திறந்திருக்கும் கேட்டு வழியாக ரமணி நடந்தான். பன்னிரண்டு அடி அகலத்துக்கு பாதை. சிகப்புக் கற்களைப் பதிய வைத்துப் போட்ட பாதை. இரு மருங்கிலும் ஒரே ரோஜாச் செடிகள். வலது புறத்தில் புல்லாங்குழல் கிருஷ்ணனுடைய சிலை. அலுமினிய நிறம். இடது புறத்தில் இரண்டு கமுகு மரங்கள். நடுவே ஓர் ஊஞ்சல். இரவு வேளைகளில் ராமையா ஊஞ்சலில் உட்கார, மனைவி

மதுர நாயகி

பி.வி.ஆர்

ராஜம்மாவும் ஹரிணியும் எதிரே உட்காருவார்கள். ஒரு மணி நேரத்துக்கு, காலத்துக்கு ஏற்பக் கிடைக்கும் பழ வகைகளை ருசித்துக் கொண்டே அரட்டைக் கச்சேரி நடத்துவார்கள். இந்த மூன்று பேரைத் தவிர யாரையும் இந்த இடத்தில் ராமையா அனுமதித்ததில்லை. குடும்பத்தின் சொர்க்கமே இங்கேதான் என்று அவர் நம்பி யிருந்தார்.

ஊஞ்சலைப் பார்த்தபோது அவனையும் மீறி, அவன் ஹரிணியுடன் ஊஞ்சலில் உட்கார்ந்து திராட்சைப் பழம் சாப்பிடும் காட்சி கண் முன் தோன்றியது. அடுத்த கணம், தன்னை நிதானப்படுத்திக் கொண்டு நடந்தான். நந்தவனத்தின் விசிறி வாழைகளையோ, மல்லிகைப் பந்தலையோ அவன் கவனிக்கவில்லை. நேரே போர்ட்டிகோவுக்கு வந்தான். ராமையாவின் படகுக் கார், அங்கே நிற்க, ஹரிணியின் ஃபோக்ஸ் வேகன் சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்தது. ராஜம்மாவின் ஃபியட்டைக் காணோம்.

இருபது அடி நீளமுள்ள திண்ணையின் பத்து அடி அகலத்துக்கும் பச்சைக் கார்ப்பெட் விரிக்கப்பட்டிருந்தது. சுமார் பதினைந்து நாற்காலிகளும் ஓர் அழகுடன் அமைக்கப்பட்டிருந்தன. எட்டரை மணிக்கு நிரம்பி வழியும் திண்ணையில் இப்போது இரண்டே பேர்தான் இருந்தார்கள்.

ரமணியைக் கண்டதும் இருவரும் எழுந்தார்கள். வணக்கம் தெரிவித்தார்கள்.

''பெரிய குளத்திலிருந்து எப்போது வந்தீர்கள், சோமசுந்தரம்?''

''இன்னிக்குத்தான். கார்த்தாலே ஆறு மணிக்கு ஒரு பஸ் வந்தது.''

''நாளைக்கு உங்க கேஸ் வர்றது'' என்றான் ரமணி.

''குமாஸ்தா லெட்டர் போட்டிருந்தாரு.''

''நாளைய கேஸுக்கு இன்னிக்கே அவசரப் படுவானேன்?''

''இன்னிக்கு வந்தது இவருக்காகத் தானுங்க'' என்றான் சோமசுந்தரம்.

''அப்படியா? உட்காருங்க.''

திண்ணையிலிருந்து உள்ளே செல்ல மூன்று கதவுகள். நடுவே இருப்பது ஹாலுக்குச் செல்லும் வழி. இடப்புறம் உள்ள கதவைத் தாண்டினால் பெரிய அறை. ஜூனியர் வக்கீல்கள் உட்காரும் அறை. அதற்கு அடுத்தாற்போல, உள்ளே ஹாலின் நட்ட நடுவிலிருந்து வரக் கூடிய இன்னொரு அறை. சீனியர் ராமையாவின் அறை. பதினாறு அடிச் சதுர அறையில் எங்கு பார்த்தாலும் ஒரே புத்தகங்கள்தான். திண்ணையின் வலது புற அறையில் குமாஸ்தாவும், டைப்பிஸ்டுகளும் இருந்தார்கள். ஏழு உயரமான கோத்



ரெஜ் ஷெல்புகளில் கேஸ் கட்டுகள் சீராக வைக்கப்பட்டிருந்தன.

தற்போதுள்ள ஐந்து ஜூனியர்களில் ரமணி ஒருவனுக்குத்தான், ஹால் வழியாகச் சென்று ராமையாவின் அறைக்குள் எப்பவும் பிரவேசிக்க உரிமை உண்டு. மற்றவர்களெல்லாம் இன்னொ அறையிலிருந்துதான் வர முடியும். அதுவும் கூப்பிட்டால்தான்.

ரமணி ஹாலினுள் பிரவேசித்தான். அது வெறிச்சோடிய கோலத்தைப் பார்த்த உடனேயே ஸீனியர் இன்னும் தம் அறைக்கு வரவில்லை என்பதை உணர்ந்தான். ஹாலைத் தாண்டி நடந்தான். ராமையா கீழ் அறையில் இல்லாவிட்டால் மாடியில் உள்ள அறையில்



கேஸ் கட்டைப் படித்துக் கொண்டிருப்பார் என்று அவனுக்குத் தெரியும்.

முதற் படியில் காலை வைக்கும் போது, ''ஹாய் ரமணி, குட்மார்னிங்!'' என்ற குரல் கேட்டது. ஹரிணியின் குரல்.

''குட்மார்னிங், ஹரிணி!'' என்ற அவன், ''அப்பா மாடியிலே தானே இருக்கிறார்?'' என்று கேட்டான்.

''ஆமாம். ஆனா இப்பப் போகாதீங்க. நல்ல மூடில் இல்லே. சமையக்காரன்கிட்டே சள்ளுன்னு விழுந்தார்.''

''நானும் சமையற்காரனும் ஒண்ணு ஹரிணி!''

''யார் சொன்னா. எங்க வீட்டு சமையற்காரன் நன்னா சமைப்பானே!''

''உன் ஜோக்கை விட உன் அப்பாவோட சள்ளு புள்ளே தேவலே. நான் போய்ப் பார்க்கறேன்.''

''உங்க இஷ்டம். நாளைக்கு மாப்பிள்ளையா வரப் போறவர் இன்னிக்கே மாமனார் கிட்டே வசவு வாங்கிண்டா என் மனசு என்ன பாடு படும்னு நீங்க கொஞ்சம் கூட யோசிக்கலே!'' என்றாள் ஹரிணி.

''நான்தான் மாப்பிள்ளைன்னு அவர் நிச்சயம் பண்ணிட்டா, வசை பாட வேண்டியவனே நான்தான்... அது சரி, எங்கே புறப்படறே!''

''சரியான அபசகுனம். வக்கீல் புதுத்தெரு வரைக்கும் போகணும். சாரதாவைப் பார்க்கப் போறேன்.''

''சாரதாவையா?''

''ஏன், சாரதாவைத்தான். பார்க்கக் கூடாதா?''

''சாரதாவோட அப்பா இந்த வருஷம் ரோட்டரி கவர்னர்.''

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

''சாரதா மூலமா நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்.''

''ஸ்டேட்ஸ்லே கான்சர் ட்ரீட்மெண்ட் தானே? உங்க லாவண்யாவோட அப்பாவை மூட்டை கட்டி அமெரிக்காவுக்கு அனுப்ப வேண்டும். இதுதானே?''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''நீங்கதான் அஞ்சாறு நாளா உங்கஅம்மா பிராணனை வாங்கிண்டிருக்கேளே.''

''எங்க அம்மா பிராணன் அவ்வளவு ஒண்ணும் ஈஸியா எடுக்கக் கூடிய பிராணன் இல்லே. இன்னும் என் பேச்சை அவள் ஸீரியஸா எடுத்துக்கலே.''

''அப்படின்னு நீங்க நெனைச்சுண்டிருக்கேள். நானும் உங்க அம்மாவும் நேற்றே சாரதாவோட அப்பா, சட்டநாதனைப் பார்த்தாச்சு.''

''அம்மா சொல்லவே யில்லையே. ஆமாம், சட்டநாதன் என்ன சொன்னார்?''

''பெரிய மனுஷா என்ன சொல்லுவாளோ, அதைச் சொன்னார்.''

''புரியலே.''

''பார்க்கறேன்னார்.''

''அவ்வளவுதானா?''

''அவ்வளவேதான்.''

''நீ சாரதா கிட்டே அடிச்சுச் சொல்லப் படாதா?''

''நான் அடிச்சா சாரதா திருப்பி அடிப்பா! அவ அப்பாதான் ரோட்டரி கவர்னராச்சே!''

''விளையாடாதே, ஹரிணி. பலராமனும் என்னோட அப்பாவும் சின்னவயசிலே ஒண்ணாப் படிச்சு விளையாடினவர்கள். அவருடைய போதாதகாலம் ஓட்டலில் வேலைசெய்கிறார்.''

''நீங்க இப்ப யாருக்கு வக்காலத்து வாங்கு கிறீர்கள்னே எனக்குப் புரியலே... லாவண்யாவுக்கா இல்லே, அவ அப்பாவுக்கா?''

அவன் பதில் சொல்ல ஒரு சில வினாடிகள் தயங்கினான். மீண்டும் வாய்த் திறப்பதற்குள்.

''யார்டா, ரமணியா?'' என்ற குரல் கேட்டது. ராமையா.

ஸீனியர் ராமையா வழக்கம் போல ஜரி கைக்கரை வேட்டியும் டெரிலின் ஷர்ட்டுமாக காட்சி அளித்தார். அவரைப் பார்க்கும் போதெல்லாம் ரமணிக்கு அல்லாடி கிருஷ்ண சுவாமி அய்யரின் ஞாபகம் வரும். இவ்வளவுக்கும் அவன் அல்லாடியைப் பார்த்ததே கிடையாது. அவன் மதுரையில் பள்ளிக்கூடம் படிக்கையில் அல்லாடி காலமானவர். மதுரையில் பலர் ராமையாவின் உருவத்தைப் பார்த்து அல்லாடியுடன் ஒப்பிடுவதை அவன் கேட்டிருக்கிறான். அல்லாடியைப் போல ராமையாவும் குள்ளம். நெற்றி மேடும், மூக்கும், ஏன் உதடுகளும் கூட அல்லாடியைப் போலவே இருக்கும் என்பார்கள். இளம் வக்கீலாகப் பிரவேசிக்கும் போது அவன் கேட்டவை மனத்தில் பதிந்திருந்தன. ஆனால் உள்ளூற, அல்லாடி ஜெயித்த கேஸ்களைப் படித்த பிறகு, அவர் வாதம் செய்யும் திறமையைப் பல நூல்கள் மூலமும் வயதான வக்கீல்கள் மூலமும் தெரிந்து கொண்ட பிறகு, அவனையும் மீறி, 'அந்த அல்லாடி, எங்கே. இந்த ராமையா எங்கே?' என்ற கேள்வி எழும். அல்லாடி உலக மேடையில் கர்ஜித்த வக்கீல். ராமையா ஒரு பெரிய, பணம் சம்பாதிக்கும் வக்கீல். அவ்வளவுதான்.

''என்ன, ரமணி, பதில் சொல்ல முடியலேயா?'' என்றான் ஹரிணி.

''என்ன கேள்வி கேட்டே, பாபு? பதில் சொல்ல முடியாம என் ஜூனியர் தவிக்கிறான்?'' என்றார் ராமையா. ஹரிணிக்குச் செல்லப் பெயர் பாபு.

''ஒன்றுமில்லே!'' என்ற ரமணி ஹரிணியைப் பார்த்து மழுப்பினான்.

''ஏன் பயப்படறேள். ஒரு வேளை என் அப்பாவும் சிபாரிசு செய்யலாம் இல்லேயா?'' என்ற ஹரிணி, ''அப்பா, உங்களுக்கு சட்டநாதனைத்தான் நன்றாகத் தெரியுமே!'' என்று ஆரம்பித்தாள்.

''ஆமாம். அவனுக்கு என்ன... ஏண்டா ரமணி, அவன்கிட்டே உனக்கு என்ன சிபாரிசு சொல்லணும்....'' என்ற ராமையா, தொடர்ந்து...''அவன் ஒரு மடையண்டா... ஒரு எழவும் தெரியாது.... சொன்னாலும் புரிஞ்சுக்க முடியாத மட்டி. அவன் கிட்டே என்ன எதிர் பார்க்கறே?'' என்றார்.

ராமையா யாரையும் புத்திசாலி என்று ஒப்புக் கொண்டதில்லே. அவர் கெட்டிக்காரர், சூரர்தான். எல்லாருமே அவரைப் பாராட்டினார்கள். ஆனால் ராமையா யாரையும் புகழ்ந்து அவன் கேட்டதில்லே. இந்தக் குணம் ரமணிக்குப் பிடிக்காத ஒன்று. இன்னொன்று. யாரிடம் பேசினாலும் 'டா' போட்டுத்தான் பேசுவார். தெரிந்தவன், தெரியாதவன், என்ற பேதமே கிடையாது. ஒரு பெண் வக்கீல்களிடம் கூட 'டா' போட்ட பின் நாக்கைக் கடித்துக் கொண்டதாகச் சிலர் கேலி செய்தார்கள்.

''ஒன்றுமில்லே.''

''சரி பாபு, ஒன்றுமில்லியாம். நீ போ... ஏண்டா ரமணி, என்னிக்கு நீ மனம்விட்டு, தைரியமா நாலு வார்த்தை எங்கிட்டே பேசுவே? ஊர்லே எல்லாரும் சொல்றா, நீ சிரிக்கச் சிரிக்கப் பேசறவன்னு... ஆனால் என்னைக் கண்டதும் ஏன் இப்படி அடங்கி ஒடுங்கி வாலைச் சுருட்டிண்டு நிக்கறே?''

''நீங்க என் ஸீனியர்.''

''சட்டநாதன் கிட்டே என்ன காரியம் ஆகணும்? என் கிட்டே தைரியமாச் சொல்லு.''

ரமணி தயங்கித் தயங்கி, பலராமன் கதையைக் கூறினான்.

''இதுக்கு ஏன் அவன் இவன் காலை எல்லாம் பிடிக்கணும்?'' என்றார் ராமையா.

''வேறே வழி தோணலே.''

''உனக்கு அஞ்சாறு வீடு இருக்கோ இல்லியோ ... ஒண்ணை வித்து, பலராமனைக் கரை ஏத்து.''

''சார்.''

''பின்னே என்னடா? உன் அப்பனோட அவன் கோலி ஆடினான்ங்கறதுக்காக இதை எல்லாம் தலை மேலே சுமையா ஏத்திண்டா, தொழில்லே எப்படிக் கவனம் போகும்? உத்தமபாளையம் அப்பீல் வந்திருக்கே. கட்டைப் படிச்சியா?''

''இனிமேதான் படிக்கணும். நேத்து மத்தியானம்தான் வந்தது.''

''நல்ல ஜூனியர். நேத்து ராத்திரி என்ன பண்ணினே? நன்னா குறட்டை விட்டுத் தூங்கினியாக்கும். நான் வைத்தியநாதய்யர் கிட்டே ஜூனியர். அவர் கிட்ட போறபோது பாலுங் கல்லாப் போனேன்... கடைஞ்சு எடுத்த சிற்பமா வெளியே வந்தேன். எப்படி? சும்மா ஜூனியர்னு போயிட்டா போதுமா... இருபத்துநாலு மணி நேரம் ராமா ராமான்னு சொன்னா வைகுண்டம் கிடைக்கலாம்டா... ஆனா கேஸ் ஜெயிக்காது.''

''இன்னிக்குள்ளே படிச்சுடறேன்.''

''அதைச் செய். மதுரையிலே ஒரு பலராமன் இருந்தா என்ன, போனா என்னடா? காந்தியைச் சுட்டுத் தள்ளின கண்ட்ரியிலே இனிமே யார் இருந்தா என்ன, போனா என்ன? பலராமனும், கான்சராம்....''

''சார்.....''

''ஆமாம்டா. காந்தி போய் இருபத்தெட்டு வருஷம் ஆயாச்சு. நாம என்ன செய்யறோம்? அவரைப் பத்தி பேசிண்டிருக்கோம்.''

திடீரென்று ஒரு தைரியத்தில், ''என் காதை என்னாலேயே நம்ப முடியலே சார். நீங்க கூட ஒருத்தரைப் புகழ்ந்து பேசறேள்....'' என்றான் ரமணி.

''நீ ஒரு முட்டாள்டா... யூ ஆர் எ ஸ்டுபிட் ஃபூல்... நான் மனுஷாளைத்தாண்டா புகழ மாட்டேன். காந்தி கேவலம் மனுஷனா? உசிரோட இருக்கறப்பவே அவர் தெய்வம்!''

''சரி, சார்.''

''என்ன சரி....? உத்தமப்பாளையம் கேஸ் கட்டைச் சாயங்காலத்துக்குள்ளே படிச்சுக் குறிப்பு எழுதி என் டேபிள் மேலே வைக்கணும்... என்ன புரிஞ்சுதா?''

''சரி சார்.''

''என் பொண்ணு ஐஸ்கிரீம் திங்கக் கூப்பிட்டா, ஃபூத் தொடுக்கச் சொன்னான்னு ஏதாவதும் எக்ஸ்யூஸ் சொன்னே, தொலைச்சுப்புடுவேன். ஜாக்கிரதை!''

ரமணி லேசாகச் சிரித்தான். 'இதுமாதிரி என்னை ஆயிரம் தடவை தொலைச்சிருக்கேன்!' என்று மனம் முணுமுணுத்தது. (தொடரும்)

உடலின் மேலோடு உள்ள தொல்லையை



ஆழ்ந்து அகற்றும் களிம்பு–
அமிர்தாஞ்சன் டெர்மல் ஆயின்ட்மென்ட்

சாதாரண களிம்புகள் சருமத்தின் ஆழம்வரை எட்டாது. ஆனால் அமிர்தாஞ்சன் டெர்மல் ஆயின்ட்மென்ட் இதை எட்டும். ஏனெனில், சக்திவாய்ந்த சரும நிவாரணிகளின் அபூர்வக் கலவை இது. சாதாரண சரும நோய்களின் ஆதாரத்தை இது எட்டும்; உடனடியாக அகற்றும்; இயல்பான ஆரோக்கிய சருமத்தை வெளிப்படுத்தும்.



அமிர்தாஞ்சன் டெர்மல் ஆயின்ட்மென்ட், படை, சொரி, மற்றும் பல சரும நோய்களுக்கும் ஏற்ற லட்சிய நிவாரணி. இன்றே ஒன்று வாங்குங்கள்!

அமிர்தாஞ்சன் லிமிடெட் 14/15 லஸ் சர்ச் ரோடு, சென்னை 600 004

SAA/AM/1906 R.



கத்தரிக்காய் மசாலா கறி

தேவையான பொருட்கள்: கால் கிலோ பிஞ்சுக் கத்தரிக்காய், இரண்டு பெரிய வெங்காயம், தக்காளி இரண்டு, பூண்டு சிறியது ஒன்று, தேங்காய் மூடி ஒன்று, பட்டை, லவங்கம், இரண்டு ஸ்பூன் காரப் பொடி, சிறு கொத்தமல்லிக் கட்டு ஒன்று, தேவையான அளவு உப்பு.

செய்முறை: கத்தரிக்காய்களை நீளநீளமாக நறுக்கிக் கொள்ளவும். தக்காளியைச் சிறு சிறு துண்டங்களாக நறுக்கிக் கத்தரிக்காயுடன் கலந்துகொள்ளவும். இந்தக் கலவையில் உப்பையும் காரப் பொடியையும் கலந்து நன்றாகப் பிசைந்துக் கொள்ளவும். பிறகு வெங்காயத்தைப் பொடிப் பொடியாக நறுக்கி, அதில் பூண்டு, தேங்காய்த் துருவல், பட்டை, லவங்கம், கொத்தமல்லி எல்லாவற்றையும் கலந்து கல்லுரலில் போட்டு அரைத்து எடுத்துக் கொள்ளவும். இந்தக் கலவையைக் கத்தரிக்காயுடன் கலந்துவிட வேண்டும்: அதிகம் தண்ணீர் விடக் கூடாது. ஒரு வாணலியில் கொஞ்சம் எண்ணெய் வைத்து அது காய்ந்ததும் கத்தரிக்காய் கலவையை அதில் போட்டு நன்றாக வதக்கி, 'சுருண்டு' பதமாக வரும்போது இறக்கி விடவும்.

இப்போது கறி தயார். மசாலா வாசனை பிடிப்பவர்கள் இதை அல்வா மாதிரி சாப்பிடுவார்கள்!

-''ஸரோ''



பிரமிக்க வைக்கும் சாதனை

இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் ஜப்பானிய மாதர்கள் பலர் ஒன்று சேர்ந்து ஷுபரன் (குடும்பத் தலைவிகள் சங்கம்) என்று ஏற்படுத்திக் கொண்டனர். இவர்கள் நியாயமான விலையில் பொருட்கள் கிடைப்பதற்காகத் தங்கள் கோரிக்கைகளைப் பெரிய பெரிய தட்டிகளில் எழுதி நகரில் அடிக்கடி ஊர்வலங்கள் நடத்தினர். அந்தந்தப் பகுதிகளில் நியாய விலையில் பொருட்களை விற்கும் கடைகளைத் தேர்ந்தெடுத்து அக்கடைகளில் மட்டும் பொருட்களை வாங்கினர். நாளடைவில் இச்சங்கம் பிரமிக்கத் தக்க பல சாதனைகளைப் புரிந்தது. பல போதைப் பொருட்களின் விற்பனைக்கு அரசாங்கம் தடை விதிக்கச் செய்தது. தரக் குறைவான பொருட்களை வாங்காமல் பகிஷ்கரித்து வர்த்தக உலகைச் சீர்ப்படுத்தியது. ஒவ்வொரு பண்டத்தின் விலையை மட்டுமின்றி, அதில் கிடைக்கும் லாபத்தையும் அச்சடித்து அப்பண்டத்தின் மீது ஒட்டும்படி கடைக்காரர்களை வற்புறுத்தி வெற்றி கண்டது.

அதிக விலை கொடுத்து, புதிய டி. வி. செட் ஒன்றை வாங்கிய என் கணவர், அதற்கான கலர் ஸ்கிரீன் ஒன்றை எண்பது ரூபாய் கொடுத்து வாங்கக் கையில் பணமில்லாமல் தவித்தார். அப்போது நான் கூறிய யோசனை :

ஒரு ரூபாய்க்கு கலர் செல்லோபேன் பேப்பரைக் கடையில் வாங்கி அதை டி. வி. செட்டின் முன் பகுதியில் சதுரமாக, அழகாக ஒட்டி வைத்து விட்டால் மிக அருமையான கலர் ஸ்க்ரீன் பொருத்திய மாதிரி இருக்கும். டி. வி.யில் படமும் மிகத் தெளிவான கலரில் தெரிகிறது.

எண்பது ரூபாய் செலவு ஒரு ரூபாய்க்குள் முடிந்து விட்டது!

-வசந்தா



எங்கள் வீட்டுப் பக்கம் திருட்டுப் பயம் அதிகம். ஓட்டைப் பிரித்துக் கொண்டு சுலபமாக இறங்கிச் சாவகாசமாக அடித்துக் கொண்டு போய் விடுவார்கள். இப்படி எத்தனையோ வீடுகளில் திருடு போயிருக்கிறது. எங்கள் வீட்டுக்குப் பின் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள் பத்து நாட்களுக்கு வெளியூர் செல்ல வேண்டி வரவே, அக்கம் பக்கத்திலிருந்த அனைவரிடமும் தங்கள் வீட்டைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுச் சென்றனர்.

அன்று என் பிள்ளை ரத்தினங்கள் நாலும்-இருபது வயது சீமந்தபுத்திரன் உட்பட-பந்து விளையாடிக் கொண்டிருக்கையில் எதிர் பாராத விதமாகப் பூட்டியிருந்த பின் பக்கத்து வீட்டு மொட்டை மாடியில் பந்து சென்று விழுந்து விட்டது. என் சீமந்த புத்திரன் ஏணியைக் கொண்டு வந்து சுவரில் சாற்றி மொட்டை மாடியை எப்படியோ அடைந்து பந்தையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டான்.



வண்ண டெலிவிஷன் விலை மிக அதிகமாய் இருந்தபோது இச்சங்கம் அதனைப் பகிஷ்கரித்தது. அதனால் வண்ண டெலிவிஷன் எதுவும் விலை போகாமல் கடைகளில் தேங்க ஆரம்பித்தது. வியாபாரிகள் வேறு வழியின்றி விலையில் இருபது சத விகிதம் குறைத்தனர்.

தரக் குறைவான பொருட்களைக் கொண்ட ஒரு கண்காட்சியை டோக்கியோ நகரில் ஆண்டுக்கு ஒரு முறை இச்சங்கம் நடத்துகிறது. அங்கத்தினர்கள் சமூக சேவைகளிலும் சிறப்பாக ஈடுபடுகின்றனர். வயதான ஏழைகளுக்கும், குருடர்களுக்கும் பல உதவிகளைச் செய்கின்றனர்.

லலிதா நாராயணன்
ஆதாரம்: ஃபெமினா



- வடைக்கு மாவு அரைக்கும்போது அதிக அளவு தண்ணீர் சேர்ந்து விட்டால், மாவு கெட்டிப்பட ஒரு ஸ்பூன் கெட்டி நெய்யைச் சேர்க்க வேண்டும்.
- வெய்யில் நாட்களில் தோசை மாவு, இட்லி மாவு ஆகியவை பொங்கி வழியாமல் இருக்க வாழை இலைத் துண்டு ஒன்றை மாவின் மேல் போட்டு வைக்க வேண்டும். அதிகமாகப் புளித்து விடாமல் இருக்கச் சிறிது சமையல் சோடா சேர்க்கலாம்.

-ஆர். ஸ்ரீதேவி



எங்கள் ஆபீஸில் அநேகமாகப் பெண்களே அதிகம். மானேஜர் மிகவும் நல்லவர். பெண்களை மிகவும் மரியாதையுடன் நடத்துபவர். ஆனால் தலையில் தினமும் பூ வைத்துப் பொட்டுடன்தான் வரவேண்டும். அப்படி வராதவர்கள் மீது எரிந்து விழுவார்.

நான் பஸ்ஸை விட்டு இறங்கியதும் ஹோட்டலில் சூடாக ஒரு காப்பி சாப்பிட்ட பின் அப்படியே பூக்காரக் கிழவியிடம் பூ வாங்கி வைத்துக் கொண்டு ஆபீஸ் செல்வது வழக்கம்.

ஒரு நாள் பஸ்ஸில் பர்ஸ் திருட்டுப் போய் விட்டது. அதிகம் பணம் இல்லை என்றாலும் ஹோட்டல்காரரிடம் பதில் சொல்ல எனக்கு வெட்கமாக இருந்தது. எனது கைப் பையைத் துழாவியபோது அதில் ஆச்சரியமாக ஓர் இருபத்தைந்து காசு நாணயம் இருந்தது. காப்பியோ முப்பத்தைந்து காசு. ஒரு யோசனை தோன்றியது. பூக்காரக் கிழவியிடம் ஓடிப் போய் ஒரு முழம் பூவுடன் பத்துப் பைசா கடன் கேட்டு வாங்கி ஹோட்டல் பில் கொடுத்து விட்டு வந்தேன்.

மறுநாள்! நேற்றையப் பூவின் கிரயத்தோடு இன்றைய பூவின் கிரயம், கடன் வாங்கியது பத்து பைசா எல்லாம் சேர்த்து முதலில் பூக்காரக் கிழவியிடம் கொடுத்து என் நன்றியைக் கூற வேண்டும் என்று எண்ணியபடியே பஸ்ஸை விட்டு இறங்கினேன். பெரிய அதிர்ச்சி! கிழவியைக் காணவில்லை. விசாரித்ததில் கிழவி அன்றிரவே இறந்து விட்டாள் என்று சொல்லிக் கொண்டார்கள்.

சரியான சமயத்தில் என்னைக் கைதூக்கிக் காப்பாற்றிய அந்தப் பூக்காரக் கிழவியின் நன்றிக் கடனை நான் எப்படித் தீர்ப்பேன்!

—ஆர் ஜெயலக்ஷ்மி

இவன் மொட்டை மாடியில் நின்றதைச் சற்றுத் தள்ளியிருந்த வீட்டில் இருந்தவர்கள் பார்த்ததோடு, பட்டப்பகலில் பூட்டியிருக்கிற வீட்டில் கொள்ளையடிக்க எவனோ திருடன் வந்து விட்டிருக்கிறான் என நினைத்து நாலைந்து பேரை அழைத்துக் கொண்டு கொம்பு தடிகளுடன் வீட்டை முற்றுகையிட்டனர்.

பந்து கிடைத்ததும், விளையாடியது போதுமென எண்ணி என் பிள்ளைகள் வீட்டுக்குள் வந்து விட்டனர். ஏதோ வேலையாகத் தோட்டப் பக்கம் சென்ற நான் நாலைந்து பேர் கழிகளுடனும், கொம்புகளுடனும் பின்பக்க வீட்டைச் சுற்றி வருவதைப் பார்த்து, 'என்ன விஷயம்?' என்று விசாரித்தேன். எவனோ திருடன் மொட்டை மாடி வழியாக உள்ளே இறங்கியிருக்கிறான் என்று இரகசியமாக அவர்கள் கூறி அவன் வெளியே வரக் காத்திருந்தார்கள் — வளைத்துப் பிடிக்க.

''நீங்கள் பார்த்தீர்களா அவனை? எப்படி இருந்தான்'' என்று நான் அவர்களை வியப்புடன் கேட்டேன். ''அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறீர்கள்? நல்ல பேண்ட், ஷர்ட்டுடன், 'டிப்டாப்பாக' இருந்ததை என் கண்ணால் பார்த்தேன்.'' என்று வர்ணிக்க ஆரம்பித்து விட்டார்கள். அந்த வர்ணனையைக் கேட்டதும், 'சாட்ஷாத்' என் சீமந்தபுத்திரன்தான் அது என்பதை உணர்ந்துகொண்ட நான், விவரத்தைக் கூறி அவர்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்காக மன்னிப்புக் கோரி அனுப்பி வைத்தேன். அன்றைய தினத்திலிருந்து பாவம், என் பிள்ளைக்குப் 'பகல் திருடன்' என்ற பட்டப் பெயர் கிடைத்தது!

—இராஜம் சந்தானம்



கல்கியின் அதிர்ஷ்டம்; தமிழுக்குப் பெருமை!

பல்துறை மேதையாக விளங்கிய அமரர் கல்கி எத்தனையோ விதங்களில் அதிர்ஷ்டசாலியும்கூட. பல சான்றோரின் நட்பு தமக்குத் தற்செயலாகக் கிடைத்தது. ''விட்ட குறை தொட்ட குறை'' என்று அவரே சொல்வார் என அவரது வாழ்க்கை வரலாற்று நூலின் ஆசிரியர் சுந்தா அவர்கள் தெரிவிக்கிறார். செய்வன திருந்தச் செய்யும் பண்பும் தளரா உழைப்பும் விஞ்ஞான நோக்கும், கலைப் பாங்கும் ஒருங்கே வாய்ந்தவரும் கல்கியின் நண்பரும் ஆகிய சுந்தா இவ்வரலாற்றை எழுத இசைந்ததும் வரலாற்று நாயகரின் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். தம் தந்தையாரின் வாழ்க்கை வரலாற்றைத் தாமே எழுத எண்ணிச் சான்றுகள் சேகரித்ததாகவும் பின்புதான் சுந்தா அவர்கள் இந்தப் பணிக்குத் தம்மைக் காட்டிலும் தகுந்தவர் என்று முடிவு செய்து அவரை அணுகியதாகவும் கி. ராஜேந்திரன் தமது அணிந்துரையில் கூறுகிறார். ''பொன்னியின் புதல்வர்'' என்னும் பொருத்தமான மகுடம் தாங்கிய, 885 பக்கங்கள் கொண்ட இந்த வரலாற்று நூலின் வாசகர்கள் அவருடைய முடிவை ஒருமுகமாக ஆதரிப்பார்கள்.

வானதி திருநாவுக்கரசு அவர்கள் சொல்வது போல், ''இது கல்கியின் வரலாறு மட்டுமல்ல! தேசத்தின் ஐம்பதாண்டு கால அரசியல் வரலாறு; தமிழ்ச் சமுதாயத்தின் வரலாறு; தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்தின் வரலாறு.'' நூல் இத்தகைய சிறப்பு உள்ளது என்பதை உணர்ந்தே திருநாவுக்கரசு தம் பக்திக்குரிய பேராசிரியரின் வாழ்க்கை வரலாற்று நூலை எழில் மிக்க சிறந்த பதிப்பாகக் கொண்டு வந்து நன்றிக் காணிக்கை செலுத்தியிருக்கிறார். சுந்தா அவர்களின் சொற்களில் இது ''ஒரு பெருமைப் பதிப்பு.''

ஆராய்ச்சி நூலுக்குரிய கோட்பாடுகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கும் சுந்தா அவர்கள் திண்மையான சான்றுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, தமது வளமான கற்பனைக்கு இடம் கொடுக்காமல், வரலாற்றை எழுதியிருப்பது மற்ற வரலாற்றாசிரியர்கள் பின்பற்ற வேண்டிய பண்புகளில் ஒன்றாகும். இந்தக் கண்டிப்பினால் நூலின் சுவை குன்றி விடவில்லை. கல்கியின் வாழ்க்கையே நவீனம் போன்று சுவையானது என்று நூலாசிரியர் சொல்வது உண்மைதான். எனினும் சுந்தாவின் ஆற்றல் மிக்க பேனாவும் சிறந்த ஓவியனின் தூரிகை போன்று கணக்கற்ற சொல்லோவியங்களைத் தீட்டி வாசகர்களின் அழகுணர்ச்சியைத் திருப்தி செய்திருக்கிறது. வரலாற்று நாயகரின் படைப்புகளிலிருந்து பொருத்தமாக எடுத்தாளப்பட்டிருக்கும் எண்ணற்ற மேற்கோள்கள் சுவைக்குச் சுவை கூட்டுகின்றன.

சுந்தாவின் சுருக்கமும் அழகும் வாய்ந்த தமிழ் நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு இதோ:

''ராஜாஜியும் டி. கே. சி.யும் உண்மையாய் இணைந்த உத்தம நண்பர்களாய் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அவர்களுடைய இணைப்பு வியப்பானதே. அவர்களிடையே பொதுவாய் இருந்தது இலக்கியம் ஒன்றுதான். அதிலும் கூட ரசிகமணியின் பார்வை உணர்ச்சிப் பார்வை; ராஜாஜியின் பார்வை அறிவுப் பார்வை. டி. கே. சி.க்கு அரசியலில் அக்கறையே கிடையாது. அவர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தபோதும் அதில் உண்மையான ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. ராஜாஜியோ, மிக மிகத் தீவிரமாய் அரசியலில் ஈடுபட்டவர். முட்டாள்களுடனும் பரிவுடன் பழகுவார் ரசிகமணி; மூளைக் குறைவானவர்களைக் கண்டாலே பிடிக்காது மற்றவருக்கு. யாருடனும் எதைப் பற்றியும் அதிகமாகத் தர்க்கம் செய்ய மாட்டார் டி.கே.சி. நேர்மாறாக ராஜாஜி வாதச் சிலம்பம் என்றால் சளைக்காமல் விளையாடுவார். யாரையும் தோற்கடிக்கக் கூடாது என்பது டி.கே.சி.யின் பண்பு. தோற்கடிக்க வேண்டியவர்களைத் தோற்கடிக்கத்தான் வேண்டும் என்பது மற்றவரின் கொள்கை. நடந்ததை எண்ணி டி.கே.சி. மகிழ்வார், அல்லது வருந்துவார்; ராஜாஜியோ இனி நடக்க வேண்டியதையே எண்ணித் திட்டம் இடுவார்.'' (பக்கம் 282).

எத்தகைய உயிரோவியம்!

அமரர் கல்கியை எத்தனை எத்தனையோ வடிவங்களிலும் பாங்குகளிலும் நாம் காண்கிறோம். சுந்தாவின் சொற் சித்திரங்களுக்கு அணி செய்கின்றன அபூர்வமான பல புகைப்படங்கள். அதிலும் கல்கியின் ''அப்பளக் குடுமி'' போட்டோவைக் காணக் கண் கோடி வேண்டும்.

இத்தகைய தோற்ற வேறுபாடுகள் மட்டும் இன்றி வரலாற்று நாயகரின் பல்வகையான மன நிலைகளும் தன்மை வேறுபாடுகளும் தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. சிறந்த மொழி பெயர்ப்பாளர், புதுமை இலக்கியச் சிற்பி, பற்பல இலக்கியச் சோதனைகள் செய்தவர், தமிழ்ப் பத்திரிகைத் தொழில் வரலாற்றில் புது சகாப்தத்தைத் தோற்றுவித்தவர், கோட்பாட்டில் உறுதி உள்ளவர், எதிராளிகளும் போற்றும் பண்பாளர், இசையும் நடனமும் ஏற்றம் பெற உழைத்த ரசிகர், ராஜாஜியின் அரசியல் பிரசாரகர், போராட்ட வீரர் என்று எத்தனை எத்தனையோ கோலங்களில் அமரர் கல்கியைக் கண்டு வியக்கிறோம். அதோடு, அன்புத் தந்தையாகவும் பரிவுள்ள கணவராகவும் அரிய நண்பராகவும் பிறர்க்கு உதவும் பெருந் தன்மையாளராகவும் உயர்ந்த மனிதராகவும் கல்கி நமக்குக் காட்சி தருகிறார்.

பூர்ணம் சோமசுந்தரம்

பொன்னியின் புதல்வர்

நூல் வெளியீட்டு விழா.







✖ உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு மகராஜன் "தமிழ் வானத் துறையில் ஓர் [illegible]காசம்" என்று வர்ணித்து முதல் பிரதியைக் கல்கி ஆசிரியர் திரு சதாசிவம் அவர்களிடம் வழங்கினார். இடையில் நூலாசிரியர் சுந்தா.

✖ கல்கியுடன் நீண்ட காலத் தொடர்புகளையெல்லாம் அவையோர் மெய்சிலிர்க்க நினைவுகூர்ந்தார் திரு ம. பொ. சி. அருகில் ஆளுனரின் ஆலோசகர்.

✖ ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் ஸ்ரீமதி ராதா விசுவநாதனும் கல்கியின் பாடல் ஒன்றையே இறை வணக்கமாகப் பாடினார்கள்.

✖ இளம் தலைமுறையின் சார்பில் பேசிய ஸ்ரீமதி சிவசங்கரி.

✖ தலைமை தாங்கி இன்றைய தலைமுறைக்குக் கல்கியின் சேவையை நினைவு கூர்வது எவ்வளவு அவசியம் என்று எடுத்துரைத்த ஆளுனரின் ஆலோசகர் திரு கார்த்திகேயன். அரிய முறையில் நூலைத் தயாரித்த வானதி திருநாவுக்கரசுக்குச் சால்வை போர்த்தி மகிழ்ந்தார்.

✖ கல்கியின் பணி ஒரு கோபுரம் போன்று உயர்ந்திருப்பது. அதன் நாற்புறங்களிலும் உள்ள கலை நுணுக்கங்கள் ஆய்ந்து பார்க்கப் பார்க்க மகிழ்விப்பன என்றார் திரு சோமு.









அதிவேகத் தகவல்!

அமெரிக்காவில் கம்ப்யூட்டர்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை ஒருசில நிமிஷங்களில் இங்கே நாம் பெற்றுவிட முடியும்.

கம்ப்யூட்டரின் ஒரு பகுதி - ஒரு ஸூட்கேஸில் அடக்கிவிடக் கூடிய கருவி - சென்னையில் நிறுவப்படுகிறது. கம்ப்யூட்டரின் தகவல் சேமிப்புப் பகுதிகள் கலிஃபோர்னிய நகரான ஸான்டாமோனிகாவில் உள்ளன. இரண்டையும் இணைப்பது வழக்கமான அயல்நாட்டு டெலிஃபோன் தொடர்புதான் — செயற்கைக் கோள் அல்லது கேபிள்.

டெலிஃபோன் தொடர்பு கிடைத்ததும் இங்குள்ள கருவியில் டைப் செய்கிறார் ஒருவர். ஒவ்வொரு எழுத்துக்கும் அல்லது எண்ணுக்கும் குறிப்பிட்ட ஓர் ஒலி எழும்பி அவ்வொலி டெலிஃபோன் மூலம் அமெரிக்காவை அடைந்து மீண்டும் எழுத்து அல்லது எண் வடிவம் பெறுகிறது. கம்ப்யூட்டர் தரும் பதிலும் இவ்வாறே மறு பிரயாணம் செய்து இங்கு வந்து சேர்கிறது. டைப்ரைட்டரை டெலிவிஷனுடன் இணைத்துவிட்டால் டைப்ரைட்டரில் படிக்கும் செய்தியைத் திரையிலும் பார்க்கலாம்.

இந்த அற்புத சாதனத்தை அண்மையில் சென்னை அமெரிக்கத் தகவல் நிலையம் இயக்கிக் காட்டியது. இத்துறையில் பெறப்படும் ஒத்துழைப்பு விஞ்ஞானிகள், வியாபாரிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள் முதலியோருக்கும் பெரிதும் பயன்படும்.

பத்திரிகாசிரியர், எழுத்தாளர் என்ற முறையில் கல்கி கணக்கற்ற விவாதங்களில் உற்சாகமாகக் கலந்து கொண்டதுண்டு. அவரும் அவருடைய படைப்புக்களும் கடுந் தாக்குதல்களுக்கும் சொல்லம்புகளுக்கும் இலக்கானது உண்டு. கல்கியுடைய வாழ்க்கையின் இந்த அம்சத்தை நூலாசிரியர் சுந்தா வருணித்திருக்கும் நய நுட்பம் மெச்சத் தகுந்தது. வரலாற்று நாயகரின் குறைபாடுகளை மறைக்காமல், எதிராளிகளின் நவநுகளை நாசூக்காகச் சுட்டிக் காட்டுவது அவருடைய நடு நிலைமைக்கும் சிறந்த பண்பாட்டுக்கும் சான்று பகர்கின்றது.

''கல்கி'' பத்திரிகையில் தொடராக வந்தபோது பகுதி பகுதியாகப் படித்த இந்த வரலாற்றை இப்போது புத்தக வடிவில் படிக்கத் தொடங்கினவன், ஒரே மூச்சில் படித்துத் தீர்த்து விட்டேன். அவ்வளவு சுவையான நூல் இது. நண்பர் ராஜேந்திரன் சொல்வது போலப் படிக்கும் போது பல இடங்களில் ''மெய்சிலிர்க்கிறது, கண்கள் கலங்குகின்றன.''

தமிழ் இலக்கிய வளர்ச்சியின் மிக முக்கியமான திருப்பக் கட்டத்தில் வாழ்ந்து செயலாற்றியவர் கல்கி. எனவே, இலக்கிய வரலாற்று மாணவர்களுக்கும் பொதுவாக இலக்கியப் பற்று உள்ளவர்களுக்கும் இந்த நூல் அரிய செய்திக் கருவூலமாகும். முதல் அத்தியாயத்திலேயே உள்ள ''கல்கி'' என்ற பெயர் பற்றிய சர்ச்சை, பின்பு அடுக்கடுக்காக வரும் பல தகவல்கள் முதலியன கல்கி — இலக்கிய ஆராய்ச்சியாளர்களுக்குச் சுவையானவை. உதாரணமாக ''மூத்தையன் கதையின் கதை''யைக் காட்டலாம். ''கள்வனின் காதலி''யின் நாயகன் திருநெல்வேலி ஜம்புலிங்கத்தை மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்டவன் என்றே நானும் எண்ணியிருந்தேன்—இதைப் படிக்கும் வரை!

நூலில் வரும் அரசியல் சர்ச்சைகள் அண்மைக்கால அரசியலில் ஆர்வம் உள்ளவர்களுக்கு ரசமாயிருக்கும்.

இந்த நூலைத் தயாரிப்பதற்கு ஆசிரியர் சுந்தா மேற்கொண்ட அபரிமிதமான உழைப்பும் பிரமாணபூர்வமான தகவல்களுக்காக அவர் நடத்திய தேட்டமும் பாராட்டுக்குரியன. பின் இணைப்புக்கள் இந்த நூலைச் சிறந்த ஆராய்ச்சி நூல்களின் தரத்துக்கு உயர்த்துகின்றன.

''பொன்னியின் புதல்வர்'' ஒவ்வொரு தமிழனும் பெருமை கொள்ளத் தக்க படைப்பு.

கிடைக்குமிடம்: வானதி பதிப்பகம்,
10, தீனதயாளு தெரு, தி. நகர்,
சென்னை-600017. விலை ரூ. 35.



இந்த மதிப்புரையை எழுதிய திரு பூர்ணம் சோமசுந்தரம், தமிழ், இந்தி, ஆங்கிலம், ரஷ்ய மொழி ஆகிய நான்கிலும் புலமை வாய்ந்தவர். இந்தியில் மிக உயர்ந்த பட்டங்கள் பெற்ற இவர், ராஜாஜியின் வியாசர் விருந்தையும் கல்கியின் கள்வனின் காதலியையும் அம்மொழியில் ஆக்கிப் புகழ் சூடியவர்.

இப்போது திரு சோமசுந்தரம், ரஷ்யாவின் தலைநகரில் அமைந்துள்ள முற்போக்கும் பதிப்பகத்தின் தமிழ்ப் பகுதிப் பொறுப்பாளராய் இருந்து வருகிறார். 1957ல் மாஸ்கோவுக்குச் சென்றதிலிருந்து இதுவரை இவர், சுமார் நூறு ரஷ்ய நூல்களைத் தமிழில் ஆக்கி வெளியிட்டுள்ளார். இவரைப் பதிப்பாசிரியராய்க் கொண்டு ரஷ்ய மொழியில் வெளியாகியுள்ள தமிழ் நூல்களில், கல்கியின் ''அலை ஓசை'' நாவலும் ஒன்று.

ரஷ்யாவுக்குச் செல்வதற்கு முன்னால், புது தில்லியில் பத்து வருட காலம் ''நவ் பாரத் டைம்ஸ்'' என்ற இந்திப் பத்திரிகையில் உதவி ஆசிரியராய் இருந்தார் திரு சோமசுந்தரம். அக்காலத்தில் அவர் இயற்றிய இந்தி நூல்களில் ஒன்று, 'தமிழ் இலக்கிய வரலாறு'.


சிறந்த நாவல் ஆசிரியர் உமா சந்திரனும் குணசித்திர நடிப்புக் கலைஞர் பூர்ணம் விசுவநாதனும் இவருடைய சகோதரர்கள்.

இவரைப் பற்றி இன்னும் ஒரு சுவையான தகவல்:

நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றியவர் இவர். அதன் தொடர்பாய் டெல்லிச் செங்கோட்டையில் பிரிட்டிஷ் அதிகாரிகள் நடத்திய விசாரணையின்போது ஆறு மாத காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

வீட்டு வசதி அமைப்பில் வெற்றி நடைபோடும் தமிழ்நாடு!

1977-78ல் ரூ. 20 கோடி செலவில் வீடுகட்டும் திட்டம். 'ஹட்கோ', உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தீவிரப் பணி



வீடு கட்டும் திட்டத்துக்கு 1976-77ல் ஒதுக்கப்பட்ட முதலீட்டைக் காட்டிலும் இப்போது 55 சதவிகிதம் கூடுதலான முதலீடு.

முற்போக்குத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:

இம்மாபெரும் வீட்டமைப்புத் திட்டத்தில் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய பகுதிகளுக்கு உலக வங்கி அளிக்கும் உதவியும் ஒத்துழைப்பும் அடங்கியுள்ளன.

'ஹட்கோ'வின் உதவி பெறும் திட்டங்கள்:

- சென்னைக்கு அருகில் உள்ள பாடியில், டிவிஎஸ் தொழிலாளர்களுக்கு 400க்கு மேற்பட்ட வீடுகள்.
- வியாசர்பாடியில் அசோக் லேலண்ட் தொழிலாளர்களுக்கு 398 வீடுகள்.
- ஈரோட்டில் நெசவாளர்களுக்கு ரூ. 2 கோடி செலவில் வீடுகட்டும் திட்டம்.
- திருச்செங்கோட்டில் ஒரு கோடி ரூபாயில் திட்டம்.
- மணலியில் தொழிலாளருக்கு 540 வீடுகள் கட்ட, எம். எம். டி. ஏ.—தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுத் திட்டம்.
- ஒசூரில் தொழிலாளருக்கென வீடு அமைப்புதிட்டம்.
- வேலூரிலும் கடலூரிலும் புதிய புறநகர்ப் பகுதி வீடுகள் கட்டும் திட்டங்கள்.
- எல் ஐ஼ ஸி உதவியுடன் கொரட்டூரில் குறைந்த வருவாய் உடையோர்க்கான வீடுகள்.

கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 'ஹட்கோ நிறுவனம்' தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 47 திட்டங்களுக்கு ரூ. 18.87 கோடி உதவியுள்ளது. ஏழை எளிய மக்களுக்கு 4900 வீடுகள். குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு 5316 வீடுகள்.

'ஹட்கோ'வின் உதவி பெறும் வீட்டு வசதித் திட்டங்களில் தலைமைச் சிறப்பிடம் பெற்றுள்ளது தமிழ்நாடு!



ADWAVE/DIPR/7073/77-121

மீன்கள் வளர்ப்பது எப்படி?



ஊர் மாற்றம் வேண்டி உத்தியோகத்தை மாற்றிக் கொண்டு அவர்கள் ஈரோட்டுக்கு வந்து சேர்ந்த போது கடுங் கோடை. அவர்கள் என்பது அப்பாவும் பெண்ணும்.

ஒவ்வொரு நாளும், அவளுடைய தந்தை அதிகாலையில் எழுந்து, தமக்கும் மகளுக்கு மாகச் சமைத்து வைத்து விட்டுத் தம்முடைய மதியச் சாப்பாட்டை ஒரு சிறு அலுமினியம் டப்பியில் போட்டு எடுத்துக் கொண்டு, வீட்டுக்கெதிரேயிருந்த சாலையில், முதல் டவுன் பஸ்ஸைப் பிடித்து ஊருக்குள் அவர் ஊழியர்க்காக வேலை செய்து வந்த ஆபீசுக்குச் செல்வார்; மலைவாயில் மஞ்சள் சூரியன் மறையும் பொழுது திரும்பி வருவார்.

அந்தக் கோடையில் பிரியாவுக்கு ஒன்பது வயது முடிந்திருந்தது. ஆனால், கடந்த ஒரு வருடமாக அவள் பள்ளிக்கூடத்துக்குச் செல்வதில்லை. ஒரு வருடமாக, அவள் உடல் நிலை சரியாயில்லை. தன்னையொத்த மற்ற குழந்தைகளுடன் சிநேகம் வைத்துக் கொள்வதுமில்லை. விளையாட்டிலும் வேடிக்கையிலும் அவளுக்கிருந்த நாட்டம் எங்கே போயிற்றென்றே தெரியவில்லை. ஈரோட்டுக்கு வந்த பிறகு அவளுடைய தந்தை சில சமயம், ''இந்த லீவு முடிஞ்சு ஸ்கூலெல்லாம் திறக்கறப்போ, நீயும் ஸ்கூலுக்குப் போறியா, பிரியா?''என்று கேட்பார்.

''மாட்டேம்ப்பா'' என்பாள் சில சமயம். பல சமயம் பதிலே வருவதில்லை.

அக்கம் பக்கத்துப் பெண்மணிகள் அவள் மேல் பரிதாபம் கொண்டு அவளிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தார்கள்.

நான்கைந்து வீடுகள் தள்ளியிருந்த சுசீலா என்ற பெண் டவுனில் டீச்சராக வேலைபார்த்து வந்தாள். தினமும் காலையில் பள்ளிக்குச் செல்லும் போது, பிரியாவின் வீட்டைத் தாண்டித்தான் அவள் செல்ல வேண்டும். பிரியாவை ஆதரவாக நோக்கிப் புன்னகை செய்து விட்டுச் செல்வாள். ஆனால் பிரியா, எதையும் இலட்சியம் செய்வதில்லை.

கூர்றிவு படைத்த குழந்தைகள் கூட அவளது அந்த இயல்பைக் கண்டு அவளை நெருங்குவதில்லை.

பகல் வேளைகளில் பிரியாவுக்கு, அந்த வீட்டில் வேலை செய்து வந்த துளசி என்ற பெண்மணிதான் துணை. அவளுடனும் பிரியா ஒன்றும் பேசுவதில்லை. துளசி தன் வேலை முடிந்ததும், கொல்லைப்புறத்தில், கிணற்றங் கரையில் ஒரு துண்டை விரித்துப் படுத்து நிம்மதியாய் உறங்கி விடுவாள். பிரியாவும் வாசற்படியும் எதிரே தெரியும் சாலைக் காட்சிகளுமே கதி என்று உட்கார்ந்திருப்பாள், தாயில்லாக் குறையைத் தாளாமல்.

மாலையில், பிரியாவின் தந்தை ஆபீஸில் இருந்து வீட்டுக்கு வந்தவுடன், வேலைக்காரி துளசி, ஏதோ தானும் ஆபீஸிலிருந்து கிளம்பு பவள் போல் டாணென்று படுத்திருந்த துண்டை உதறியெடுத்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பி விடுவாள். அதன் பின்னர் பிரியாவின் தந்தை இரவுச் சாப்பாட்டைச் செய்து முடிப்பார். சில சமயம் பிரியாவை அழைத்துக் கொண்டு கொஞ்ச தூரம் உலவி விட்டு வருவதும் உண்டு. முக்கால்வாசி நாட்களும் அவர் ஆபீஸ் விட்டு வீடு திரும்பும் போது, ஒரு முழம் அவந்திப் பூவோ, மல்லிகைப் பூவோ வாங்கி வருவார். தகர டிரங்கின் மீது ஏறிக் கொண்டு, பிரியாவின் தாயாரின் படத்துக்குச் சூட்டுவார். பிரியா சற்றுத் தள்ளி நின்று கொண்டு, இமை கொட்டாமல், முகத்தில் எந்த வித உணர்ச்சியும் காட்டாமல், வேடிக்கை பார்ப்பாள்.

ஒருநாள் மாலை பிரியாவின் தந்தை ஆபீஸிலிருந்து திரும்பும் போது, அவளுக்குப் பரிசு ஒன்று கொண்டு வந்தார்.

''இதைப் பாரேன், பிரியா. பஸ் ஸ்டாண்டு கிட்டே ஒருவன் விற்றுக் கிட்டிருந்தான். உனக்காக இரண்டு வாங்கி வந்தேன். அழகாயில்லே?'' என்றார்.

அவர் கையிலிருந்த பாட்டிலுக்குள்போதும் போதாதுமாக இருந்த தண்ணீரில், வட்டமடித்து நீந்திக் கொண்டிருந்தன இரு சிறிய மீன்கள்; அவற்றையே வெகு நேரம் பிரியா பார்த்துக் கொண்டிருந்தாள். இதற்கு முன்னர் அவள் உயிருள்ள மீன்களை யாரும் விற்பனை செய்து கேள்விப்பட்டதில்லை. கறிகாய்க் கடைகளுக்குப் பின்புறம், கூடைக்காரிகளின் உரத்த கூச்சல்களுக்கிடையே படு நாற்றத்துடன் விற்பனையாகும் அவற்றின் சடலங்களைத்தான் பார்த்திருக்கிறாள்.

ஆனால் இவை, அவற்றைப் போல் அல்லாமல் உயிரோடு நீச்சலடித்துக் கொண்டிருந்தன. மிகச் சிறியவைகளாக ஓர் அங்குல நீளம் கூட இல்லாமல் மண் வண்ணமாக இருந்தன. ஆனால் அவற்றின் பின்னே, மிகச் சிறிய விசிறிகள் போல் அதியற்புதமாக விரிந்த வால்களில், வானவில்லைத் தோற்கடிக்கும் வகையில் வண்ணங்கள் ஜொலித்தன.

பிரியா அந்தப் பாட்டிலைத் தன் தந்தையிடமிருந்து வாங்கி, வராந்தாவின் ஜன்னல் கட்டையில் வைத்துச் சிறிது நேரம் மீன்களை நோக்கிக் கொண்டிருந்தாள்.

பிரியாவுக்குக் கொஞ்சநேரம் தான் அந்தச் சுவாரசியம் நீடித்தது. மீன்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவள், சட்டென்று அசிரத்தையுடன் எழுந்து உள்ளே சென்று விட்டாள். அதன் பின், மறுநாள் காலை, பால்காரனுக்குக் கதவைத் திறக்கும் போது தான், அவற்றின் நினைவு அவளுக்கு மீண்டும் வந்தது. துளசி வாசலில் பால் வாங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவள் மெள்ள ஜன்னலருகே தூக்கக் கலக்கத்துடன் சென்று பார்த்தாள். பாட்டிலில், அவ்விரண்டு மீன்களும் இறந்து, தண்ணீரின் மேல் மட்டத்தில் மிதந்து கொண்டிருந்தன.

பிரியாவின் தந்தை, தன் கை விரல்களாலேயே, வாயிற்படிகளுக்கு அருகில் பூமியில் ஒரு சிறு குழி தோண்டி, அவ்விரு மீன்களையும் போட்டு மூடினார். இறப்பில் அவை தட்டையாக, மைக்காத் துண்டங்களைப் போல் ஒரு வித வெளுத்த ஒளியுடன் காட்சி அளித்தன. எங்கே சென்றன அவ் வானவில் வண்ணங்கள்?— தாயின் பிரிவு போதாது என்று மீன்களும் மரித்துக் குழந்தை யுள்ளத்தைக் கலக்கின.

பிரியா சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். ஸ்கூல் டீச்சர் சுசீலா, சற்றுத் தள்ளித் தயங்கி நின்றவாறு, அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிரியாவின் பார்வையைச் சந்தித்தவுடன் இலேசாகப் புன்னகை செய்து விட்டு, மேலே நடந்து சென்று விட்டாள்.

அன்று, முதன் முதலாகப் பிரியா தாயை மறந்து மீன்களை நினைத்தாள். அவள் மனத்தை ஒரு குற்ற உணர்வு பிழிந்தெடுத்தது.

அவற்றுக்குத் தீனி போட மறந்ததால் தான் அவை மரித்தன என்ற ஏக்கம் அவளை ஆட்கொண்டது.

''அப்பா! எனக்கு அதே மாதிரி இன்னும் இரண்டு மீன்கள் வாங்கித் தா, நான் இந்தத் தடவை அதை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கறேன்'' என்றாள்.

மறுநாள் மாலை, அவள் வராந்தாவில் நின்று கொண்டிருந்த போது, அவ்வழியே போய்க் கொண்டிருந்த சுசீலா டீச்சர் சட்டென்று நின்று, ''ஏன், பிரியா! உனக்கு மீன் வளர்க்கறதுன்னா பிடிக்குமா?'' என்று கேட்டாள்.

பிரியாவுக்கு அவள் தன் பெயரைத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தது வியப்பை அளித்தது. அவளுடைய ஆதரவான முகத்தையும், சிவந்த நெற்றியில் பளீரென்று ஒளி வீசும் குங்குமப் பொட்டின் அழகையும் பார்த்த வண்ணம் தன்னை மறந்து நின்றாள்.

''ரொம்பப் பிடிக்கும்மா. அதைக் கவனமாப் பார்த்துக்கறும், கொஞ்ச நாள் பொறு. நான் உனக்கு வேறே வாங்கித் தரேன்....'' என்று கூறிச் சுசீலா சென்று விட்டாள்.

ஒருநாள் மாலை, வாயிற்படியில் உட்கார்ந்தபடி அப்பா ஆபீஸிலிருந்து வருவதை எதிர் பார்த்திருந்தாள் பிரியா. அப்பொழுது ஊருக்குப் போயிருந்த சுசீலா டீச்சர் சாலை இறக்கத்தில் இறங்கி, வருவது தெரிந்தது. அவளது வலது கையில் பெட்டியும், இடது கையில் ஒரு சிறு பிளாஸ்டிக் கூடையும் இருந்தன. நேரே தன் வீட்டுக்குச் செல்லாமல் பிரியாவின் அருகில் வந்த சுசீலா கூடையை அவளிடம் நீட்டி, ''இந்தா, பிரியா உனக்காக வாங்கி வந்தேன்'' என்றாள்.

கூடையினுள்ளே நான்கைந்து ஹார்லிக்ஸ் பாட்டில்கள் இருந்தன. ஒவ்வொரு பாட்டி



வின் மேலும், வட்டமாகப் பிளாஸ்டிக் பேப்பர் ஒட்டப்பட்டிருந்தது. பாட்டில்களின் உள்ளே ஆகா, எத்தனை விதமான, எத்தனை அழகான, எத்தனை வியப்பூட்டும் மீன்கள்?

அச்சமயம் அங்கு, புதிய காலடிச் சத்தங்கள் கேட்கவே, அவர்கள் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். நான்கைந்து குழந்தைகள், வழக்கமாக அங்கு விளையாடிக் கொண்டிருப்பவர்கள், ஆர்வத்துடனும், குறுகுறுப்புடனும் சுசிலாவின் கையிலிருந்த கூடையைப் பார்த்தபடி நின்றார்கள்.

பிரியா குழந்தைகளுக்கே இயல்பான பொறுமை நிறைந்த குரலில் சொன்னாள்: "இதெல்லாம் என்னுடையது! உங்களுக்குக் கிடையாது!"

பிரியா சடக்கென்று கூடையுடன் உள்ளே போகத் திரும்பினாள். கடைசி நிமிஷத்தில் என்ன தோன்றியதோ? திரும்பிக் குழந்தைகளைப் பார்த்து, "வேணும்னா, நீங்களெல்லாம் கொஞ்ச நேரம் உள்ளே வந்து மீனையெல்லாம் பார்த்துட்டுப் போங்க" என்று குரலில் பெருமை தலைதூக்க அழைத்தாள்.

சுசிலா டீச்சர் கூடையிலிருந்து பாட்டில்களை எடுத்து, ஒவ்வொன்றாக வரிசைப் படுத்தி ஜன்னல் கட்டையின் மேல் அடுக்கினாள். அவர்கள் எல்லோரும் குழுமி நின்று அவற்றை வேடிக்கை பார்க்கலானார்கள். கசமுச வென்று குழந்தைகள் கொம்மாளமிடும் சத்தம் அந்த இடத்தை நிறைத்தது. பிரியா வெகு ஆர்வத்தோடு உள்ளே ஓடினாள்.

ரொட்டித் துண்டு ஒன்றை எடுத்து வந்து விரல்களால் நசுக்கிப் பொடியாக்கி, ஒவ்வொரு பாட்டிலுக்குள்ளும் அவள் தூவின போது, அந்த மீன்கள் ஆர்ப்பாட்டத்துடன் அவற்றைப் பிடிக்க மேல் எழும்பி வந்த காட்சி அதி விநோதமாக இருந்தது.

அப்பொழுது, அங்கே வந்த பிரியாவின் தந்தை "இந்த மீன்களோட பெயரெல்லாம் உங்களுக்குத் தெரியுமா? அதோ பாருங்க.... தங்க நிறமா நீந்துதே, அது தான் 'கோல்ட் ஃபிஷ்'. இதனுடைய பேர் சுராமி. இது கப்பி. கோடு கோடாகப் போட்டிருக்குதே, அது 'ஏஞ்சல் ஃபிஷ்'..." என்று சொல்லிக் கொண்டே போனார்.

"எப்படி மாமா, இவ்வளவு பேரும் உங்களுக்குத் தெரியும்!" என்றான் ஒரு சிறுவன்.

"எப்பவோ ஒரு புஸ்தகத்திலே படிச்சிருக்கேம்பா..."

பிரியாவின் கண்கள் சட்டென்று பெருமையில் நட்சத்திரங்களைப் போல் ஒளிவிட்டன.

"ஏன் நீங்க உங்க பெண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கல்லே?" என்று கேட்டாள் சுசிலா. அவர் அவள் பக்கம் திரும்பி, "முன்பு போய்க் கொண்டுதான் இருந்தாள். அப்புறம்... அவளுடைய தாயார் இறந்து ஒரு வருடமாகி விட்டது... அதன் பிறகே பிரியா பிரமை பிடித்தவள் போலிருக்கிறாள். இந்த ஊர் ஒரு மாறுதலாக இருக்குமேன்னு நினைத்தேன். ஆனால் இங்கு வந்தும் அவளுக்கு எதிலும் நாட்டம் விழக் காணோம்.... இனிமே எப்ப இவளை ஸ்கூல்லே சேர்க்கறதுன்னு தெரியலே... என்ன படிக்கப் போறான்னும் புரியலே..." என்றார். அவருடைய பார்வை மென்மைக் கவலையுடன், அந்தக் குழந்தைகளின் கும்பலில் பிரியாவைத் தேடியது.

"நீங்கள் சேர்த்து விடுங்கள். கஷ்டமாயிருக்கும் பாடங்களையெல்லாம் நான் வந்து சொல்லித் தரேன். நாலு குழந்தைகளோட பழகினாத்தான் அவளுக்கும் நல்லது..."

அவர்கள் இருவருடைய பார்வையும் ஒரு கணம் சந்தித்துப் பிரிந்தன. "இந்தப் பெண் என்ன அழகாய் புன்னகைசெய்கிறாள்?" என்ற எண்ணம் ஒரு மின்னல் போல் வேகமாகப் பிரியாவின் தந்தையின் மனத்தில் ஓடி முடியுமுன், கலீரென்று, சிரிப்பொலி கேட்டது. பிரியா சிரித்துக் கொண்டிருந்தாள். அந்தச் சிரிப்பு, ஒரு கோடி புஷ்பங்களால் அர்ச்சனை செய்வது போன்ற ஆனந்தத்தை அவருக்கு அளித்தது.

அவர் மறுபடியும் சுசிலாவைத் திரும்பிப் பார்த்த போது, அவள் சுதாரித்துக் கொண்டு ஒரு சிரிப்புடன் கேட்டாள்: "மீன்கள் வளர்ப்பது பிரியாவுக்காகவா? இல்லே, அது உங்கள் பொழுது போக்கா?"

"இரண்டும்தான் என்று இப்பத் தோன்றுகிறது" என்ற அவர், "உண்மையில், நீங்கள் ஒரு மந்திரவாதிதான். நான் கொண்டு வந்த



ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. சிகின் ஃபிளாஸ்குகளைத் தயாரிப்போரும் தமிழக அரசின் டான்சி நிறுவனத்தினரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இந்த ஒப்பந்தப்படி இரட்டைச் சுவருடைய கண்ணாடிக் கூடுகளை டான்சி தயாரிக்கும். இத் தொழிலகத்துக்கு அருகேயே அமையும் சிகின் தொழிலகம் அதற்குப் பூச்சுக் கொடுத்து மேலுறை போட்டு ஃபிளாஸ்குகளாக்கும்.

மீன்களால் ஓர் உபயோகமுமில்லை. ஆனால் நீங்க வாங்கி வந்ததால்., வாழ்க்கையே திரும்பி வந்தது போலிருக்கிறது...'' என்றார்.

சுசீலா டீச்சர் '' போய் வருகிறேன்'' என்று சொன்ன போது, பிரியாவின் தந்தை பிரியாவை அழைத்து; ''டீச்சருக்கு 'தாங்ஸ்' சொல்லம்மா. உனக்காக எவ்வளவு அழகான மீன்களை வாங்கி வந்திருக்கிறார்?'' என்றார்.

பிரியா, டீச்சரின் கரத்தைத் தன் விரல்களால் வெட்கத்துடன் இலேசாகத் தொட்ட படி,''தாங்ஸ், டீச்சர்....'' என்று சொல்லி முடிப்பதற்குள்ளாகவே, ''பிரியா, பிரியா! நாளைக்குக் கார்த்தாலே திரும்ப வர்றோம், நீயும் எங்களோடு ஸ்கூல்லே சேர்ந்து விடேன்!'' என்றன குழந்தைகள்.

பிரியாவின் முகத்தில் விரிந்த சிரிப்பு, காது வரையில் நீண்டு கொண்டே போயிற்று.

தந்தையும் மகளும் சாப்பிட்டு விட்டுத் தூங்கச் செல்வதற்கு முன், பாட்டில்களையெல்லாம் தூக்கிச் சென்று படுக்கும் அறையில் ஒரு மேஜையின் மேல் வைத்தனர்.

''இந்தப் பாட்டிலெல்லாம் போறாது பிரியா. கண்ணாடித் தொட்டி ஒண்ணு வாங்கி, அதில் மணல் போட்டு, பாசிச்செடி எல்லாம் நட்டு வச்சு, இந்த மீன்களையெல்லாம் தூக்கி அதுக்குள்ள போட்டா, என்ன ஜோராயிருக்கும் தெரியுமா?'' என்றார் தந்தை.

மேஜை விளக்கின் ஒளி, மேஜையின் மேல் இருந்த பாட்டில்களின் மேல் பட்டு, அந்த வெளிச்சத்தில் மீன்கள் அற்புதமாகத் தெரிந்தன.

பிரியா அன்று மாலை தன்னுடன் பேசி விளையாடிய மற்றக் குழந்தைகளை நினைத்துக் கொண்டாள். இரண்டு நாட்களில் திறக்கப் போகும் பள்ளிக்குத் தானும் அவர்களுடன் செல்வதாக எண்ணிப் பார்த்தாள். சுசீலா டீச்சரின் பளீரென்ற முகத்தையும், அவளுடைய சிரிப்பின் மென்மையையும் எண்ணிப் பார்த்தாள்., பிறகு மறுபடியும், கண்ணாடி பாட்டில்களில் நீந்திக் கொண்டிருந்த மீன்களையே பார்த்தாள்.

''அப்பா மீனெல்லாம் தூங்காதா?''

''தூங்கும், பிரியா. ஆனால், கண்ணை மூடிக்காது....''

அவர் குரலிலிருந்த மென்மையான சிரிப்பு பிரியாவை அவரைப் பார்க்கத் தூண்டியது. அப்பா கூட இன்று மாலையிலிருந்து வித்தியாசமாகி விட்டது போல் தோன்றியது. அவள் கண்களை இடுக்கிக் கொண்டு அவரை நோக்கினாள்.

தூக்கம் கண்களில் கவியப் பிரியா, மெள்ள அறையைச் சுற்றி ஒரு முறை கவனித்தாள். நேர் எதிரே சுவரில், அம்மாவின் படம் தென்பட்டது. வழக்கமான, இனிமையான மகிழ்ச்சியான புன்னகை அந்த முகத்தில்... ஆனால் பிரியாவின் மனத்தில் அந்த வழக்கமான சோகம் வந்து கவிந்து கொள்ளவில்லை... மாறாக, அவள் சுசீலா டீச்சர், ''உங்கம்மா ரொம்ப அழகாயிருக்காங்க...'' என்று படத்தைப் பார்த்துச் சொன்னதை நினைத்துக் கொண்டாள். மனம் முழுதும் ஒருவித சந்தோஷமும், பெருமையும் வியாபித்தன.

வட்ட மேஜை

☐ திருவண்ணாமலையில் புதியதாக ஆஸ்பத்திரி கட்டப்பட்டது முதல் நான் அங்கு செல்லவே யில்லை. என் வீட்டில் பக்கத்து போர்ஷனில் குடியிருக்கும் பத்மாவுக்குப் பிரசவ வலி எடுத்தவுடன் அவசரமாக வேறு உறவினர் இல்லாததால் அழைத்துக் கொண்டு போனேன்.

ஒரு மணி நேரம் கடந்தது. தாயும் சேயும் நலம். சுகப் பிரசவம். டாக்டர்களே வர வில்லை. ஆயாக்களும், நர்சுகளும்தான் பிரசவம் பார்த்தனர். 'பெட்' கொடுக்கவில்லை. நர்ஸ்களை அணுகியும் ஒன்றும் பயனில்லை. கூட இருந்தவர்கள் சொற்படி ரூ. 51 கொடுத்த பின் 'பெட்' கிடைத்தது. இருண்ட அறை. அதில் இரண்டு கட்டில்கள். அவற்றில் இரு தாய்கள். தரையில் இரண்டு தாய்கள். மருந்து வாசத்துடன் துர்நாற்றம் வேறு. என்னைக் காண வந்த என் கணவர் தாமாகவே கு. க. ஆபரேஷன் செய்து கொள்ள இணக்கம் தெரிவித்தார். அவரைத் தான் கான்வாஸ் செய்ததாக ஒரு நர்ஸ் போட்டு ரூ. 101 தரகுத் தொகை பெற்றதாகப் பின்னர் தெரிந்தது. காலை பிரசவமாகியும் மாலை வரை ஒரு டாக்டர்கூட வந்து பார்க்கவில்லை. ஓர் ஆயா மட்டும் வாயில் ஓர் அவுன்ஸ் மருந்தை ஊற்றி விட்டுப் போனார். மறுநாள் நர்ஸ், ஆயா, சலவைத் தொழிலாளி என்று ரூ. 25 வாங்கிக் கொண்டார்கள். டாக்டர் மறுநாள் வந்து பார்த்தார். பணம், பணம், பணம். பணத்தைக் கொடுத்தால் திரும்பிப் பார்த்தார்கள். இல்லாதவர்களைப் பார்க்கக்கூட ஆள் இல்லை. லஞ்ச ஒழிப்பு என்ற சொல் முதலில் உயிரைக் காக்கும் புனித இடமான ஆஸ்பத்திரிகளில் அர்த்தமுள்ளதாக வேண்டும்.

திருவண்ணாமலை
17–1–77 லலிதா செல்லப்பா

☐ விமல் மித்ரரின் சாட்சி நெம்பர்-3 எனும் நாவல் முதல் அத்தியாயத்திலேயே திகைப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. ரா. வீழிநாதனுடைய தமிழாக்கம் நன்றாக உள்ளது. நாவலின் ஆசிரியர் விமல்மித்ர சி. ஐ. டி. டிபார்ட்மெண்ட்டின் சாட்சி நம்பர்-3 ஆக இருப்பதால் கதையின் ஆரம்பத்திலேயே சுவையை உணர முடிகிறது. இதே பாணியில் இந்நாவல் சுவையை வழங்கட்டும்.

கொள்ளிடம்
3–3–77 எம். காமராஜ்

☐ 'பொன்னியின் புதல்வர்' வரலாற்று நூல் வெளியாகும் தருணம் அவர் உச்சி மீது வைத்துக் கொண்டாடிய 'நாட்டுக்கொரு புதல்வ'ரின் சரிதம் கல்கியில் வெளியாக ஆரம்பித்துள்ளது அவர் தம் (அமரர் கல்கி) ஆன்மாவுக்கு மிகுந்த சாந்தியளிக்கும் என்பதில் ஐயமில்லை.

சென்னை
3–3–77 வி. சு. வாசுதேவன்



சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 17

ஸாங்கிய யோகம்

சலீமாவைச் 'சுய நினைவு இழக்கச் செய்திருக்கிறார்கள்' என்பதை உணர்ந்து கொள்ளச் சேரமானுக்கு வெகு நேரமாகவில்லை.

''என்ன இது?'' என்று அதட்டினார் தரங்கிணியைப் பார்த்து.

தரங்கிணி தலை கவிழ்ந்தாள்.

''பகைவர்கள் பருகும் நறவில், மறதிக் கனிச் சாற்றைக் கலந்து வைப்பது பேதைகள் செயல். போர்க்களத்திலேயே அது தர்மமில்லை என்றால், ஒரு பூவையை நினைவிழக்கச் செய்வது எவ்வளவு பேதைமை? ம்... மாற்று மருந்து கொண்டு வா'' என்றார் சேரமான்.

தரங்கிணியும் பிறரும் தலை தெறிக்க ஓடினார்கள். மற்றும் ஒரு மூலிகையே மாற்று மருந்து; அதைக் கொண்டு வந்தார்கள்.

சலீமா சிரித்தாள்; அழுதாள்; அவர் கலை நெருங்க விடவில்லை. குழியில் இருந்த அவளைச் சேரமான் தன்னிரு கைகளால் குழந்தையைப் போல் வாரியெடுத்தார்.

பலபேர் முன்னிலையிலேயே மணலிலே அமர்ந்தார்; சலீமாவைத் தம் மடியிலே சாய்த்துக் கொண்டார். தம் நினைவற்ற நிலையிலும் அதற்கு உடன்பட்டாள் சலீமா.

''இதோ பார், அம்மா!'' என்று குழந்தையுடன் பேசுவது போல் பேசித் தம் உள்ளங்கையில் மூலிகையைத் தேய்த்து அவள் நாசியின் முன் மாற்றி மாற்றிக் காட்டினார் சேரமான்.

சலீமாவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நினைவு திரும்பிற்று.

''அரசே!'' என்று எழுந்து உட்கார்ந்தாள்.

மிரண்டு பார்க்கும் மான் குட்டியைப் போல், திரண்டு நிற்கும் கூட்டத்தைப் பார்த்தாள்.

''சரி. மற்றவற்றைப் பிறகு பேசிக் கொள்வோம். நீ வா!'' என்று அவளைக் கைத்தாங்கலாக எடுத்து எழுந்தார் சேரமான்.

தரங்கிணி, ''அண்ணா!'' என்றாள்.

அவர் அவளிடம் பேசவில்லை. ஏன், யாரிடமும் பேசவில்லை.

தம் ஐம்பது வீரர்களுக்கும் ஜாடை காட்டியபடி அவர் நடந்தார்.

மலை சரியும் இடத்துக்கு வந்ததும், மற்றவர்கள் பின்தங்கினார்கள், தரங்கிணி உட்பட.

அங்கதன் புரவி, முன்னால் செல்ல, சேரமான் சலீமாவைத் தன் மார்போடு அணைத்தவாறு ஒரு புரவியில் செல்ல ஐம்பது வீரர்களும் பின்னால் சென்றார்கள்.

மலை வளையங்களுக்குள் செல்லும் போது, சமவெளியில் என்ன நடக்கிறது என்பது சேரமானுக்குத் தெரியவில்லை. ஆனால் சமவெளியை ஒட்டிய மலைச் சாலைக்கு அவரது புரவி வந்தபோது திருவிதாங்கோட்டில் ஒரு பெரிய சேனை வியூகம் வகுத்திருப்பதை அவர் காண முடிந்தது.

தயக்கத்தோடு சற்று நேரம் அவர் தம் புரவியை நிறுத்தினார்.

ஆனால் அங்கதன் புரவியோ அதிவேகமாகப் போய்க் கொண்டிருந்தது. பிறகு சேரமான் புரவி மெதுவாக நடக்க ஆரம்பித்தது.

திருவிதாங்கோட்டை நெருங்க நெருங்க அணிவகுத்து நிற்பது மார்த்தாண்ட வர்மனின் படைகளே என்பதையும், தலைமை தாங்குவது மார்த்தாண்ட வர்மனே என்பதையும் சேரமான் கண்டு கொண்டார்.

சாணக்கிய நம்பூதிரியின் மூளை எவ்வளவு தூரம் அலைபாய்ந்திருக்கிறது என்பதை அவரால் அறிய முடிந்தது.

அவரது புரவி நேரே மார்த்தாண்டவர்மனின் புரவிக்கு எதிரே வந்து நின்றது.

''மைத்துனருக்கு வணக்கம்!'' என்றான் மார்த்தாண்ட வர்மன் அமைதியாக.

''ம்!'' என்றார் சேரமான்.

சலீமா பயத்தால் அவர் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''அந்த அராபியப் பெண் இனி திருவஞ்சைக் களத்துக்குச் செல்ல முடியாதென்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றான் மார்த்தாண்ட வர்மன்.

''ஏன்? யாரிட்ட ஆணை?'' என்று கேட்டார் சேரமான்.

''ஆணை யிட்டவன் தென்னாடுடைய சிவன்; அவன் எந்நாட்டவர்க்கும் இறைவன்!'' என்றான் மார்த்தாண்டவர்மன்.

''சைவத்தின் திருப்பணி தனியொருவனின் காலடிச் சுவடுகளைத் தொடருவது தானே...?''

''சமயங்களில், சமயம் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டித்தான் இருக்கிறது.''

''நானும் ஒரு சைவன்தான் என்பதை என் மைத்துனர் அறிவார் என்று நினைக்கிறேன்...''

''சமயப் பற்று உறுதியாக உள்ளவர்கள், பிற சமயத்தாரிடம் அன்பு காட்டுவார்கள்; இரக்கம் காட்டுவார்கள்; கருணை காட்டுவார்கள்; ஆனால் காதல் கொள்ள மாட்டார்கள்.''

''காதலைக் கந்தி முனையில் சந்திக்கச் சொல்வதும் சைவம்தானே...?''

''அது சொல்லாததொன்றில்லை; அதில் இல்லாததொன்றில்லை.''

''நாம் என்ன சமர்க் களத்தில் நிற்கிறோமா, சமயச் சந்தையில் விளையாடுகிறோமா?''

''சமயத்தைக் காக்கச் சமர் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம்.''

''ஒரு நிராயுதபாணியோடு போர் செய்வதுதான் என் மைத்துனரின் வீரமோ...?''

''நாடு பிடிக்கும் போரானால் படை கொண்டு வரத் தவனை உண்டு; இதுநாடு காக்கும் போர். ஆயுதம் யார் கையில் என்ற கேள்விக்கு இடமில்லை.''

''மார்த்தாண்ட வர்மா!''

''அப்படிக் கூப்பிடுங்கள். அந்த உரிமை உங்களுக்கு உண்டு. நான் வந்திருப்பது உங்களைச் சிறை செய்ய அல்ல; அது என் விருப்பமும் அல்ல. சாதாரண காலத்தில் என்னால் முடியக் கூடியதுமல்ல. ரத்த பந்தத்தைக் காப்பாற்ற அராபியக் கிளியை அராபியாவுக்கு அனுப்பவே நான் இங்கே வந்திருக்கிறேன்.''

''அது உன்னால் ஆகாது.''

''இப்போது என்னால் ஆகக் கூடியது அது ஒன்றுதான்.''

''என் பிணத்தைப் பார்க்க நீ விரும்புகிறாயா?''





''மனிதர்கள் அழுவதற்கு ஒரு பிணம் தேவைதான். ஆனால் நாடே பிணமாகிவிட்டால் யார் அழுவது?''

''வேணாட்டடிகள் வழியை விடப் போகிறாரா இல்லையா?''

''சேர நாட்டு ஏந்தல் கிளியை விடப் போகிறாரா இல்லையா?''

''நடக்காது.''

''நடத்திக் காட்டுகிறேன்'' என்று சொன்ன மார்த்தாண்ட வர்மன் படைகளுக்கு ஜாடை காட்டினான்.

படைகள் சேரமானைச் சுற்றி வளைத்தன.

அங்கதன் முன் வந்து சேரமான் காலைத் தொட்டு வணங்கி, அவர் இடையில் இருந்த வாளை முதலில் எடுத்துக் கொண்டான்.

தடுத்தால், தாமே அங்கதனுடன் போரிட வேண்டியிருக்கும் என்பதால் சேரமான் தடுக்கவில்லை.

சேரமானின் மார்பில் இருந்த சலீமாவைப் பலவந்தமாக அவன் கீழே இறக்க முற்பட்ட போது, சேரமான் கூச்சலிட்டார். சலீமா 'ஓ' வெனக் கதறினாள்.

''கொண்டு செல்வதானால் என்னையும் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லுங்கள். சலீமாவை நான் தரமாட்டேன்'' என்றார் சேரமான்.

மார்த்தாண்டவர்மனுக்குப் புதிய யோசனை ஒன்று எழுந்தது.

''நல்லது. அப்படியே!'' என்றான்.

சேரமானும், சலீமாவும் இருந்த புரவி, படைகளுக்கு நடுவே நடத்தப்பட்டது.

அவர்களைச் சிறையில் அடைத்த போது, மார்த்தாண்டவர்மனின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது.

போர்க் கவசங்களைக் களைந்து எறிந்துவிட்டு மளமளவென்று அரண்மனைக்கு ஓடினான். சப்ர மஞ்சத்தில் விழுந்து அழுதான்.

அப்போது எங்கிருந்தோ ஒரு குரல் கம்பீரமாக எழுந்தது. அது 'பகவத் கீதை'யின் ஸாங்கிய யோகத்தைப் பளிச்சென்று உரைத்தது.

''போர் புரிய மனம் வராமல் திகைத்துத் தன்னைச் சரணடைந்த அர்ஜுனனை நோக்கிக் கண்ணன் கூறுகிறான்:

அர்ஜுனா! நீ வருந்துவது முற்றிலும் தவறு; எதிரியின் ஆன்மாவைப் பற்றி

வருந்துகிறாயா? அல்லது அவரது உடலைப் பற்றி வருந்துகிறாயா? இரண்டுமே தவறானவை. ஆன்மா என்றும் அழிவில்லாதது; அதைக் கத்தியால் வெட்டவும், தீயினால் எரிக்கவும் முடியாது. உடலோ இயற்கையில் அழியக் கூடியது; நீ அழிக்கா விட்டாலும் அது தானே அழிய வேண்டியதுதான். ஆன்மாவுக்கு ஓர் உடல் அழிந்ததும், இன்னோர் உடல் கிடைத்து விடும். அது இயற்கை. அதை எண்ணி உன் கடமைகளை நீ செய்தே தீரவேண்டும். கடமையைச் செய்யும்போது இது ஈசுவரனுடைய அருளுக்காகவே என்று எண்ணிச் செய்.

அர்ஜுனா! இந்தச் சிக்கலில் இத்தகைய மனச் சோர்வை நீ எங்கிருந்து பெற்றாய்? இது ஆரியருக்குத் தகாது; மோக்ஷத்தைத் தடுப்பது; அபகீர்த்தி தருவது.

தனஞ்சயா! பேடித்தன்மை யடையாதே. இழிவான மனத் தளர்ச்சியை நீக்கி எழுந்து நில்!''

—கண் கலங்கிக் கட்டிலில் கிடந்த மார்த்தாண்ட வர்மன், 'இந்த நேரத்தில் கீதை படிப்பது யார்' என்று எண்ணி எழுந்து திரும்பிப் பார்த்தான்.

அங்கே நாராயண நம்பூதிரி ருத்ராட்சத்தில் கை வைத்து நின்று கொண்டிருந்தார்.

''தம்பிரான் சுவாமி! தங்கள் பேச்சைக் கேட்டு நான் சேரமானைச் சிறை யிட வேண்டி வந்து விட்டதே!'' என்றான் மார்த்தாண்ட வர்மன்.

''பிரமனையே சிறையிட்டான் கந்தன். அவன் உன்னைப் போல் கலங்கவில்லையே!'' என்றார் நம்பூதிரி அமைதியாக.

''வேதாந்தம் பேச இது நல்ல சமயம்?'' என்றான் மார்த்தாண்ட வர்மன்.

''வேதாந்தத்தின் முடிவுதானே ஜனனமும், மரணமும். அதை யார் மீற முடிந்தது? அது போலவே இதுவும் அவனிட்ட கட்டளையே! மார்த்தாண்ட வர்மா! தர்மம், ரத்த பந்தத்துக்கு அப்பாற்பட்டது. ஒருவன் சைவனோ, வைணவனோ தன் சமயத்துக்காக அவன் தன்னையே இழக்கச் சித்தமாக இருக்க வேண்டும்.

''ராஜ வம்சமே அழிவதாயினும் வேற்றுச் சமயம் என்னை ஆதிக்கம் செலுத்த நான் இடம் தர மாட்டேன். கூடிப் பழகுதல் வேறு; கோட்டையை இழப்பது வேறு.

''சேரமான் — யூஜியானு காதல் விவகாரத்தில் நான் இவ்வளவு கண்டிப்பாக இருந்ததில்லை. ஆனால் இதில் கிடைப்பது புல்லானாலும் அதை எடுத்துக் கொண்டு போராடுவேன். இந்தப் பணியில் உன்னை மட்டும்தான் ஈடுபடுத்தியிருக்கிறேன் என்று கருதாதே. வேறு சிலரும் ஈடுபட்டிருக்கிறார்கள்'' என்று சொன்ன நாராயண நம்பூதிரி ருத்ராட்சத்தை ஓங்கித் தட்டினார்.

அப்போது எழுந்த சப்தம், அந்தச் சப்தமா, இல்லை, அந்தப்புரத்தில் மெல்லிளங்கோதையின் மடியில் விழுந்து பத்மாவதி விம்மும், விம்மல் ஒலியா?

அந்த ஒலி மார்த்தாண்ட வர்மனின் காதிலும் விழுந்தது.

அப்போது நாராயண நம்பூதிரிக்கு ஒரு செய்தி வந்தது:

''திருவஞ்சைக்களத்துக்கு யூஜியானு வந்துவிட்டான்'' என்பதே அது.

(தொடரும்)



தமிழ்க் கடலுக்கு வெண்கலச் சிலை

தமிழ்ப் பணியையும் சமயப் பணியையும் இரு கண்களாக்கிப் புகழ்ப் பணி புரிந்து புகழுடம்பு எய்திய தமிழ்க் கடல், சிவமணி ராய. சொ.வைத் தெரியாதவர்கள் தமிழ் கூறும் நல்லுலகில் இருக்க முடியாது. அவரது பணியைப் போற்றும் வகையிலே காரைக்குடி இந்து மதாபிமான சங்கம் அவருக்கு முழு உருவ வெண்கலச் சிலை வைப்பதென்றும், உயர்நிலைப் பள்ளிகளில் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தங்களைச் சிறார்களிடையே பரப்பப் போட்டி நடத்தி ஆண்டு தோறும் பரிசு வழங்குவதென்றும் தீர்மானித்துள்ளது. உருவச் சிலை வைக்கும் விழாவை ஒட்டி ராய. சொ. நினைவு மலர் ஒன்று வெளியிடுவது என்றும் முடிவாகியுள்ளது. இப்பணிகளுக்குக் குறைந்தபட்சம் ஐம்பதினாயிரம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இப்பணி விரைவில் சிறப்புற நிறைவேற உதவ விரும்புவோர், செயலாளர், தமிழ்க் கடல் ராய. சொ. நினைவுக் குழு, இந்து மதாபிமான சங்கம், சிவன்கோவில் மேல வீதி, காரைக்குடி 623 001 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.





Shrinks piles
Relieves pain
PREPARATION H
OINTMENT
PREPARATION H
30 கிராம் அல்லது லாபகரமான 50 கிராம் ட்யூபுகளில் கிடைக்கிறது.

பல் வைத்தியர்கள் கூறுகிறார்கள்—

தவறாமல் பற்களைத் துலக்குவதோடு, ஈறுகளையும் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற் சிதைவையும் தடுக்கலாம்.



போர்ஹென்ஸ் உபயோகிப்பவர்கள் தாங்களாகவே என்ன கூறுகிறார்கள், பாருங்கள்.

"என் ஈறுகள் வலுப்பெற்று ஆரோக்கியமடைந்து விட்டன"

"கடந்த மூன்று ஆண்டுகளாக, தங்கள் போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் உபயோகித்து வருவதன் மூலம் என் ஈறுகள் வலுப்பெற்று, ஆரோக்கியமடைந்துவிட்டன. முன்பு என் ஈறுகள் மிகவும் தொல்லை கொடுத்து வந்தன... இப்போது தங்கள் டூத்பேஸ்ட் மூலம் இந்த உபாதையிலிருந்து விடுதலை பெற்று விட்டேன்".

(கையொப்பம்) டி.என். தாஸ், ஷிகர்பூர்.

"என் மூச்சுக் காற்றும் ஈறுகளும் மீண்டும் நல்லபடியாயின"

"...ராஜ மகேந்திரத்திலுள்ள ஒரு பல் வைத்தியர்...பற்களும் ஈறுகளும் வலுப்பெற... போர்ஹென்ஸ் உபயோகிக்கச் சொன்னார், உடனே அப்படியே செய்தேன். சில நாட்களிலேயே என் மூச்சுக் காற்றும் ஈறுகளும் நல்லபடியாயின. அது முதல் போர்ஹென்ஸ் என் உயிர். இப்போது என் குடும்பத்தில் அனைவரும் (9 பேர்கள்) போர்ஹென்ஸ் உபயோகிக்கிறோம். இந்தப் பழக்கமும் நம்பிக்கையும் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருமென நம்புகிறேன்".

(கையொப்பம்) பீ.ஜே. லாஸர், சீராலா, ஆந்திரப் பிரதேசம்.

(இக் கடிதங்களின் புகைப்பட நகல்களை ஜெஃப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிமிடெடின் எந்த அலுவலகத்திலும் காணலாம்).

பற்களை தக்க முறையில் பராமரிக்க, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் கொண்டு உங்கள் பற்களை சுத்தம் செய்யவும், ஈறுகளைத் தேய்த்துக் கொடுக்கவும். கூடவே போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத் ப்ரஷ் உபயோகியுங்கள். ஏனெனில் இது பற்களை சுத்தம் செய்யும் போதே, ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்கும் வகையில் விசேஷமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இலவசம்! பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். தபால் செலவுக்காக, 25 பைசா தபால் தலையுடன் போர்ஹென்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, டிபார்ட்மெண்ட் நெ.T-133468L த.பை. எண் 11463, பம்பாய் 400 020 என்ற முகவரிக்கு எழுதுக.

எந்த மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.

PIN CODE FOR FAST MAIL

போர்ஹென்ஸ்

பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

168 F-203 Tam

தனிக் குடித்தனம்

''மெரீனா'' எழுதிய தனிக் குடித்தனம் நாடகம் இருநூறு முறை நடைபெற்று ரசிகப் பெருமக்களைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது. மாமனார் வீட்டோடு பழியாயிருந்து எல்லாரிடமும் குட்டுப்பட்டுக் கட்டிய மனைவியின் எதிரில் கைகட்டி நின்று, அவள் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசாமல் இருந்த அசட்டு மாப்பிள்ளையின் கடைசி நேர வீராவேசப் போராட்டம் ஒரே சிரிப்பும், குதூகலமுமாய் எல்லாரையும் கவர்ந்ததில் வியப்பில்லை.

ஒரு நாடகம் படமாகும்போது, பல ஃபார்முலாக்களின் சேர்க்கையுடன் ஒரு புது மாற்றமே பெற்று விடுகிறது: ஆனால் அந்த மாற்றம் மூலக் கதையைக் கெடுக்கவில்லையென்றால் பரவாயில்லை. இந்தப் படத்தில் சிதைக்கப்பட்டு விட்டதே!

நாடகத்தில் வரும் காமு தன் அசட்டுக் கணவனை அதிகாரம் செய்து ஆட்டிப் படைப்பவளாயிருந்தாள். அதனால்தான் கடைசியில் வரும் அசட்டு மாப்பிள்ளையின் வீராவேசக் காட்சி நன்றாக ரசிகர்களின் மனத்தில் பதிந்தது. ஆனால் படத்தில்...?

காமுவாக வரும் கே. ஆர். விஜயாவுக்கு வேஷப் பொருத்தம் மிகவும் பாந்தமாக இருக்கிறது. ''நாணு!'' என்று தம்பியை நீட்டி முழக்கிக் கொண்டு கூப்பிடுவது ஒன்று போதும். அவர் உருவம் கொஞ்சம் இளைத்திருக்கிறது: ஆனால் நடிப்பில் கொஞ்சமும் இளைப்பில்லை.

அசட்டு மாப்பிள்ளையாக வரும் 'சோ' தமக்கே உரிய திறமையுடன் அருமையாக நடித்திருக்கிறார். ஆனால் கடைசியில் வரும் வீராவேசக் காட்சியில் அவர் நடிப்புத் திறமை கைகொடுக்கவில்லை. மிக மிகச் செயற்கையாயிருக்கிறது. நாடகத்தில் நடித்த பூர்ணம் விசுவநாதனே படத்திலும் நடித்திருந்தால் சோபித்திருக்குமோ என்று தோன்றுகிறது.

குடும்பத் தலைவி பண்டரி பாயின் நடிப்பில் நெகிழ்ந்து போக முடிகிறது. அந்த நெகிழ்ச்சிக்கு நேர்மாறான கண்டிப்புக்கும் கருக்கும் மேஜர் சுந்தரராஜன் இருக்கிறார்.

நாணு தனிக் குடித்தனத்தின் தனி நாயகன். படத்தின் தலைப்பை விடாமல் காட்சிக்குக் காட்சி விடாமல் நினைவூட்டுபவன். அந்தப் பாத்திரத்தை ஒய். ஜி. மகேந்திரா ஏற்றுச் சக்கை போடு போட்டிருக்கிறார். தனிக் குடித்தனம் போவதற்குத் திட்டங்கள் தீட்டி மனைவியின் துணையோடு அவற்றைச் செயலாக்க முயன்று ஒவ்வொரு தடவையும் தோல்வி அடையும்போதும் அவர் வெளிப்படுத்திய ஏமாற்ற உணர்ச்சி ஒன்று போதும் நினைத்து மகிழ. நாணுவுக்கு உறுதுணையாக இருப்பவன் நண்பன் சோமு. காத்தாடி ராமமூர்த்தி அந்த நண்பன் பாத்திரத்தில் நகைச் சுவையை நிறைய வழங்குகிறார். அவர்களுக்குத் துணை வி. கே. ராமசாமி— அவர்தான் குடை நாயுடு: மிகவும் தமாஷான பாத்திரத்தை ஏற்றுக் கையொலி பெறுகிறார்.

முதலிரவுக் காட்சியைப் பற்றிச் சப்புக் கொட்டிப் பேசுவது போன்ற இன்னும் சில ரசக் குறைவான உரையாடல்களைக் கவனிக்கும்போது சென்ஸார் போர்டை ஏமாற்ற இப்படியொரு வழியா என்று வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

திரைக் கதை, வசனம்: 'வியட்நாம் வீடு' சுந்தரம். டைரக்ஷன்: எஸ். ஏ. கண்ணன்.

ரசிகப் பெருமக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்ற ''தனிக் குடித்தனம்'' நாடகம் வேறு; படம் வேறு!

— காந்தன்





டாக்டர் N. S. சிவா அவர்களின் புதல்வன் டாக்டர் S. சிவசங்கர சிவாவுக்கும் ஸ்ரீ T. V. S. மணியன் அவர்களின் புதல்வி டாக்டர் S. விந்திய கௌரிக்கும் 2-2-77 அன்று காரைக்குடியில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது:

வாழ்க மணமக்கள்!

புது முகங்களோடு பல புதுமைகளையும் புகுத்தும் டைரக்டர் கே. பாலசந்தர். ஒரு முகமாக அனைவரும் பாராட்ட வேண்டிய புதுமை, வசனங்களைக் கணிசமாகக் குறைத்திருப்பதுதான். அதுவும் கதாநாயகி அனுவை அவர் பேசவே அனுமதிக்கவில்லை. அவளையும் அவள் குழந்தையையும் பார்த்துவிட்டு ரயிலில் ஒரு பெண்மணி கேட்கும் கேள்விகளுக்கெல்லாம், மௌனமும், ஒரு சிரிப்பும்தான் பதிலாயிருக்கின்றன. ஆனால் அனுவின் உள்ளத்தில் பொங்கும் புயலை வார்த்தைகளால் எப்படி வர்ணிக்க முடியும்?

ரயிலின் 'டக் டக், டக் டக்' என்ற தாள கதியுடன் அனுவின் மௌனமும், விரக்தி கலந்த பார்வையும், பொருள் பொதிந்த புன்னகையும் சேர்ந்து 'சஸ்பென்ஸை' உருவாக்கி ஓர் எதிர்பார்ப்பு உணர்வை எழுப்புகின்றன.

அனு ஒரு பாவப்பட்ட பெண் ஜன்மம்; சந்தோஷமாக வாழ வேண்டிய வயதில் அவளுக்குத்தான் எத்தனை பிரச்னைகள், எத்தனை துன்பங்கள், எத்தனை எதிர்ப்புகள்!

கட்டிய கணவன், காத்திருக்கும் காதலன், கைம்மாறு கருதாது வலிய வந்து உதவி செய்யும் ஓர் உத்தம நண்பன், பெண்மைக்கு இழுக்குத் தேடும் பண்பு கெட்ட கயவன், தன் சொந்த மகனாலும் அவளை வெறுத்து ஒதுக்கும் தாய் — இவர்களுக்கு இடையில் வாழ வேண்டிய அனு தன் பிரச்னைகளுக்கு எப்படி விடை காண்கிறாள் என்பதுதான் திரைக் கதை.

வில்லன் இப்படத்துக்கு ஒரு புதுமை. பதுங்கிப் பாயும் சிறுத்தையின் உருவம்; நிதானமாகச் செயல்படும் ஆட்கொல்லி விஷம்; ரஜனிகாந்த் அருமையாக நடித்துப் பாத்திரப் படைப்புக்கு ஒளியூட்டியிருக்கிறார்.

கதாநாயகி சுஜாதா நடிப்புக்கு நாயகியாக விளங்குகிறார்.

ரவிகுமார் என்ற அறிமுக நடிகர், ஆள் நன்றாக இருக்கிறார்; ஆனால் இன்னும் நடிப்பில் மெருகேற வேண்டும்.

கமலஹாஸன் கேரளத்து நாயர் ஜானி, கைம்மாறு கருதாது பிறருக்கு உதவும் உத்தமன். — மிகவும் உருக்கமாக நடித்திருக்கிறார். அனு அந்தக் காரியாலயத்தில் வேலைக்குச் சேர்ந்ததிலிருந்து அவளிடம் பாசமும், பரிவும் கொண்டு பழகி, தன் உள்ளக் கிடக்கையை வெளியிட முடியாமல் தவிக்கும் கட்டங்களில் அவரது ஜூனியர் ஜானி — அதாவது ஒரு பொம்மை நன்கு கை கொடுக்கிறது. இவர் குரல் கொடுக்கப் பொம்மை பேசுகிறது. *Ventriloquism* என்ற தமாஷான முறையை நன்கு பயன்படுத்தியிருக்கிறார், டைரக்டர்.

அனுவின் மாமியார் ஒரு நல்ல பாத்திரம்— அந்தப் பாத்திரத்தை ஏற்ற லீலாவதி நன்றாய் நடித்திருக்கிறார்.

விவாகரத்து பெற்ற ஒரு பெண்ணுக்குத் தாலி அவசியம் இல்லைதான். ஆனால் அனு தாலியை நீக்கவில்லை. அது அவளது மறு விவாகத்துக்கு ஒரு பிரச்னையாக உருவெடுக்கிறது. அதை நீக்கியதும் அவளது மாஜி கணவனுக்குத் தெருவில் பையன்கள் விளையாடும் 'கிட்டிப் புள்' பொட்டில் தாக்கிக் காயப்படுத்துகிறது. விவாகரத்துக்குப் பிறகு திருமாங்கல்யத்தின் புனிதத்துவம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. நீண்ட நெடுங் காலமாகப் படிந்து விட்ட நம்பிக்கையைக் குலைக்க டைரக்டர் விரும்பவில்லை போலும்.

படத்தின் பல கட்டங்களில் பின்னணி இசையாக வீணையின் நாதமும், மிருதங்கத்தின் ஒலியும் கேட்கின்றன. அது கேட்பதற்கு மிகவும் இதமாயிருக்கிறது.

கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய மூன்று அம்சங்களுக்கும் கே. பாலசந்தர் பாராட்டுப் பெறுகிறார்.

—காந்தன்



சிலம்புச் செல்வம்!

குரவைக் கூத்து நிகழ்கின்றது. கன்னிப் பெண்களின் இசைக் குரல் எழுகின்றது. மாயவன், பின்னைப் பிராட்டி, பலராமன் என்னும் பாத்திரங்களைத் தாங்கிக் கன்னிப் பெண்கள் நடிக்கின்றனர். இது, பக்திக் கூத்து! தாமே திருமாலின் பக்தராக இருந்துகொண்டு சேர முனியாகிய இளங்கோ அடிகள், ஆய்ச்சியர் குரவைப் பாடல்களை அற்புதமாகப் பாடியுள்ளார். தமிழில் உள்ள இசைப் பாடல்களிலே ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் பெற்றுள்ள இடம் தனிச் சிறப்புக்குரியதாகும். சந்த வேறுபாடுகளுடன் அடிகள் அப்பாடல்களைப் பாடியுள்ளார்.

காக்கும் தெய்வமான திருமாலின் பிரதிநிதியாகத்தான் மன்னன் தன் குடி மக்களை ஆளுகிறான் என்பது இந்திய சமுதாயம் கண்ட அரசியல் சித்தாந்தம். இந்தச் சித்தாந்தத்தைச் சிலம்பிலேயும் சேர்த்து வைப்பவர் போல, தமிழ் மூவேந்தரையும் திருமாலோடு ஒப்பிட்டுப் பாடல்கள் புனைந்துள்ளார் இளங்கோ.

திருமாலுக்குப் பரத்துவம் கூறும் இடங்களிலே இறைவனை வழிபடும் முறையையும் கூற விரும்பி,

''செவகன் சீர் கேளாத செவி யென்ன செவியே? திருமால் சீர் கேளாத செவி யென்ன செவியே?'' என்கிறார் அடிகள். கேள்வியால் தோட்கப்படாத செவியைக் குறை கூறினார் வள்ளுவர். அவருடைய வாரிசான இளங்கோவடிகள், திருமால் சீர் கேளாத செவியைக் குறை கூறுகிறார். இன்னும், ''கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே; கண் இமைத்துக் காண்பார் தம் கண்ணென்ன கண்ணே!'' என்றும் சேர முனி கூறுகின்றார்.

ஐம்புலன்களும் ஒன்றுபட்ட நிலையில் மனத்துள் பக்தி பெருக்கெடுக்குமானால், கண்கள் இமையா நாட்டம் பெற்று விடும். இதயத்தில் பக்தி வற்றிவிடும்போதுதான் கண்கள் இமைக்கும். ''கரியவனை திருமாலைக் காணாத கண் என்ன கண்ணே'' என்று கூறியவர், காணுகின்றபோது கண்கள் இமைக்குமானால் அது பக்தியோடு கூடிய பார்வையாகாது என்பதனை உணர்த்த, ''கண் இமைத்துக் காண்பார் தம் கண்ணென்ன கண்ணே'' என்கிறார். மேலும், ''பஞ்சவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே! 'நாராயணா!' வென்னா நாவென்ன நாவே!'' என்று பாடுகிறார். மனிதன் நாவைப் படைத்தது, பண்டங்களை ருசிப்பதற்கன்று; பகவான் பெயரைச் சொல்லிச் சுவைப்பதற்காகத்தான் என்பது இளங்கோவின் சித்தாந்தம். எடுத்துக்கொண்டது திருமால் வழிபாடானதால், வைணவர் மரபுப்படி 'நாராயணா' என்று கூறியிருப்பினும், சிவனை வழிபடுவோருக்கும் இதுவே இலக்கணமாகும்.

மாதரியாள் குரவைக் கூத்துக்கு ஏற்பாடு செய்தது, தனது இல்லத்தில் தோன்றிய தீய சகுனங்களைக் கண்டு அஞ்சியதால்தானே? அந்த அச்சத்தினால், துன்பம் ஏதும் நேராதவாறு ஆயர் குலத்தைக் காக்கத் திருமாலை வேண்டத்தானே? அந்த வேண்டுதலோடு குரவைக் கூத்து முடிகின்றது. இதோ, குரவைக் கூத்தில் கலந்து கொண்ட ஆயர் குலப் பெண்களின் அபயக் குரல்:

''.....யாம்
கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம்நம்
ஆத்தலைப் பட்ட துயர் தீர்க்க! வேந்தர்
மருள, வைகல் வைகல் மாறட்டு,
வெற்றி விளைப்பது மன்னோ — கொற்றத்து
இடிப்படை வானவன் முடித்தலை உடைத்த
தொடித்தோள் தென்னவன் கடிப்பிகு
முரசே!''

ஆய்ச்சியர் நிகழ்த்திய குரவைக் கூத்து முடிந்ததும், நாடகக் காப்பியமான சிலப்பதிகாரத்திலே காட்சி மாறுகின்றது! இரும்பவும் துன்பியல் காட்சியைக் காட்டுகின்றார் நாடகாசிரியர். அதற்குத் 'துன்ப மாலை' என்றே பெயர் தருகின்றார். (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)



Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு



